அமரகலா விலாஸினீ மலர் 12.

ஸ்ரீ வேதவ்யாஸாய நம:

# ஸ்ரீ வாமந புராணம்.

ஸீதாராம தபோவன
வாசக சாலை.

ஆசிரியர்

ஸ்ரீ சங்கரோபதேச ரத்நம் முதலிய பல நூல்களை
இயற்றிய ஸாஹித்ய வாங்முக பூஷணம்
மஹா மஹோபதேசக

**ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா அவர்கள்**

**சாந்தாச்ரமம்**

154, தம்புசெட்டி வீதி,
சென்னை.

1932.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.] [விலை அணா. 6

PRINTED AT
THE CAMBRIDGE PRESS,
G. T. MADRAS.

## அவதாரிகை.

ஸ்திதிகர்த்தாவான ஸ்ரீபகவான் நாராயணன் வாமநராக வந்து அவச்யம் நேர்ந்தபோது த்ரி விக்ரமராகத் தோன்றிய சரிதத்தை விரிவாகக் கூறுவது வாமந புராணம். கதா நாயகரைப் போல் புராணமும் உருவில் சிறியதே. விஷயத்திலோ மிகப் பெரியதெனலாம். ஏனைய புராணங்களைப் போல் உலக ஸ்ருஷ்டி, வர்ணாச்ரம தர்மம், தீர்த்த மஹிமை முதலிய விஷயங்கள் விஸ்தாரமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. தேவர், ஸாத்யர், யக்ஷர், பித்ருக்கள் முதலிய தேவ ஜாதிக்குரிய தர்மங்கள் விசேஷமாக வர்ணிக்கப்படுகின்றன. சிவ விஷ்ணு பேதமின்றி கூறப்படும் இரு மூர்த்திகளைப்பற்றிய கதைகள் மிக ரஸமானவை.

ஜலோத்பவன் என்ற அஸுரனை வெல்ல பகவான் மற்றோர் வாமநாவதாரம் செய்த அபூர்வ கதையை இங்கு காணலாம். மிக விசித்ரமான மற்றும் பல கதைகள் ஆஸ்திகர் உள்ளத்தை அபஹரிக்கின்றன. தொண்ணூற்றைந்து அத்யாயங்களுள்ள இதையும் தமிழில் வெளியிடும்படி அடியேனைத் தூண்டிய பகவத் க்ருபை என்றும் என்பால் நிறைந்திருக்க ஈசனைப் போற்றுகிறேன். வாசகர்களுக்கும் அச்சிட்ட கம்பெனியாருக்கும் கருணாமூர்த்தியான பகவானது அருள் சுரக்கும்படி வேண்டும்.

பக்தாங்க்ரிரேணு,

ஸ்ரீவத்ஸ, வே. ஸோமதேவசர்மா.

உ

# விஷய ஸூசிகை.


| | விஷயம். | | பக்கம். |
|---|---|---|---|
| 1 | புராண வரலாறு | ... | 5 |
| 2 | தக்ஷ யக்ஞம் | ... | 7 |
| 3 | ப்ரஹ்லாத யுத்தம் | ... | 11 |
| 4 | அந்தகாஸுர சரிதம் | ... | 13 |
| 5 | தர்மம் | ... | 14 |
| 6 | ஆச்ரம தர்மம் | ... | 17 |
| 7 | மஹிஷாஸுராதி ஜநநம் | ... | 19 |
| 8 | குருக்ஷேத்ரம் | ... | 22 |
| 9 | வாமநாவதாரம் | ... | 25 |
| 10 | தீர்த்த மஹிமை | ... | 30 |
| 11 | அவகீர்ண தீர்த்தம் | ... | 31 |
| 12 | வஸிஷ்டோத்வாஹ தீர்த்தம் | ... | 32 |
| 13 | ஆத்ம நதீ | ... | 34 |
| 14 | லிங்க பூஜை | ... | ,, |
| 15 | ஸ்தாணு தீர்த்தம் | ... | 36 |
| 16 | பார்வதீ பரிணயம் | ... | 39 |
| 17 | விநாயகர் அவதாரம் | ... | 42 |
| 18 | சண்டமுண்ட வதம் | ... | 45 |
| 19 | குமார ஜநநம் | ... | 47 |
| 20 | ரிதத்வஜ சரிதம் | ... | 53 |
| 21 | முராஸுர வதம் | ... | 56 |
| 22 | புத்ரன் யார் ? சிஷ்யன் யார் ? | ... | 58 |
| 23 | த்வாதசதள பூஜை | ... | 61 |
| 24 | தண்டன் சரிதம் | ... | 64 |

| | | | பக்கம். |
|---|---|---|---|
| 25 | சித்ராங்கதை சரிதம் | ... | 66 |
| 26 | தேவவதி தமயந்தி சரிதம் | ... | 69 |
| 27 | ஜாபாலி சரிதம் | ... | 70 |
| 28 | வேதவதீ சரிதம் | ... | 72 |
| 29 | தேவாஸுர யுத்தம் | ... | 79 |
| 30 | சுக்ரரை சிவன் விழுங்கியது | ... | 80 |
| 31 | மாதலி சரிதம் | ... | 81 |
| 32 | ப்ரிங்கிரிடர் சரிதம் | ... | 83 |
| 33 | ஸப்த மருத்துகள் | ... | ,, |
| 34 | ஸ்வாயம்புவமந்வந்தர மருத்துகள் | ... | 84 |
| 35 | ஸ்வாரோசிஷ மருத்துகள் | ... | 85 |
| 36 | உத்தம மருத்துகள் | ... | 86 |
| 37 | காலநேமி வதம் | ... | 87 |
| 38 | துந்து பந்தநம் | ... | 89 |
| 39 | ச்ரவண த்வாதசீ | ... | 92 |
| 40 | நக்ஷத்ரபுருஷ பூஜை | ... | 95 |
| 41 | ஜலோத்பவ வதம் | ... | 96 |
| 42 | விஷ்ணு ஸுதர்சநம் பெறல் | ... | ,, |
| 43 | ஸ்ரீதாமன் சரிதம் | ... | 97 |
| 44 | துஸ்வப்ந நாசவழி | ... | 98 |
| 45 | விஷ்ணு ரக்ஷை | ... | ,, |
| 46 | பகவத் ஸாந்நித்யதேசம் | ... | 99 |
| 47 | கோசகாரபுத்ர சரிதம் | ... | 101 |
| 48 | த்ரிவிக்ரமாவதாரம் | ... | 106 |
| 49 | தாந மஹிமை | ... | 108 |

சுபமஸ்து.

நமோபகவதே வாமநாய

# ஸ்ரீ வாமந புராணம்.

விஷ்ணுபாணியாக வையகமெலாம் அலைந்து திரிந்து சிடுக்குகளை அறுத்து தர்ம நிர்ணயம் செய்து வரும் பாகவதோத்தமரான நாரதர், புலஸ்த்யரெனும் மஹர்ஷியை அடுத்துப் பல கேள்விகளைக் கேட்டார். பதினெண் புராணங்களில் பதினன்காவதான ஸ்ரீ வாமன புராணத்தின் ரஹஸ்யத்தை எனக்கெடுத்துரைக்க வேண்டும். பகவான் வாமனராகத் தோன்றிய வகையாது? பாகவதச்ரேஷ்டனுன ப்ரஹ்லாதன் தேவர்களுடன் போர் புரியக் காரணமென்ன? தக்ஷனது புதல்வியான ஸதி எக்காரணம் பற்றி தனது சரீரத்தை விட்டாள்? அவள் ஹிமவானது புதல்வியாகத் தோன்றியதேன்? தீர்த்தங்களது மஹிமையையும் தானங்களது பெருமையையும் வ்ரதங்களையும் கூறவேண்டுமென்ருர். நாரதரை நன்கு கவனிக்கும்படி கூறி, புலஸ்த்யர் கூறுகிருர்.

முன் ஒரு ஸமயம் தாக்ஷாயணி, மந்தாமலையின்மீது வீற்றிருக்கும் மஹேச்வரனைப் பார்த்து உக்ரதாபமுள்ள இக்கோடை காலத்தை எங்கிருந்து கழிப்பேன்? எனக்கோர் வீடில்லை! என் செய்வதென்ருள். புன்னகைகொண்ட பரமசிவன் பார்வதியை நோக்கி எனக்கோ யாதொரு ஆச்ரயமுமில்லை. வனத்தில் வஸிக்கும் யான் வீட்டிற்கு எங்கு செல்வேன்? என்ருர். பகவானது உள்ளத்தை அறிந்த உமாதேவி ஓர் மரத்தடியே தங்கிவஸித்தாள். உடனே வர்ஷாகாலம்

தோன்ற மழையும் குளிரும் தேவியை மரத்தடியே தங்க முடி யாமல் செய்தது. தேவி, நாத! இப்பொழுதேனும் யான் வஸிக்கத்தக்கதோர் கிருஹத்தை நிர்மாணம் செய்யலாகாதா? என்று வேண்டினுள். ஸர்வேச்வரன், யான் நித்ய தரித்ரன். மிருகத்தின் தோலேயே ஆடையாக அணிந்தவன். ஸர்ப்பங் களே எனக்கு ஆபரணம். யான் எப்படி வீட்டைக் கட்டு வது? என்ருர். தேவி, இக்குளிரைத் தாங்க முடியாமல் தவிக்கும் மாதைக் கண்டு தங்கள் மனம் இளகாதோ? என்ருள். பரமசிவன் தாக்ஷாயணியுடன் மேகமண்டலத்தி னுள்ளே வஸித்து வந்தார். சரத்ருதுவும் சென்றது. மேக மண்டலத்திலிருந்து மஹாதேவர் உமாதேவியுடன் மந் தர மலேக்குச் சென்ருர். தக்ஷன் தேவர்களை அழைத்து மந்த்ராலோசனை செய்து ஓர் வேள்வி செய்ய ஆரம்பித்தான். ஸகல தேவர்களையும் மனைவியுடன் ஆங்கு வரும்படி அழைத் தான். அஹிம்ஸையெனும் மனைவியுடன் கூடிய தர்மதேவனை யாகசாலையின் துவாரபாலகனுக அமர்த்தினன். அரிஷ்ட நேமியை ஸமித்து முதலியதைக்கொண்டுவர ஏவினன். சந் திரையுடன் கூடிய ஆங்கிரஸரைப் பாகசாலையிலும் ப்ருகுவை யாகசாலையிலும் ரோஹிணியுடன் கூடிய சந்திரனைப் பொக் கிஷத்திலும் தங்கி ஆங்குள்ள வேலையைக் கவனிக்கும்படி அமர்த்தினன். கையில் கபாலமும் சூலமும் ஏந்திய கைலாஸ நாதனை அசுத்தமானவன் எனக் கருதி வேள்விக்கு அவரை அழைக்காது விட்டான்.

நாரதர், பரமசிவனது கரத்தில் கபாலமிருக்கக் காரணம் யாதென்று வினவ, புலஸ்தியர் கூறினர். ஒரு ஸமயம் உல கெலாம் பரமனிடம் ஒடுங்கி ஆயிரமாண்டு பரமனது நித்ரை யால் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. பிறகு ரஜோகுணத் தினல் ஐந்து முகத்துடன்கூடிய ப்ரம்மன் தோன்றினன். தமோகுணம் நிரைந்த முக்கண்ணனும் அவனெதிரில் உதித்

தான். பரமன் அஹங்காரத்தைப் படைக்க அதனால் கர்வங் கொண்ட ப்ரம்மனும் சிவனும் நான் சிறந்தவன் நான் உயர்ந்தவன் எனக்கலகம் செய்தனர். பரமசிவன் தோல்வியடைந்து வெட்கத்தினால் தலை குனிந்து வாய்திறவாமல் நின்றார். பிரம்மனது ஐந்தாம்முகம் சிவனைப் பார்த்து உடுக்க உடையின்றி உண்ண வகையின்றி காளைமீது எரித்திரியும் நீயோ எனக்கு ஈடு? என்று அவரைப் பரிஹஸித்தது. இதைக் கேட்டதும் ஒன்றாக இருந்த பரமசிவனது முகம் ஐந்தாக ஆனது. கோபம்கொண்ட பரமசிவன் பிரம்மனது ஐந்தாம் சிரத்தைக் கூரிய தன் நகத்தினால் அறுத்தார். ப்ரம்மனது கோபத்தினால் ஆயுதம் தாங்கிய ஓர் புருஷன் தோன்றி சிவனை நிந்தித்தான். பரமசிவன் விரைவாக பதரிகாச்ரமம் சென்று தர்மரது புதல்வரான நாராயணரை அடுத்துக் கபாலத்தைக்காட்டி பிக்ஷை கேட்டார். அவர் தனது வலது கையை நீட்டி இதைச் சூலத்தினால் அடித்து வேண்டியதைப் பெற்றுக் கொள் என்றார். சூலத்தினது நுனிபட்ட இடங்களிலிருந்து மூன்று வகையாக இரக்ததாரை ஓடியது. ஒன்று நக்ஷத்ர மண்டலம் சென்றது; இரண்டாவது தூர்வாஸராகத்தோன்றி அத்ரிரிஷியை அடைந்தது. மூன்றாவது ஓர் வீரக்குழந்தையாகத் தோன்றியது. அதைப் பார்த்து ஹரன் என்னை நிந்தித்த ப்ரம்ம புதல்வனை நீ கொல்வாய்! என உத்தரவிட்டார். இவனும், பிரம்ம புதல்வனுமே வாலி ஸுக்ரீவர்களாகவும் கர்ணார்ஜுனர்களாகவும் தோன்றினர்.

## தக்ஷயஜ்ஞம்.

பரமசிவன் பிரும்மாவினுடைய ஐந்தாம் தலையை அறுத்ததால் பயங்கரமான பெண்ணுருவம் தாங்கிய ப்ரம்மஹத்தி அவரை வந்தடைந்தது. ஆதலால் நர நாராயணர்களைக் கண்டு இதை அகற்றலாமென்றெண்ணி பரமசிவன் பதரிகா

சிரமம் சென்றார். அவர்கள் இவரது கண்ணில் படவில்லை. யமுனையில் புனலாடி பாபமகற்றுவோமென்று ஹரன் அங்கு செல்ல யமுனையின் ஜலம் உலர்ந்தது. புஷ்கரம் மாகதம் ஸைந்தவம், நிமிஷம் என்ற புண்யாரண்யங்களுக்குச் சென்றார். அங்கும் பாபமகலவில்லை. குருஜாங்கல மெனும் க்ஷேத்ரம் சென்று மஹாவிஷ்ணுவைத் துதித்தார். அவர் பிரயாகை வரணா என்று இருநதிகளுக்கிடையிலுள்ள காசீ க்ஷேத்ரம் செல் என்றார். சிவனுமங்குசென்று கங்காஸ்நாநம் செய்தார். உடனே ஹத்தி தோஷம் அகன்றது. கையிலுள்ள கபாலம் மட்டிலுமகலாதது கண்டு விஷ்ணுவைத் துதித்து, ஏன் இது அகலவில்லை என்று கேட்டார். எதிரிலுள்ள இத்தீர்த்தத்தில் ஸ்நாநம் செய் என்று விஷ்ணுகூற பரமசிவன் அங்ஙனமே செய்தார். உடனே கையைவிட்டு கபாலம் அகன்றது. ஆதலின் கபாலமோசனி என அதற்குப் பெயர் உண்டாயிற்று.

ஜயை எனும் கன்யகை தாக்ஷாயணி இருப்பிடம் வந்தாள். விஜயையின்றி நீமாத்ரம் இங்கு வரக்காரணம் யாதென தேவி வினவினள். அன்னையே! நீ அறியாயோ? உமது தந்தை ஓர் உத்தம வேள்வி செய்கிறார்! உலகத்திலுள்ள அனைவரும், அன்புடன் அழைக்கப்பட்டு ஆங்கு செல்ல தங்களைத் தக்ஷர் அழைக்கவில்லையா? அழைத்துத் தான் தாங்கள் அங்கு செல்லவில்லையா? விஜயையும் ஏனையோரும் அங்கே சென்றிருக்கின்றனர் என்று கூறினள். இதைக் கேட்ட தேவி ஒன்றும் தோன்றாது திகைத்துத் திடுக்கிட்டுத் திடீரெனக் கீழே விழுந்து இறந்தாள்.

இதைக்கண்ட ஜயை தேவியின் மரணத்திற்கு யானே காரணமானேன் என்று உரத்த குரலில் கதறியழுதாள். ஆங்குவந்து பரமசிவன் விஷயத்தை அறிந்து தக்ஷனிடம் கடுங்கோபங்கொண்டார். அவரது மயிர்க்கால்களிலிருந்து

எண்ணிறந்த ஸிம்மமுகம்கொண்ட வீரர்கள் தோன்றினர்கள். ஜயை கதையை ஏந்திவர, வீரபத்ரனும் பத்ரகாளியும் இரு புறமும் நிற்க ருத்ரமூர்த்தி இடையிலே நின்று போர்க்கோலத்துடன் தக்ஷனது யாகசாலைக்கு வந்தார். வாயிற்படியில் நின்று காவல் காக்கும் தர்மனை அடித்துக் கீழே தள்ளி யாகசாலையின் உள்ளே நுழைந்தார். இவரது ரௌத்ராகாரத்தைக் கண்டு முனிவர் ஓட்டமெடுத்தனர். தேவர்கள் ஆயுதம் தாங்கி வீரனுடன் போர்புரிந்தனர். வீரனது வீர்யத்தை ஸஹியாமல் விண்ணவர் மூலைக்கொருவராக பயந்து பலாயனம் செய்தனர். விஷ்ணு தனது ஸுதர்சனமெனும் சக்ராயுதத்தை ப்ரயோகிக்க அது வீரனைக் கட்டிப்பிடித்து மஹாவிஷ்ணுவின் எதிரில்கொண்டு நிறுத்தியது. அவர் பரமசிவனது கிங்கரனென உணர்ந்து வீரனை விடுவித்து கொல்லாது விட்டார். வீரன் விரூபாக்ஷனிடம் சென்று தனக்குத்தோன்றிய தோல்வியைக்கூறி வெட்கித்து நின்றான். உடனே பரமசிவன் ஆக்ரஹத்துடன் தானே யாகசாலைக்குச் சென்றார்.

இவரைக் கண்டவுடன் மஹாவிஷ்ணு ஓர் மாமரத்தில் பதுங்கினர். அஷ்டவஸுக்களும் நதியாகமாறினர். கச்யபர் முதலிய முனிவர்கள் சதருத்ரீயத்தால் பகவானைப் போற்றினர். பூஷா என்பவன் பரமனைப் பார்த்துப் பல்லைக்காட்டி பரிஹாஸம் செய்து போருக்கழைத்தான். பூதநாதன் பூஷாவின் பற்களனைத்தையும் உதிரும்படி அவன் கன்னத்தில் குத்தினர். அவரை எதிர்த்து நின்ற எல்லோரும் யமனுக்கு இரையாயினர். முக்கண்களாலும் மூன்று அக்நிகளையும் தஹித்தார். யக்ஞம் மான் உருவங்கொண்டு பயந்து ஓடிற்று. பகவான் யாகசாலையில் ஓர் சரீரத்தை வைத்து மற்றொருடலைக்கொண்டு மானைப் பின்தொடர்ந்தார். காலஸ்வரூபியான பரமசிவனை வணங்கித் துதித்து தக்ஷன் தனது யாகத்தைப் பூர்த்தி செய்தான். தாக்ஷாயணி தனது சரீரத்தை விட்ட

பின் பரமசிவன் தனித்திருந்தார். இதே தக்க ஸமயம் என்று எண்ணி காமன் அவர்பால் உந்மாதமெனும் அம்பைத் தொடுத்தான். பித்தனைப்போல் பரமசிவன் மனைவியை நினைத்து அங்குமிங்குமலைந்து திரிந்தார். மறுபடியும் மன்மதன் ஸந்தாபினீ என்ற சரத்தை அவர்மேல்விடுத்தான். மிகமிகத் துயருற்ற மகாதேவன் தற்செயலாக எதிரில் வந்த குபேரனது புதல்வனான பாஞ்சாலனைக் கண்டார். இந்நிலையிலுள்ள சங்கரனைப் பார்த்து அவன் ப்ரமித்து நிற்க அவர் பாஞ்சால! எனது தாபத்தை நீ ஏற்றுக்கொள் என்றார். மறுமொழிகூறாது பாஞ்சாலனதை ஏற்க, மட்டில்லாமகிழ்ச்சி கொண்ட மஹேசன், காலஞ்சர க்ஷேத்ரத்திற்கருகே பாஞ்சாலேசன் எனப் பெயர்பெற்று நீ விளங்குவாய்! உன்னைப் பூஜிப்பவரது இஷ்டம் பூர்த்தியாகும் என அவனை ஆசீர்வதித்துச் சென்றார்.

மறுபடியும் மன்மதன் மலர் வடிவான அம்பைக்கையிலேந்தி கைலாஸநாதனைப் பின் தொடர்ந்தான். அவர் தாருவனம் சென்றார். மஹர்ஷிகள் அவரை வணங்கி வரவேற்றனர். அவர் பிக்ஷை கேட்கும்போது முநிவர் மௌநியாயிருந்தனர். அருந்ததியைத் தவிர ஆங்குள்ள முநி பத்னிகள் அனைவரும் அம்பிகாபதியினது அழகைக் கண்டு அவரைப் பின் தொடர்ந்தனர். தபோதநரனைவரும் சினங்கொண்டு சிவனது லிங்கம் கீழே விழுமாறு சபித்தனர். அது விழுந்த அதிர்ச்சியால் பதினலு லோகமும் நடுநடுங்கிற்று. உடனே விஷ்ணுவும் பிரும்மாவும் ஆங்குவந்து பகவத்ஸ்வரூபத்தின் அடிமுடிகளைக் காண கீழும் மேலும் சென்றனர். பலநாள் தேடியும் அதைக்காணது திரும்பிவந்து இருவரும் பரமனைத் துதித்தனர். ப்ரத்யக்ஷமாகத் தோன்றி பகவான் ப்ரஹ்மாதி தேவர்களுக்கு லிங்க பூஜையை உபதேசித்து ஆசீர்வதித்து மறைந்தார். பிறகு பிரும்மா, சைவம், பாசு-

பதம், காலதாமகம், கபாலிகம் என்ற நான்கு சிவபூஜா சாஸ்திரங்களை இயற்றினர். சிவனது அவதாரமான சக்தி முனிக்குக் கோபாயநர் பரத்வாஜர் என இரு சிஷ்யரிருந்தனர். பரத்வாஜரது சிஷ்யன் ஸோமகேச்வரன் என்ற அரசன், ஆபஸ்தம்பரது சிஷ்யனை க்ரோதேச்வரன் என்றவைச்யன், அர்ஜுனதான் என்ற சூதரன் ஆகிய இவர்கள் சைவ பூஜையின் ஸம்ப்ரதாயத்தை உலகில் ஆரம்பித்தார்கள். மூன்றும் முறை முக்கண்ணனை அடிக்கக் காமன் காத்திருக்க, ருத்ர மூர்த்தியினது மூன்றும் கண்ணுல் அவன் பற்றி எரிந்தான். அவனது அங்கங்கள் அழகிய மரமாயின.

## ப்ரஹ்லாத யுத்தம்.

ஒரு ஸமயம் ச்யவநமுநி நர்மதா நதியில் ஸ்நாநம் செய்ய இறங்கினர். ஓர் நாகம் விளையாட்டாக அவரைக் கடித்து நாகலோகத்திற்கிழுத்துச் சென்றது. உடனே அவர் ஹரியை நினைக்க விஷமகன்றது. இதை அறிந்து அங்கு ஆட்சி புரியும் ப்ரஹ்லாதன் பகவானுக்கு ப்ரியமான ப்ராமணனைப் பூஜிக்க வேண்டுமென்றெண்ணி அவரருகே வந்தான். அவரைத் தக்கபடி அர்க்யபாத்யாதிகளால் அர்ச்சித்து தர்மோபதேசம் செய்யும்படி வேண்டினன். ச்யவநர் தீர்த்தங்களின் பெருமையை விளக்கித் தீர்த்தயாத்ரையின் மஹிமையையும் எடுத்துரைத்தார். ப்ரஹ்லாதன் பூலோகஞ் சென்று நைமிசாரண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யக் கிளம்பினன். ஆங்கு அஸ்த்ரங்களைக் கையிலேந்தி ஜடாமகுடதாரிகளாய்த் தவம் புரியும் நரநாராயணர்களைப் பார்த்தான். உடனே அவன் வேஷதாரிகளான நீங்கள் கையில் வில்லேந்திய காரணமென்ன? சக்தியிருந்தால் சண்டைக்கு வாருங்கள் என்றழைத்தான். நரரும் ப்ரஹ்லாதனும் மிக பயங்கரமாக யுத்தம் செய்தனர். பல வில்கள் முறிந்தன. திவ்யாஸ்திரங்களெல்லாம் பயனற்றுப்போயின. பாணவர்ஷத்தால் சந்த்ர ஸூர்யரது ஒளி

உலகில் உலவாதொழிந்தது. எண்ணிறந்த ஆயுதங்கள் தூள் தூளாக்கப்பட்டன. ஜய அபஜயம் எவருக்குமில்லை. யுத்தப்ரியர்களான தேவர்கள் விமானத்தின்மீதேறி வானத்தில் வட்டமிட்டனர். திவ்யாஸ்திரங்களின் ஜ்வாலை கொழுந்துவிட்டுக் கிளம்பும்போது ஹா! ஹா! என்ற சப்தமும் எழுந்தது. நாராயணரையும் ப்ரஹ்லாதன் போருக் கழைக்க அவரும் இங்ஙனமே யுத்தம் செய்தார். திவ்ய வருஷத்தில் ஆயிரமாண்டுகள் சென்றன. நாராயணரது பாணத்தால் அஸுரராஜன் அடிபட்டு ப்ரக்ஞையற்றுத் தேரில்விழுந்தான். அவன் ஸாரதி, ரதத்தை அப்புறப்படுத்தி அஸுரனை ஆச்வாஸப்படுத்தினன். களை தீர்ந்ததும் கனல்போலெழுந்து ப்ரஹ்லாதன் எதிரியைச் சமருக் கழைத்தான். நாராயணர் அவனைப் பார்த்து மாலைக்கடனை முடித்துக் காலையில்வா! என்றார். அங்ஙனமே அநுஷ்டானத்தை முடித்து அரக்கன் இரவெலாம் பகவானை நினைத்து எனக்கு ஏன் இன்னும் ஜயம் உண்டாகவில்லை என்று வருந்தினன். பகவான் ப்ரத்யக்ஷமாக வந்து நரநாராயணர்கள் தர்மத்தின் அம்சமாதலால் அவர்களை ஜயிக்க எவராலும் முடியாது! வேண்டுமானல் பக்தியினல் அவர்களை ஜயி என்றுரைத்து மறைந்தார். உடனே பாதாளஞ்சென்று அந்தகனெனும் தனது ஸஹோதரனிடம் ராஜ்யபாரத்தை அளித்தான். பதரிகாச்ரமம் சென்று ப்ரஹ்லாதன் நரநாராயணர்களைத் துதித்தான். அவர்கள் அவனை திரிற்குன்றி ஆசீர்வதித்து விஷ்ணு பக்தி ப்ராஹ்மண பக்தி முதலிய வரங்களைத் தந்தனர். பாதாலஞ் சென்று தைத்யர்களுக்குப் பகவத் பக்தியை உபதேசிக்கும்படி கூறினர். அங்ஙனமே ப்ரஹ்லாதன் பாதாளம் செல்ல அந்தகன் ராஜ்யத்தை அவரிடம் திருப்பிக்கொடுத்தான். அதை அவர் ஏற்காது ஆங்கோர் ஆச்ரமம் அமைத்து அதிலிருந்து அஸுரர்களுக்குப் பகவத் பக்தியைப் புகட்டி வந்தார்.

## அந்தகன்.

ஹிரண்யாக்ஷன் புதல்வனான அந்தகன் கண்ணில்லாவிடினும் ஸஹோதரனளித்த ராஜ்யத்தை நன்கு பரிபாலித்து வந்தான். பல்லாண்டு பரமசிவனை நாடித் தவம் புரிந்து பல அரிய வரங்களைப் பெற்றான். முன்னவர்களைப்போல் சுக்ரரைப் புரோஹிதராகக் கொண்டு திக்விஜயம் செய்யக் கிளம்பினான். இதைக்கேட்டு இந்த்ரனும் தனது ஸேனையைப் போருக்கு ஸந்நத்தமாக்கினான். தநுவினது கையிலிருந்து பிறந்த வெள்ளையானை மீது வாஸவன் ஏறினான். ருத்ரனது தேஜஸால் ஜநித்த பௌண்ட்ரக மெனும் மஹிஷத்தின் மீது யமனும், ருத்ரனது கர்ணமலத்தாலுண்டான கடலெனும் பெயர்கொண்ட சிம்சுமாரத்தின்மீது வருணனும், அம்பிகையின் பாதகமலத்திலிருந்து பிறந்த நரோத்தமத்தின் மீதேறி குபேரனும் ரணகளம் சென்றனர்.

தேவஸேனையும் அஸுர ஸேனையும் ஒன்றுகூடி உலகெலாம் நடுங்கும்படி கடும்போர் செய்தது. யுத்தாங்கத்திலிருந்து ரக்தம் ஆறாகப் பெருகிற்று. பிணங்கள் மலை மலையாகக் குவிந்தன. கழுகுகள் வட்டமிட்டு துண்டு துண்டான மாம்ஸங்களைக் கொத்திச் சென்றன. நரிகளும் ஓநாய்களும் மாம்ஸத்தில் ஆசைகொண்டு நடமாடின. ஆயிரங் குதிரை பூட்டிய ரதத்தின் மீதேறி அந்தகன் அமரர் படை அனைத்தையுமழித்தான். அஷ்டதிக்பாலர்களையும் மூர்ச்சையாகி விழும்படி அடித்தான். இவ்வந்தகனைச் சார்ந்த ஸுகேசி என்பான் அவனது வாஹனமான பட்டணத்துடன் ஸூர்யனால் அடிக்கப்பட்டு கீழே விழுந்தான். முடிவில் அந்தகன் தேவரை முறியடித்து வெற்றி பெற்று மூவுலகையும் தனதாளுகைக்குள்ளாக்கினான்.

## தர்மம்.

வித்யுத்கேசியின் புதல்வனான ஸுகேசி எனுமரக்கன் பரமசிவனைப் பல்லாண்டு பூஜித்து எங்கும் ஸஞ்சரிக்கத்தக்க நகரையே வாஹநமாகப் பெற்றான். ஓர் ஸமயம் ஸுகேசி மாகத வநஞ்சென்று மஹர்ஷிகளை வணங்கி தர்ம தத்துவத்தைக் கூறும்படி வேண்டினான். அவர்கள் தேவர் முதல் மனிதர் வரையிலுள்ள ஸகல ஜீவர்களுக்கு முரிய தர்மங்களை விரிவாக விளக்கினர். யக்ஞம், வேதார்த்த விசாரம், விஷ்ணு பூஜை ஆகியஇவை தேவதர்மம். பலம், பொறுமை, சண்டை, நீதி அறிதல், சிவபக்தி இவை தைத்ய தர்மம். யோகஸித்தி, வேதம், பிரும்மக்ஞானம், விஷ்ணு பக்தி இவை ஸித்த தர்மம். உபாஸநம், ந்ருத்யவாத்யம், ஸரஸ்வதீ பக்தி இவை கந்தர்வ தர்மம். வித்யை, பௌருஷம், பவானீ பக்தி இவை வித்யாதர தர்மம். பிரும்மசர்யம், அடக்கம், யோகாப்யாஸம், எங்கும் ஸஞ்சரித்தல் இவை பித்ரு தர்மம். ஸத்யம், ஜபம், க்ஞாநம், நியமம், தர்மமறிதல் இவை ரிஷி தர்மம். வேதம், தாநம், யாகம், கார்ப்பண்யமில்லாமை, அநாயாஸம், தயை, அஹிம்ஸை, க்ஷமை, இந்திரிய ஜயம், சௌசம், விஷ்ணு சங்கரன் ஸூர்யன் அம்பிகை இவர்களிடம் பக்தி இவை மநுஷ்ய தர்மம். தநாதிபத்யம், போகம், வேதம், சிவபக்தி, அஹங்காரம் இவை குஹ்ய தர்மம். பரதார பாத்ரவ்யத்திலாசை, வேதம், சிவபக்தி இவை ராக்ஷஸ தர்மம். அவிவேகம், பொய், அநாசாரம், மாம்ஸத்திலாசை இவை பிசாச தர்மம். இங்ஙனம் பன்னிருவர்களுக்கும் பிரும்மனால் தர்மங்கள் விதிக்கப்பட்டன.

கர்மவிபாகம். ஐம்பது கோடி யோஜனை தூரம் விசாலமாய் ஓர் தோணிபோல் ஜலத்தின்மீது மிதக்கும் இப்பூமியில் ஜம்பூத்வீபம், ப்லக்ஷம், சால்மலீ, குசம், க்ரௌஞ்சம், சாகம்,

புஷ்கரம் என ஏழு த்வீபங்களமைந்துள. ப்லக்ஷம் முதல் சாகம் வரையிலுள்ள த்வீபங்களில் வஸிப்பவருக்குத் தேவ தர்மமே உரியது. புஷ்கரத்வீபத்தில் ரௌரவம், மஹாரௌ ரவம், தாமிஸ்ரம், அந்ததாமிஸ்ரம், காலஸூத்ரம், அப்ர திஷ்டம், கடயந்த்ரம், அஸிபத்ரவநம், தப்தகும்பம், கூட சால்மலி, கரபத்ரம், ச்வாநபோஜநம், ஸந்தம்சம், லோஹபிண் டம், காம்பஸிகதம், க்ஷாரநதி, க்ரிமிபோஜநா, வைதரணீ, க்ஷாராக்ரதாரம், சக்ரகம், ஸம்சோஷணம் என்ற இருபத் தோரு நரகங்களிருக்கின்றன.

தேவர், த்விஜர், வேதம், புராணம், குரு முதலியவர்களை நிந்தித்து யாகத்தைக் கெடுப்பவர், தாநம் செய்வோரை வேண்டாமென்று தடுப்பவர், ஸ்நேஹிதர் தம்பதி முதலியவர் களைக் கலைத்துச் சேரவிடாமல் செய்பவர், கன்யகையை ஒரு வருக்குக் தாநம் கொடுத்து மறுபடி மற்றொருவருக்கு அளிப்பவர், முதலிய இவர்கள் கத்தியால் இரண்டாகப் பிளக்கப்படுவர். பிறருக்குத் தாபத்தை அளிப்பவன், சந் தநம் சாமரம் முதலியவைகளைத் திருடுபவன், காம்பஸிக தாநரகம் செல்வர். தேவபித்ரு கார்யத்திற்காக புஜிக்கும்படி அழைக்கப்பட்டவர் தநலோபத்தால் வேறிடம் சென்றால் கழுகுகளால் இரண்டாகக் கிழிக்கப்படுவர். க்ரூரவாக்கால் ஸாதுக்களைத் துன்புறுத்துபவனது நாக்கைக் கழுகு பிளக் கும். தேவர் அதிதி பெற்றோர், சிறுவர் கர்ப்பிணி முதலிய வர்கள் உண்ணுதபோதுதான் மாத்திரம் புஜிப்பவன் மலமூத் ரங்களை உண்டு புழுவாய்ப் பிறப்பான். பங்தியில் வஞ்சனை செய்வோர் மலத்தைப் புஜிப்பர். எச்சிலோடு கோப்ராஹ் மணுக்நிகளைத் தொடுபவரது கை தப்தகும்பத்தில் காய்ச்சப் படும். எச்சிலோடு சந்தர ஸூர்ய நக்ஷத்ரங்களைப் பார்ப் பவரது கண் ஒளி பிடுங்கப்படும். பெரியோரைக் காலால் மிதிப்பவரது கால் கட்டப்பட்டு நரகத்தில் தள்ளப் படுவர்.

பாயஸம் பக்ஷ்யம் முதலியவைகளைப் பகவந் நிவேதநமில்லாமல் தனக்காகச் செய்து புஜிப்போரது வாயில் உருக்கிய இரும்பு விடப்படும். தண்ணீர்ப்பந்தல் மடம் தேவாலயம் உத்யாநம் தடாகம் முதலியவைகளை அழிப்பவரது தோல் கத்திரியால் கத்திரிக்கப்படும். கோ ப்ராம்மண ஸூர்ய, அக்நிகளுக்கு எதிராக மல ஜலம் விடுவோரது ஆஸநத்வாரத்தைக் காக்கை கொத்தும். பஞ்சகாலத்தில் கூட பந்து பரிவாரங்களைக்காக் காது தன்னைமாத்திரம் ரக்ஷித்துக்கொள்பவன் நாயாகப் பிறப்பான். சரணாகதனைக் கைவிட்டவர், யந்திர பீடத்தில் தள்ளப்படுவர். புரோஹிதரைத் துன்புறுத்தியவர் கற்பாறை யில் அடிக்கப்படுவர். கொடுத்தபொருளை இல்லை என்போர் தேள் குழியில் விழுவர். ச்ராத்ததினத்தில் மறுமுறை புஜிக் கும்கர்த்தாவும் போக்தாவும் ஒருவரை யொருவர் அடித்துத் தின்பர். வேதம் அக்நி குரு இவர்களை த்யாகம் செய்தவர் மலையிலிருந்து கீழேதள்ளப்படுவர். சண்டாளனிடம் தாநம் வாங்குபவர் கற்றேரையாக ஜநிப்பர். ப்ரம்மஹத்தி ஸுராபா நம் ஸ்வர்ண ஸ்தேயம் குருமனைவி ஸங்கம் இந்நால்வருடன் சேருதல் என்ற பஞ்சமஹாபாபம் செய்தோரும் கோ பூமி களை அபஹரித்தவரும், கோ, வேத, ஸோம, விக்ரயம் செய் பவரும் நன்றி மறந்தவரும் பத்தாயிரமாண்டு தாமிஸ்ர நரகத்தை அனுபவிப்பர். அதே போல் அந்ததாமிஸ்ரம் அஸிபத்ரவநம் கடயந்த்ரம் தப்தகும்பம் என்ற இவை ஒவ்வொன்றிலும் பத்தாயிரமாண்டு வஸிப்பர்.

தேவரில் விஷ்ணுவும் நதிகளில் கங்கையும் க்ஷேத்ரத்தில் குருஜாங்கலமும் லோகங்களில் பிரும்மலோகமும் சாஸ்த்ரங் களில் வேதமும் ரிஷிகளில் அகஸ்த்யரும், புராணங்களில் மாத்ஸ்யமும் ஸ்மிருதியில் மநுவும், நாற்கால் பிராணிகளில் கோவும் புஷ்பங்களில் ஜாதியும் நகரங்களில் காஞ்சியும் வியாதிகளில் அஜீர்ணமும் ரஸத்தில் உப்பும் பதிவ்ரதைகளில்

பார்வதியும் நரகத்தில் வைதரணியும் சிறந்ததுபோல் பாபத்தில் நன்றிகொன்ற பாபம் சிறந்த பாபமாகும்.

ஆச்ரமதர்மம். ஜம்பூத்வீபத்திலுள்ள கிரி நதீ பட்டணம் ஆங்கு வஸிப்பவர் முதலியவைகளை விளக்கி நான்கு ஆச்ரம தர்மங்களையும் முநிவர் நன்கு ராக்ஷஸனுக்கு உபதேசிக்கின்றனர். பிரும்மசாரி குருவிற்குக் காட்டாமல் எதையும் புஜிக்கலாகாது. குரு கூப்பிட்ட பிறகே வித்யை கற்கச் செல்லவேண்டும். குருவிற்கு விருப்பான தக்ஷிணையை அளித்து, பரிபாகத்திற்கேற்றபடி கார்ஹஸ்த்யம் வாநப்ரஸ்தம் ஸந்யாஸம் இதில் எதையேனும் ஏற்கலாம். ஆசாரமில்லாமல் செய்யும் கர்மங்கள் வீணாகும். ஆசார விருக்ஷத்திற்கு தர்மம் வேர், தனமே கிளை, காமமே புஷ்பம், மோக்ஷமே பழமாகும். காலை எழுந்து ஸுப்ரபாத ஸ்தோத்ரம் சொல்லி வீட்டிற்கு வெகுதூரம் சென்று மலஜலங்களைக் கழித்து மண்ணால் கைகால்களைச் சுத்தம் செய்து ஸ்நானம் செய்ய வேண்டும். வேலையில்லாமல் வெளியில் செல்லக்கூடாது. தூரஸ்த்ரீகளுடன் பேசக்கூடாது. ஸகோதரியா யிருந்தாலும் எந்த ஸ்திரீயுடன் கூடவும் ஏகாஸநத்தில் உட்காரலாகாது. வஸ்த்ர மில்லாமல் ஸ்நாநம் சயநம் செய்யக்கூடாது. பாநு வாரத்தில் அப்யங்கநமும் சுக்ர வாரத்தில் க்ஷௌரமும் நல்லதல்ல. தென்முகமாகவும் மேற்கு முகமாகவும் உட்கார்ந்து புஜிக்கலாகாது. பிறர் தரித்த புஷ்ப வஸ்த்ர சயந பாதுகைகளையும், பிறர் உண்டு மிகுந்த அன்னபாநத்தையும் ஏற்கலாகாது. இரவில் க்ரஹணம் தவிர மற்ற காலங்களில் ஸ்நாநம் செய்யக்கூடாது. ஸ்நாநம் செய்து மயிரை உதரக்கூடாது. வஸ்த்ரத்தால் உடலைத் தேய்க்கலாகாது. வீதியிலுள்ள ஜலமும் சேறும் ஸூர்யாதபத்தால் சுத்தமாகிறது. ஆதலால் அவை அசுத்த மானவையல்ல. ஆசௌசான்னம், தேவ பித்ரு கார்யம் செய்யாத ஷண்டாந்நம், டம்பார்த்

தம் அநுஷ்டாநம் செய்யும் மார்ஜாரரது அந்நம், பக்ஷபாத மாகப் பேசும் குக்குரரது அந்நம், ஸ்வதர்மத்தை விட்டு பர தர்மத்தைக் கைகொண்ட பதிதரது அந்நம், வேத சாஸ்த்ர மில்லாத நக்நரது அந்நம், ஆசைகாட்டி மோசம் செய்யும் சண்டாளனது அந்நம் ஆகிய அந்நங்கள் பாபகரமான தால் அவைகளை அறியாமல் புஜிப்போர் சாந்த்ராயண வ்ர தத்தால் சுத்தமாவர். அறுவறுக்கத் தகாததும் பிறரைப் பார்த்து அச்சப்படத்தகாததுமான கார்யத்தைச் செய்ய வேண்டும்.

பிராமண க்ஷத்ரியர்களே வாநப்ரஸ்தாச்ரமத்திற்கேற்ற வர். வைச்யருக்கு ப்ருஹ்மசர்யம் கார்ஹஸ்த்ய மென்ற இரண்டே ஆச்ரமமுண்டு. சூத்ரனுக்கு கார்ஹஸ்த்யம் மட் டில் தானுண்டு. ஸ்வதர்மத்தை நன்கு அநுஷ்டிப்பவர் பிரும்ம லோகம் செல்வர். பரதர்மத்தைக் கைகொள்பவர் ஸூர்ய னுடைய கோபத்திற் காளாவர். இங்ஙனம் மஹர்ஷிகள் கூறிய உபதேசத்தைக் கேட்டு, ஸுகேசி ராக்ஷஸர்களிடம் சென்று, அஹிம்ஸை, ஸத்யம், களவாடாமை, சௌசம், இந் திரியஜயம், தாநம், தயை, கர்வமில்லாமை, மதுரமானவாக்கு முதலிய ஸதாசாரங்களை உபதேசித்தான். அவர்களும் அதை அநுஷ்டித்ததால் அவர்களது நகரம் ஜ்யோதிர்மயமாக விளங்கியது. சந்த்ர ஸூர்யர்களது ஒளி மழுங்கியது. ஸுகேசியினது கர்வத்தை அடக்க யாது வழி யென ஸூர் யன் யோசித்து, இவன் ஸ்வதர்மமான ராக்ஷஸ தர்மத்தைக் கை விட்டான்; என்பதை வியாஜமாக்கொண்டு அவனை நகரத்துடன் கீழே தள்ளி விட்டார். தனது பக்தனுக்கு நேர்ந்த கதியைக்கண்டு ருத்ரன் பாநுவைக் கோபத்துடன் விழித்துப் பார்க்க அவனும் கீழே விழுந்தான். பாஸ்கரனது ரதத்திலிருந்து மற்ற பாநுக்களும் மஹர்ஷிகளும் கீழே விழுந்து எழுந்து பிரும்மாவைச் சரணமடைந்தனர். அவர்

காசியில் மூர்த்திகரித்துள்ள விச்வநாதனைச் சரணமடைந்தார். தேவர்களது பிரார்த்தனைக்கிணங்கி பகவான் பானுவைக் கையிலேந்தி லோலன் என்ற நாமம்சூட்டி தேரோடு ஆகாசத்தில் தூக்கி எறிந்தார். முன்போலவே ஸூர்யன் தனது இடம்சென்று கடமையைச் செய்துவந்தான். ஸுகேசியைப் பிரும்மா முன்போலவே நகரத்துடன் ஆகாயத்திலமர்த்தினர்.

ஆடிமாதம் சுக்லபக்ஷ ஏகாதசியில் பகவான் ஆதிசேஷ சயனத்தில் படுத்துக்கொள்கிறார். த்வாதசியன்று பிராமணர்களிடம் விடைபெற்றுக்கொண்டு உறங்குகிறார். த்ரயோதசியில் மன்மதன் புஷ்ப சயனத்திலும், சதுர்த்தசியில் யக்ஷர்கள் ஸ்வர்ணத்தாமரையிலும், பூர்ணிமையில் பரமசிவன் புலித்தோலிலும், ப்ரதமையில் பிரும்மா நீலோத்பலத்திலும், த்விதீயையில் விச்வகர்மாவும், திருதீயையில் பார்வதியும், சதுர்த்தியில் விநாயகரும், பஞ்சமியில் யமனும், ஷஷ்டியில், ஸ்கந்தனும், ஸப்தமியில் ஸூர்யனும், அஷ்டமியில் காத்யாயனியும், நவமியில் லக்ஷ்மியும், தசமியில் பாம்புகளும், ஏகாதசியில் ஸாத்யர்களும் தூங்குகின்றனர். த்விதீயையில் பகவானை லக்ஷ்மியுடன் ஸ்வர்ணக் கட்டிலில் படுக்கவைத்துப் பூஜிப்பது அசூன்யசயநத்விதீயா வ்ரதமாகும். ஆச்வயுஜ அஷ்டமியில் உபவாஸமிருந்து நவமியன்று சிவாராதநம் செய்வது காலாஷ்டமீ வ்ரதமெனப்படும்.

## மஹிஷாஸுராதி ஜநநம்.

ரம்பன் கரம்பன் என இரு ராக்ஷஸ ஸஹோதரர்களிருந்தனர். இருவரும் பலத்தின் மதத்தால் உலகிலுள்ளோரை ஹிம்ஸித்து வந்தனர். புத்ரவரம் பெறுவதற்காக இருவரும் பஞ்சநதக்ஷேத்ரத்தில் தவம் புரிந்தனர். கரம்பன் ஜலத்தில் முழுகிக் கடுந்தவம் செய்தான். கரம்பன் அருகிலுள்ள ஆல

மரத்தின் கீழ் பஞ்சாக்நிமத்தியில் தவம் செய்தான். இதை அறிந்த தேவேந்திரன் முதலை உருவங்கொண்டு ஜலத்தில் தவம் புரியும் கரம்பனைக் கொன்றான். இதை உணர்ந்த ரம்பன் ஸஹோதரனுடைய மரணத்தாலுண்டான துக்கத்தைச் சகிக்கமாட்டாமல் தன் தலையை நறுக்கி நெருப்பில் ஹோமம் செய்ய ஆரம்பித்தான். உடனே அக்நி எதிரிற்றோன்றி ரம்ப! வேண்டாம்! ஸாஹஸம் செய்யாதே!! நீ கோரியபடியே மூவுலகத்தையும் அடக்கி ஆளும் ஆற்றல் பெற்ற குமாரனைப் பெறுவாய்! அவனை ஜயிக்க எவராலும் இயலாது. அவன் இஷ்டமான உருவை எடுக்கவல்லவன் என்று கூறி மறைந்தார். ரம்பன் மிக ஸந்தோஷங்கொண்டு யக்ஷர்கள் வஸிக்குமிடமான மாலவடம் என்ற ஆலமரத்தருகே வந்தான். அங்கு யானை எருமை குதிரை முதலிய ப்ராணிகள் நிழலில் படுத்திருந்தன. பெண்ணெருமையைப் பார்த்தவுடன் இவனுக்குக் காமவிகாரமுண்டாயிற்று. அவ்வெருமையும் இதற்கு இசைந்தது.உடனே கர்ப்பமாயிற்று.ரம்பன் மஹிஷ மனைவியுடன் பாதாளஞ் சென்றான். இவனது பந்துக்கள் இதைக்கண்டு வியந்து இவனுக்கு அங்கு இடமளிக்காமல் விரட்டிவிட்டனர். ரம்பன் மனம் நொந்து மாலவடத்திற்கே வந்து சேர்ந்தான். அங்கே மஹிஷாஸுரன் பிறந்தான். ஆங்கு ஓர் எருமைக்கடா இவ்வெருமையினிடம் ஆசைகொண்டு இயற்கைக்கு மாறாக தன் ஜாதியைக்கெடுத்த ரம்பனுடன் சண்டைக்குச் சென்றது. கடா கொம்பால் முட்டித்தள்ளி ரம்பனைக் கொன்றுவிட்டது. ஆண் எருமை தன் கற்பைக் கெடுக்காமல் காக்கவேண்டுமென்று பெண்ணெருமை யக்ஷர்களைச் சரணமடைந்தது. அவர்கள் அதைத் தடுத்து கற்பைக்காத்தனர். அது காமவேகத்தால் அருகிலுள்ள நதியில் இறங்கி எருமை உடலைவிட்டு நமரன் என்ற அஸுரனாகத் தோன்றிற்று. இறந்த ரம்பனது உடலைப்

பெண்ணெருமைத் தீயிலிட அங்கிருந்து ரக்தபீஜன் என்ருே ரரக்கன் உதித்தான். அவன் கையில் கத்தியை யேந்தி யக்ஷர்களையும் அருகிலுள்ள மிருகங்களையும் கொன்ருன். நம ரன் மஹிஷன் ரக்தபீஜன் என்ற மூன்று அஸுரர்களும் ஒன்றுகூடி இயற்கையான ராக்ஷஸ குணத்தால் முவ்வுலகை யும் பீடித்துவந்தனர்.

தேவர்கள் ஒன்று கூடி மஹாவிஷ்ணுவையும் மஹா தேவனையும் சரண மடைந்தனர். இதைக்கேட்ட இரு மூர்த் திகளும் கோபங்கொண்டனர். அக்கோபத்திலிருந்து ஓர் தேஜஸ் தோன்றியது. அதேபோல் இந்திரன் முதலிய ஸகல தேவர்களது முகங்களிலிருந்தும் தேஜஸ் தோன்றிற்று. இவையனைத்தும் காத்யாயன மஹர்ஷியின் அருகில் சென்று அவர் தேஜஸ்ஸுடன் கலந்து காத்யாயநீ எனும் தேவி யாக நின்றது. ஸகல தேவர்களும் தத்தம் ஆயுதங்களையும் ஆபரணங்களையுமளித்து அம்பிகையைத் துதித்தனர். ஸந் தோஷமடைந்த காத்யாயனீ ஸமயத்தில் அரக்கரைக் கொல் வதாகக் கூறி ஸிம்ஹவாஹநத்தின் மீதேறி விந்தியமலைக் குச் சென்ருள். ஆங்கு தற்செயலாக வந்த சண்டமுண்ட ரெனும் இரு சகோதரர்கள் தேவியைக் கண்டு பயந்து ஒடி மஹிஷாஸுரனிடம் சென்றனர். அன்னையின் அழகையும் அபரிமிதமான சக்தியையும் வர்ணித்தனர். மஹிஷன் இதைக் கேட்டதும் தேவியை மணம்புரியக்கருதி ஸேனையுடன் விந்த்ய மலையின் அடிவாரத்தில் வந்துதங்கினன். மயனுடைய புதல்வ னை துந்துபியைத் தேவியினிடம் தூதனுப்பினன். அவன் மஹிஷாஸுரனுடைய பல பராக்ரமத்தை வர்ணித்து அவளை மணக்கும்படி கூறினன். தேவி புன்னகைகொண்டு என்னை எவர் யுத்தத்தில் ஜயிக்கிருரோ அவருக்கே யான் மாலையிடுவ தாக ப்ரதிக்ஞை செய்திருக்கிறேன். மஹிஷன் என்னை முதலில் ஜயிக்கட்டுமென்ருள். இதைத்தூதன் மூலமறிந்த

மஹிஷன், நமரன், விக்ஷுரன் முதலிய ஸேனாதிபதிகளை எண்ணிறந்த சேனையுடன் தேவியோடு போர்புரிய அனுப்பினான். காத்யாயனீ தனது உடலிலிருந்து பல சக்தி கணங்களைத் தோற்றிவைத்து அஸுரஸேனையை அழித்தாள். தானே பல ஸேனாதிபதிகளைக்கொன்று வீணை டமருகம் என்ற வாத்யங்களை வாசித்தாள். சக்தி கணங்கள் தாண்டவமாடின. மஹிஷன் தானே போருக்குவர தேவி அவனைக் காலாலுதைத்துக் கீழே தள்ளி சூலத்தால் குத்தினாள். அதிலிருந்து கிளம்பிய அஸுரனது தலையைக் கத்தியால் வெட்டினாள். இதைக் கண்டு களித்த தேவர்கள் புஷ்பமாரி பொழிந்து அன்னையைத் துதித்தனர். தேவி அந்தந்த ஸமயத்திற்கேற்றபடி அவதாரம் செய்து அஸுரர்களைக் கொல்வதாகக் கூறி மறைந்தாள். சும்பநிசும்பன் எனும் ராக்ஷஸர்கள் மறுபடியும் உலகை நாசம் செய்தனர். தேவர்கள் ச்வேதத்வீபத்தில் பாற்கடலில் பன்னக சயனத்தில் வீற்றிருக்கும் வைகுண்ட நாதனைச் சரணமடைந்தனர். பகவான், தாக்ஷாயணி தன்னுடலைவிட்டபிறகு சங்கரன் தக்ஷிணாமூர்த்தியாக தவம்புரிகிறானன்றோ? அத்தாக்ஷாயணி பர்வத ராஜகுமாரியாகத் தோன்றி அவரை மணந்து ஸுப்ரஹ்மண்யனெனும் ஸேநாதிபதியை உண்டுபண்ணுவாள். அவன் இவ்வஸுரர்களை வெல்வான். அச்சேனாதிபதி பிறப்பதற்காக நீங்கள் பூமியில் பரமபாவநமான குருக்ஷேத்ரம் சென்று தவம் செய்யுங்கள் என்றார். தேவர்களும் அங்ஙனமே அங்கு கிளம்பினர்.

## குருக்ஷேத்ரம்.

சந்திர வம்சத்தில்ரிக்ஷன் என்றோரசனிருந்தான். அவன் சிறந்த விஷ்ணு பக்தன். அவனுக்கு ஸம்வரணன் என்றோர் குழந்தை பிறந்தான். அவனது குணத்தைக்கண்டு வியந்தார்

வஸிஷ்டர். அவன் பிரார்த்தனைக்கிணங்கி ஸம்வரணனுக்குப் புரோஹிதரானார். அவ்வரசன் ஒரு ஸமயம் வஸிஷ்டரிடம் ஸகல ராஜ்ய கார்யங்களையும் ஒப்படைத்து, வைப்ராஜமெனும் வனத்திற்குச் சென்றான். ஆங்கு பல அப்ஸரஸ்ஸுகள் ஒன்றாகக் கூடி விளையாடிக்கொண்டிருந்தனர். அரசன் அவர்களிடையில் மிக லாவண்யம் வாய்ந்த ஓர் கன்யகையைக் கண்டு காமபாணத்திற்கு இலக்கானான். அப்பெண்மணியும் மன்மதன் போன்ற மன்னனைக் கண்டு மாரன்கணைக்கு இலக்காகி மதிமயங்கி நின்றாள். அருகிலிருந்த அப்ஸரஸ்ஸுகள் அப்பெண்ணை அழைத்துக்கொண்டு தேவலோகம் சென்றனர். அன்று முதல் அரசன் மற்ற விஷயங்களை மறந்து அக்கன்னிகையையே நினைத்து கானகத்தில் திரிந்தான். பல நாட்கள் சென்றும் பார்த்திபன் வராத காரணம் யாதென்று வஸிஷ்டர் யோசித்தார். ஆங்கு நடந்த விருத்தாந்தத்தை ஜ்ஞானக் கண்ணால் உணர்ந்த முனிவர், தபோ மஹிமையால் ஸூர்யனிடம் சென்றார். அவன், தன்னைவிட அதிக காந்தியுடன் தோன்றும் இம்மஹரிஷி யாரோ? எக்காரணம்பற்றி இங்கு வந்தனரோ? என்று திக்ப்ரமை கொண்டான். தக்கபடி அவரை வரவேற்று அர்க்யபாத்யாதிகளை அளித்தான். அவரது ஒளியைக்கண்டே அவர் வஸிஷ்டரென உணர்ந்து வந்த காரியத்தைக் கூறும்படி வேண்டினான். வஸிஷ்டர் எனது சிஷ்யரான ஸம்வரண ராஜன் உனது புத்ரியான தபதியை ஸகிகளுடன் வனத்தில் விளையாடக் கண்டான். அவளைக்கண்டு மோஹித்தான். ஸத்பாத்ரமாதலின் அவனுக்குத் தபதியை விவாஹம் செய்து வைக்கலாம் என்ற எண்ணம்கொண்டு உம்மிடம் வந்தேன் என்றார். அதைக் கேட்ட பாஸ்கரன் யாதொரு பதிலும் கூறாது பெண்ணை அழைத்து வஸிஷ்டருடன் அனுப்பி விட்டான். மஹர்ஷி அவளை அழைத்து வந்து ஸம்வரணனுக்கு விதிப்படி விவாஹம் செய்து வைத்

தார். இவர்களுக்கு குரு என்ற ஓர் குழந்தை பிறந்தது. அதற்குத் தக்க வயது வந்தவுடன் ஸுதாம ராஜனுடைய புதல்வியான ஸௌதாமினியை மணம் செய்து வைத்தான்.

குருராஜன் பல்லாண்டு நீதி தவறாது பாரினை ஆண்டு வந்தான். அவ்வரசன் உலகமுள்ளவரையில் தனது பெயர் அழியாதிருக்க ஆசை கொண்டான். அவனி யெல்லாம் சுற்றி த்வைத வநம் வந்தான். ஆங்கு பாபத்தை அகற்றும் பல நதிகளைக் கண்டான். அங்கே அரிய ஓர் வேள்வியைச் செய்யக் கருதினான். தங்கக் கலப்பைகொண்டு அரசன் தானே தரணியை உழுதான். தேவேந்திரன் அவ்வரசனை நோக்கி எதற்காக உழுகிறீர் என்று கேட்டார். அரசன் தபஸ், ஸத்யம், க்ஷமை, தயை, சௌசம், தானம், யோகம், ப்ரம்மசர்யம். முதலியவைகளைப் பயிரிட உழுவதாக உரைத்தான். இதைக் கேட்டு வியந்த இந்திரன் புன்னகைகொண்டு இதற்கு விதை எங்கிருந்து தேடுவாய் என்று கூறி சென்றான். குரு மறுபடியும் திரும்பத் திரும்ப பூமியை உழுதுக் கொண்டிருந்தான். மஹாவிஷ்ணு அவன் எதிரிற்றோன்றி இதற்கு விதை எங்கிருந்து தேடுவாய் என இந்திரனைப்போல் வினவினார். அரசன் தன் கையில் இருப்பதாகக் கூறினான். அதைக் காட்டு என்று பகவான் கூற, குரு வலது கையை நீட்டினான். அதைச் சக்ரபாணி சக்ரத்தினால் அறுக்க அரசன் இடது கையை நீட்டினான். அதையும் மாதவன் அறுத்துத் தள்ள அரசன் அங்ஙனமே ஸகல அவயவங்களையும் அளிக்க, ஸர்வேச்வரன் எல்லாவற்றையும் அறுத்துத் தள்ளி உயிர் நீங்கும் தருணத்தில் அரசனை யாது வரம் வேண்டும் என்றார். அரசன் தான் உழுத இடம் மிகப் புண்ய பூமியாக இருக்கவேண்டுமெனவும் தன் பெயரால் குருக்ஷேத்ரமென்று வழங்க வேண்டுமெனவும், இங்கு அனுஷ்டிக்கும் ஸத்கர்மா அபரிமிதமாக பலனை அளிக்க வேண்டு மெனவும் வரம் கேட்

டான். அச்யுதன் அங்ஙனமே அரசனை ஆசிர்வதித்து உலகுள்ளவரை உன்கீர்த்தி அழியாதிருக்கும். இந்த க்ஷேத்ரத்தைக் காக்க யக்ஷன், வாஸுகி, சங்குகர்ணன், முதலியவர்களை நியமித்து இருக்கிறேன். ப்ருதூதகமெனும் நதியையும் இங்கு ஓடும்படி செய்கிறேன் என்று கூறி மறைந்தார்.

## வாமநாவதாரம்.

தைத்யருக்கு ஆதி புருஷனுயுள்ளவன் ஹிரண்யாக்ஷன். அவனது புதல்வனுன ப்ரஹ்லாதனிடம் விரோசனன் தோன்றினன். விரோசனனது புதல்வன் பலிசக்ரவர்த்தியாவான். ப்ரஹ்லாதனது உபதேசத்தினுல் பலிசக்ரவர்த்தி தேவதர்மத்தைக் கைகொண்டான். தவருது தானதர்மங்களைச் செய்வான். அவனைத் தழுவி மயன் சம்பரன் முதலியவர்களும் தர்மத்திலீடுபட்டனர். பாபத்தைச் செய்வோர் ராக்ஷஸரில் ஒருவருமிலர். நான்கு பாதத்துடன் தர்மம் தழைத்தோங்கிற்று. ஒரு ஸமயம் லக்ஷ்மீதேவி தைத்யேந்திரனது எதிரில் தோன்றினுள். மஹாபலே! உனது வீர்யத்தைக் கண்டு களித்தேன். நீ அநுஷ்டிக்கும் தர்மத்தைக் கண்டு பேரானந்தம் பெற்றேன். இந்திரனைவிட்டு உம்மிடம் வஸிப்பேன் எனக்கூறி அவன் உடலில் மறைந்தாள்.

எனவே முவ்வுலக ஆக்ஷியும் பலியினிடம் சென்றது. இந்திரன் பதவியை இழந்தான். அவன் மேருமலையில் வஸிக்கும் தனது அன்னையான அதிதியைச் சரண மடைந்தான். தனக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறினுன். அதிதி அவன் தந்தையான கச்யபரைச்சரணமடையும்படி மகனுக்கு உரைத்தாள். கச்யபரது திருவடியைத் தேவேந்திரன் சரண் புகுந்தான். அவர் மஹாவிஷ்ணுவைத் தவிர பலியினது பலத்தை அடக்க வேறு எவராலும் இயலாதெனக்கூறி அவரைச் சரணமடையக் கருதினர். புதல்வருடனும் தேவகணங்களு

டனும் கூடி ப்ரஹ்மலோகம் சென்றூர். ஆங்கே கமலாஸனத்தில் அமர்ந்துள்ள ப்ரம்மன், சரீரத்துடன்வந்த வேத இதிஹாஸபுராணங்களால் துதிக்கப்படக் கண்டார். அச்சபை தனில் புகுந்து கமலாஸனைக் கச்யபர் வணங்கிப் போற்றினூர். இந்திரனது நிலையையும் எடுத்துக் கூறினூர். அவர் தேவர்களுக்கு நல்வரவு கூறி ஆசீர்வதித்து ச்வேதத்வீபம் சென்று பாற்கடலில் பன்னக சயநத்தில் வீற்றிருக்கும் பத்மநாபனைச் சரணமடையும்படி கூறினூர். அங்ஙனமே தேவர்களுடன் கச்யபர் வைகுண்டம் சென்றூர். ஆங்குள்ள அரிய காட்சிகளைக் கண்டு அமரர் ஆச்சரியமடைந்தனர். கச்யபர் பகவானது அரும்பெரும் குணங்களைக் கூறித் துதித்தார். கருணைக் கடலான கமலாக்ஷன் ப்ரத்யக்ஷமாகத் தோன்றினூர். கச்யபர் அவரது திருவடியைப் பணிந்து அவரே தனக்குத் தனயனுகைத் தோன்றவேண்டுமென ப்ரார்த்தித்தார். அச்சுதனும் அங்ஙனமே தோன்றி தேவேந்திரனுக்குத் தைத்யனிடமுள்ள தேவராஜ்யத்தை அளிப்பதாக அருள்புரிந்தார். பின்னர் அதிதியினது கர்ப்பத்தில் பகவான் கருவாகத்தோன்றினூர். அத்தருணம் பூமி சலித்தது; பர்வதங்கள் அசைந்தன; கடல் கலங்கிற்று. அதிதி அடிவைக்கும் இடமெல்லாம் தாழ்ந்தது. இதைக் கண்டு மஹாபலி மனம்நொந்து ப்ரஹ்லாதரை அடுத்து இதற்கு யாது காரணம் என வினவினூர். அவர் ஊனக் கண்ணைமூடி ஞானக்கண்ணுல் கண்டு கூறினூர். தேவரது நன்மையைநாடி நாரணன் அதிதியின் வயிற்றில் சிசுவாகத் தோன்றியுளார். அவர் வாமனவடிவத்துடன் வந்து உன்னிடமுள்ள தேவராஜ்யத்தைத் தேவேந்திரனுக்கு அளிக்கப் போகிறூர் என்று உரைத்தார். இதைக்கேட்டு அஸுரன் அடங்காச் சினங்கொண்டான். தைத்யகுலத்தை அழிக்கும் தாமோதரனைக்கொல்ல தனது ஸேனுதிபதிகளை அனுப்புவ

தாகக் கூறினன். பத்மநாபனை நிந்தித்தான். பரம பாகவதனை ப்ரஹ்லாதன் மனதை இச்சொற்கள் புண்படுத்தின. ஹரி! ஹரி!! என்று காதைக் கைகளால் பொத்தினர். தனது இஷ்ட தேவதையை நிந்தித்த மஹா பலியிடம் மட்டில்லா சினங்கொண்டார். விரைவில் அவனை விட்டு தேவ ராஜ்யமகலுமென்று சபித்தார். தேவநிந்தை செய்யும் அவன் முகத்தில் விழிக்காது வெளியிற் செல்லப்புறப்பட்டார். பலி இதைக்கண்டு வருந்தி ப்ரஹ்லாதரைப் பணிந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டினன். அவரும் வினையின் செயல்படி நடக்கும் விரோசநன் புதல்வனுக்குத் தான் சாபமிட்டதை நினைந்து வருந்தினர். தான் சாபமளித்ததும் தெய்வச்செயலோ எனக் கருதினர். எந்த பரம புருஷன் உனது கர்வத்தை அடக்க அவதரிக்கிறரோ அவரையே சரணமடை. ராஜ்யத்தில் ஆசை வைக்காதே என்று கூறி தீர்த்த யாத்ரைக்குச் சென்றார்.

இதனிடையில் பத்து மாதங்கள் சென்றன. அதிதி அற்புதமான வாமநரைப் பெற்றாள். அச்சமயம் அமரர் ஆநந்தமடைந்தனர். தேவ துந்துபி முழங்கிற்று. மந்தமாருதம் வீசியது. ஸாதுக்களுடைய உள்ளம் தெளிந்தது. ஜயஜய என்ற சப்தமும் புஷ்பமாரியும் தோன்றிற்று. தந்தை கச்யபர் மைந்தனுக்கு ஜாத கர்மம் முதலியவைகளைச் செய்தார். உடனே குழந்தைக்கு உபநயநம் செய்விக்கப்பட்டது. ப்ரம்மா மான் தோலை அளித்தார். ப்ருஹஸ்பதி யஜ்ஞோபவீதத்தையும் மரீசி தண்டத்தையும், வஸிஷ்டர் கமண்டலுவையும், ஆங்கிரஸர் தர்ப்பையையும், புலஹர் ஆஸனத்தையும் அளித்தார். மற்றும் பலர் மற்றும் பல பொருளையும் அளித்தனர். வேத சாஸ்திரங்கள் வடிவுடன் தோன்றி வாமனரைப் போற்றின. ஸகல முனிகணங்களுடன் ஸர்வேச்வரன் பலியினது யாகசாலைக்குக் கிளம்பினர். பகவானது திருவடி

பட்ட இடம் அதிர்ந்தது. ப்ருஹஸ்பதி வழிகாட்டிக்கொண்டு முன்னே சென்றார்.

அச்சமயம் பூமி அசையக் காரணம் யாதென பலி சக்ரவர்த்தி சுக்ரரை வினவினன். அவர் ஜ்ஞான திருஷ்டியால் அறிந்து வாமனர் வருவதைக் கூறினர். அதைக்கேட்ட அஸுர ராஜன் தேவர் போற்றும் தேவதேவன் தன்னிடம் வருவதைக்கண்டு பெருமை அடைந்தான். சுக்ரர், தேவர்களை நீக்கி தைத்யர்களைக்கொண்டு செய்யும் வேள்வி வாமனருக்குப் பிரியமானதல்ல; தேவேந்திரனுக்கு தேவராஜ்யத்தை அளிக்கவே அவர் இங்கு வருகிறார். ஆதலின் அவரைப் பூஜித்து நல்வார்த்தை கூறி அனுப்ப வேண்டுமேயல்லாது அவர் விரும்பும் அற்பப் பொருளையும் அளிப்பதாக ப்ரதிக்ஞை செய்ய லாகாதென்றார். பலி, "ஸாமான்யமானவர் விரும்பியதையே இல்லை யென்று கூறுவது என் வழக்கமல்ல. வ்ரதம், உபவாஸம்,யஜ்ஞம் முதலியவைகளால் எவனைக்காண தவஸிகள் தவம் கிடக்கின்றனரோ? எவன் எல்லா ஜீவராசிகளுக்கும் அன்றன்றுபடி அளக்கிறானோ? அத்தகைய புருஷோத்தமன் என்னை யாசித்தால் யான் இல்லையெனத் தகுமோ? உயிரையேனும் அளிப்பேன், இல்லை யென்று சொல்லேன். அவர் கோரிய பொருளை அளிப்பதைவிட யான் விரும்பும் பொருள் உலகில் ஒன்று மில்லை. நல்ல மனிதன், தான் அனுபவிப்பதைவிட நூறு மடங்கு தானம் செய்வதில் ஸந்தோஷ மெய்துவான். என்பால் அருள்கொண்டு அவர் தானம் பெறினும் யான் சிறந்தவனே! அல்லது என்னிடம் சினம் கொண்டு என்னைக் கொல்வாராகில் அதுவும் உத்தமமே!" என்று கூறினன். இதனிடையில் பகவான் யஜ்ஞ சாலையில் நுழைந்தார். வஸிஷ்டர் வாமதேவர் முதலிய மாமுனிவர் எழுந்து, வருக! வருக! என்று நல்வரவுகூறினர். யஜ்ஞசாலையிலுள்ள அனைவரும் எழுந்து நின்று எல்

லோருள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் ஈசனைப் போற்றி
னர். அவரைக் கண்டவுடன் பலியும் மெய் மறந்து நின்
றான். சிறிது நேரம் சென்றபின் அர்க்யபாத்யமளித்து,
ஆஸனத்தில் அமர்த்தி அவரடி பணிந்தான். எழுந்து நின்று,
ஐயனே ! ரத்னராசிகளோ ? நால்வகைச் சேனையோ ? ஆப
ரணங்களோ? ஸகல ராஜ்யமுமோ? தங்களுக்களிக்க தகாதது
என்னிட மொன்றுமில்லை. தங்களுக்கு யாது வேண்டும்?
என்னிடமிருந்து எதையேனும் ஏற்று என்னைத் தன்யனாக்க
வேண்டுமென ப்ரார்த்தித்தான். வாமனர் தான் அக்நியை
வைத்து அர்ச்சிப்பதற்குத் தனது காலால் மூன்றடி மண்
கொடு என்றார். இதைக்கேட்டு நகைத்து பலி, வேறு யேதே
னும் அபரிமிதமான பொருளைக் கேட்கலாகாதோ என்றான்.
அதை வேண்டியவரிடம் அதை அளிக்கலாம். எனக்கு
வேண்டிய இதைக்கொடு போதும் என்றார். இதைக்கேட்ட
பலி அவர் விரும்பியபடியே தானம் செய்து அவரது கை
யில் தீர்த்தத்தை விட்டான். தத்க்ஷணமே பகவான் ஸர்வ
தேவ மயமான சரீரத்தைக் காண்பித்தார். சந்திர ஸூர்
யர்களே அவரது கண்களானார்கள். த்யுலோகம் தலையாகவும்;
பூமி பாதமாகவும், பிசாசங்கள் கால் விரல்களாகவும் விச்வே
தேவர்கள் முழங்காலாகவும் ஸூர்ய கிரணங்கள் கேசங்களா
கவும் அச்விநிகள் காதுகளாகவும், ஸரஸ்வதி நாக்காகவும்,
மற்றும்பல தேவர்கள் மற்ற அவயவங்களுமானார்கள். இத்
தகைய உடல் பெற்று, பகவான் மூவுலகையுமளந்து
தேவேந்திரனுக்கு அளித்தார். தைத்யேந்திரனைப் பார்த்து,
நீ ஸுதலமெனும் பாதாளம் செல்வாயாக. எனக்கு அளித்த
தானமஹிமையால் ஒரு கல்பம்வரை உனது ஆயுள் நீண்
டிருக்கும். ஸாவர்ணிகமன்வந்திரத்தில் நீ இந்திரனாவாய்,
ஸுரருடனும் பூஸுரருடனும் பகைமை கொள்ளாத வரை
யில் போகத்தைப் பெறுவாய் என்று கூறினார். பலி பாதாளத்

தில் தான் உணவுக்கு என் செய்வதென்று வினவினன். பகவான், விதிப்படி செய்யாத தானமும், ச்ரோத்திரியனில்லாத ச்ராத்தமும், ச்ரத்தையில்லாத ஹோமமும், தக்ஷிணையில்லாத யாகமும், தீர்த்தமில்லாத பூஜையும், ஆஜ்யமில்லா ஹோமமும், உனக்கு உணவாகும் எனக்கூறினர். அன்றியும் ஆடிமாதம் சுக்லபக்ஷம் ஏகாதசி உபவாஸமிருந்து த்வாதசியன்று வாமனரைப் பூஜிப்போர் வைகுண்டம் செல்வர் என்று கூறி மாதவன் மறைந்தார். இச்சரிதத்தைப் படிப்பவரது பாபமகலும். கேழ்ப்பவர் கோரிய பலம் கைகூடும் என்று ஸூதருரைத்தார்.

தீர்த்த மஹிமை. நதிகளின் பெருமையைக் கூறும்படி மஹர்ஷிகள் வேண்ட ரோமஹர்ஷணர் கூறுகிறார். மார்க்கண்டேய முனிவர் த்வைதவனம் சென்று ஸரஸ்வதி நதியில் புனலாடி அவளைத் துதித்தார். மஹாவிஷ்ணுவின் நாவிலிருந்து பெருகிய ஸரஸ்வதி மார்க்கண்டேயரைப் பார்த்து, அவர் அழைக்கும் இடமெல்லாம் தான் வருவதாகக் கூறினள். அங்ஙனமே அவர் அவளைக் குருக்ஷேத்ரம் அழைத்துச் சென்றார். அவளுடைய அருளால் பற்பல பெயருடன் பல தீர்த்தங்கள் அங்கு தோன்றின. ப்ரம்மஸரஸ், நாகஹ்ரதம், முதலிய ஆயிரம் தீர்த்தங்கள் குருக்ஷேத்ரத்தில் உண்டாயின. அத்தகைய குருக்ஷேத்ரத்திற்குப் போவதாக நினைப்பவருக்கே நற்கதியுண்டாகும். ஆங்கு வஸிப்போர் ப்ரஹ்மஞானத்தைப் பெறுவர். அதனருகே காம்யக வனம், அதிதி வனம், பலகீ வனம், ஸூர்ய வனம், மது வனம், புண்யசீத வனம் என்ற புண்ய வனங்கள் இருக்கின்றன. ஆங்கு ஸரஸ்வதீ, வைதரணீ, கங்கா, மந்தாகினீ, மதுச்ரவா, அம்லு, கௌசிகீ, என்ற ஏழு நதிகள் உள. ஏனைய நதிகளைப் போல் புதிய ப்ரவாஹம் வரும்பொழுது மூன்று நாள் தீண்டத்தகாத ரஜஸ்வலாதோஷம் இவைகளுக்குக் கிடையாது.

விஷ்ணுஸ்தானம், விமலம், பாரிப்லவம், ஸததம், பஞ்சநதம், கோடி தீர்த்தம், ஸோம தீர்த்தம், ஏகஹம்ஸம், காணபத்யம், ராமஹ்ரதம், ஸ்ரீ தீர்த்தம், ஸூர்ய தீர்த்தம், ப்ரம்மாவர்த்தம், ஸுதீர்த்தம், தசாச்வமேதம், முதலிய பற்பல புண்ய தீர்த்தங்களுமிங் கிருக்கின்றன. ஸுப்ரபை, காஞ்சனுக்ஷி, விமலா, மானஸஹ்ரதா ஸரஸ்வத்தோயா, ஸுவர்ணு, விமலோதகா என்ற ஏழு நதிகள் கூடுமிடம், ஸப்தஸாரஸ்வதமெனப்படும். ராகவன் வனவாஸம் புரியும்பொழுது ஸாதுக்கள் அவரைச் சரணமடைந்தனர். ராக்ஷஸ பாதையிலிருந்து தங்களை ரக்ஷிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தனர். அங்ஙனமே அயோத்யாதிபதி துஷ்டர்களைச் சிக்ஷித்து வந்தார். ஒரு ஸமயம் ராக்ஷஸனுடைய சிரத்தை சரத்தால் அறுத்தார். அத்தலை அறுந்து அதிவேகமாகச் சென்று ரஹோதர் என்ற முனிவருடைய தலைமீது பதிந்தது. அத்தலையை அகற்ற எவராலும் இயலவில்லை. உலகிலுள்ள பல புண்ய தீர்த்தங்களில் புனலாடினூர். எங்கும் அத்தலை அகன்றபாடில்லை. பின்னர் ஔசனஸம் என்னும் தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தார். இவர் ஜலத்தில் மூழ்கிய பொழுது அரக்கன் தலை அக்கணமே அகன்றது. அன்று முதல் அதற்கு கபாலமோசன தீர்த்தமென மற்றோர் பெயர் தோன்றிற்று.

அவகீர்ண தீர்த்தம். முன் ஒரு ஸமயம் திருதராக்ஷ்டிரனிடம் மஹர்ஷிகள் யஜ்ஞ தக்ஷிணையை யாசித்தார்கள். அரசன் அவர்களை இகழ்ந்து பேசினுன். அதைக் கண்டு தால்ப்யபகர் என்ற ரிஷி அரசனிடம் கோபம் கொண்டார். ப்ராம்மண அவமானம் செய்த மன்னனைச் சிக்ஷிக்கக் கருதினூர். அருகிலிருந்த தீர்த்தத்தில் தனது சரீரத்திலுள்ள மாம்ஸத்தை அறுத்து ஹோமம் செய்தார். இவர் இத்தகைய வேள்வியைச் செய்ய திருதராஷ்டிரனது நாடு நகரம் கொஞ்சம்

கொஞ்சமாக அழிந்தது. தான் பூஸ-ராருக்குச் செய்த அவமானத்தினுல் இங்ஙனம் நேர்ந்ததென அரசன் உணர்ந்தான். தனது புரோஹிதருடன் கூட தபோவனம் சென்முன். தால்ப்யரது தாட்களில் விழுந்து தனது குற்றத்தை மன்னிக்கும்படி ப்ரார்த்தித்தான். அந்தணர்கள் அபேக்ஷித்ததைவிட அதிகமான பொருளை அளித்தான். தால்ப்யர் அரசனை க்ஷமித்து ஸ்[illegible]க்களை அவமதியாமலிருக்கும்படி உபதேசித்தார். அவர் ஹோமம் செய்த தீர்த்தத்தில் அரசனை ஸ்நாநம் செய்யும்படி கூறினுர். அப்புண்ய நதியே அவகீர்ணு என அழைக்கப்படுகிறது.

வஸிஷ்டோத்வாஹ தீர்த்தம். வஸிஷ்டரது ஆச்ரமத்திற்கருகே இருந்து விச்வாமித்ரர் பரமசிவனைப் பூஜித்து வந்தார். அவர் தன்னருகே ஸரஸ்வதீ நதியை ஓடும்படி செய்தார் வஸிஷ்டரது பெருமையைக்கண்டு விச்வாமித்ராருக்குப் பொருமை உண்டாயிற்று. அவரது தவத்தால் தந்தவத்திற்குக் குறைவு வருகிறதென்று எண்ணினுர். ஸரஸ்வதீ நதியை அழைத்து வஸிஷ்டமா முனியை ப்ரவாஹத்தின் மூலமாக இங்கு கொண்டுவரும்படி கூறினுர். அந்நதி இவரது கோபத்தைக் கண்டு இங்கேவரும் வஸிஷ்டரைக் கோபம் கொண்ட விச்வாமித்ரர் ஹிம்ஸித்தால் அப்பாபம் தன்னைச் சார்ந்ததெனக் கருதி தயங்கினுள். இவள் தயங்குவதைக் கண்டு கோபம்கொண்டு விச்வாமித்ரர் வஸிஷ்டரை விரைவாகக்கொண்டு வா எனக் கட்டளையிட்டார். ஸரஸ்வதீ நதி மிக மனவருத்தத்துடன் வஸிஷ்டரிடம் சென்று நடந்ததை அறிவித்தாள். வஸிஷ்டர் ஸரஸ்வதியை நோக்கி அஞ்சாதே! என்னை அழைத்துச் செல்! என்று கூற அங்ஙனமே அவள் வஸிஷ்டரைப் பிரவாஹத்தில் அடித்துச் சென்றுள். வஸிஷ்டர் அந்நதியைத் துதித்தார். அந்நதியும் விச்வாமித்ரரது ஆச்ரமத்திற்கு வஸிஷ்டரை அழைத்துச் சென்றது. அவ

ரைக்கண்டவுடன் விச்வாமித்ரருக்குக்கோபம் பொங்கிற்று. வஸிஷ்டரைக் கொல்லத்தக்க ஆயுதத்தைத் தேடினார். அச்சமயம் ஸாஸ்வதி, இம்முனிவர் சொற்படி வஸிஷ்டரை அழைத்து வந்தோம். அவர் இறக்கா வண்ணம் காப்பது நமது கடமை; என்று எண்ணினாள். உடனே ஸரஸ்வதியின் ப்ரவாஹம் பெருகிற்று. அதனிடையில் வஸிஷ்டர் மறைந்து சென்ற விடம் தெரியாமல் சென்று விட்டார். இதைக் கண்டு அடங்காக் கோபம் கொண்ட விச்வாமித்ரர், ஸரஸ்வதியை ரக்தப்ரவாஹமாக ஓடும்படி சபித்தார். அங்ஙனமே அதன் ஜலம் ரக்தமாக மாறியது. அதைக் கண்டு ஸந்தோஷம் கொண்ட பூத, ப்ரேத, பிசாசங்களும், ராக்ஷஸர்களும், அதன் அருகே சென்று ரக்தபானம் செய்து அங்கேயே வஸித்தனர். இங்ஙனம் பல காலம் சென்றபின் தீர்த்தயாத்ரைக்கு வந்த மஹர்ஷிகள் ஸரஸ்வதியின் ரக்த ஜலத்தைக்கண்டு திடுக்கிட்டனர். அவள் மூலமாக விச்வாமித்ரரது செயலை உணர்ந்தனர். உடனே தங்களது தபோமஹிமையால் அருணை நதியை ஆங்கு அழைத்தனர். அதன் ப்ரவாஹத்தால் ஸரஸ்வதியின் ரக்த ஜலம் அகன்று பரிசுத்தமானது. ஆங்கு வஸித்துள்ள அரக்கரும் பூத ப்ரேதங்களும் முனிவர்களைச் சரணமடைந்தனர். எங்களது பசிக்குயாது வழியென வினவினர். ப்ராம்மணத் வேஷத்தினாலும் ஆசார்யனை அவமதித்ததாலும், தாய் தந்தைகளை த்வேஷித்ததாலும், நாங்கள் ராக்ஷஸர்களாகவும் பேய்களாகவும் பிறந்தோம். எங்களுக்கு இதே உணவு. கருணைக் கடலான நீங்கள் எங்களுக்கேற்ற வேறு உணவை அளிக்க வேண்டும் என்றனர். தவஸிகள் அவர்களைப்பார்த்து அஞ்சாதீர்கள். புழுவும் மயிருமுள்ள அன்னம், ஆசார மற்றவன் உண்ட மிகுதி, முகர்ந்துப் பார்த்ததும், மூச்சுக் காற்று கலந்தது மான அன்னம் உங்களைச் சார்ந்தது என்று கூறினர். அன்றி

யும் அருணா ஸாஸ்வதி ஸங்கமத்தில் அவ்வரக்கர்களையும் மற்றவர்களையும் ஸ்நாநம் செய்வித்து அவர்களுக்கு நற்கதி அளித்தனர். அத்தீர்த்தம் வஸிஷ்டோத்வாஹ மெனப்படும்.

ஆத்மநதி:—உலகில் தோன்றிய ஏனைய நதிகளைப் போல் அல்லாது ஒவ்வொரு மனிதனது உடலிலும் பரமபாவன மான ஓர் நதி உளது. அது ஆத்மா எனப்படும். அடக்கமென் பது அதில் புண்ய கட்டமாம். சீலம் ஸத்தியம் என்பவை ஜலமாம். இந் நதியில் மூழ்குவோர் பாபமகலும். சித்தம் சுத்தமாகும். சுத்தமான சித்தத்தை ஆத்மாவினிடம் அர்ப் பணம் செய்வதைவிட வேறு புண்ய ஸ்நாநம் கிடையாது. வெளியிலுள்ள தீர்த்தங்களால் சரீர சுத்தி ஏற்படுவதேயல் லாது மனம் பாவன மாவதில்லை. ஸாதுக்களுக்கு ஸத்தியம், ஸமரஸம், சீலம், கபடமில்லாமை, விஷயத்திலிருந்து மன தைத் திருப்புவது ஆகிய இவைகளைவிட வேறு சிறந்ததன மில்லை.

## லிங்க பூஜை.

எண்பத்தெட்டாயிரம் ஸங்க்யையுள்ள வாலகில்யமஹர் ஷிகள் ஆயிரமாண்டு பரமனை நாடித் தவம் புரிந்தனர். அவர் களது உடல் ஒட்டி மாம்ஸம் உலர்ந்து எலும்பில் உயிர் ஒட் டிக்கொண்டிருந்தது. இதைக் கண்ட கருணாமூர்த்தியான உமாதேவி பரமசிவனைப் பணிந்து, பூதநாத! இச் சிறுவர் களுக்கு ஏன் இன்னமும் தயை புரியவில்லை என்றாள். அவர் களுக்குக் காமக்ரோதம் அகலவில்லை. ஆதலின் அருளைப் பெற அவர்கள் அர்ஹரில்லை என்று ஸதாசிவன் கூறினர். அன்னை மேன்மேலும் அவர்களுக்கு உடனே அருளும்படி பகவானை வேண்ட ஸ்வாமி; திகம்பர ஸன்யாஸியாக வேடம் பூண்டு தாருகாவநத்தில் தவம் புரியும் அம்மஹர்ஷிகளிடம் சென்று பிக்ஷை கேட்டார். அவர்கள் இவருக்கு ஒன்றும்

கொடாதிருந்தனர். அவர்களது மனைவிகள் கந்தமூலங்களைக் கையிலேந்தி கைலாஸ நாதனுக்களித்து அவரது அழகிய ரூபத்திலீடுபட்டு மெய் மறந்து அவர் பின் சென்றனர். இதைக்கண்டு முனிவர் கோபங்கொண்டனர். அம்பிகாபதியின் லிங்கமறுந்து கீழே விழக்கடவதென சபித்தனர். அங்ஙனமே லிங்கம் விழுந்தது. சராசர வஸ்துக்கள் ப்ரமித்து நிற்க பகவான் தேவியினிடம் சென்று காமக்ரோதமகலாத வாலகில்யர்களுக்கு எங்ஙனம் அருள்புரிவதென்று கேட்டார். தேவி வாய்திறவாது நின்றாள். முனிவர் தம்பத்நிகளது பக்தியைக்கண்டு வந்தவர் பரமசிவ மென்றுணர்ந்து வருந்தி பிரும்மனைச் சரணமடைந்தனர். அவர் விருஷவாஹனனைச் சரணமடையுங்களென்றார். அங்ஙனமே தவஸிகள் பரமாத்மாவைப் ப்ரார்த்திக்க பகவான் ப்ரத்யக்ஷமாகி சிவலிங்க பூஜையை உபதேசித்து மறைந்தார்.

தாருகாவனத்திலுள்ள சிவலிங்கத்தை ஸ்தாணு ஆச்ரமத்தில் ப்ரதிஷ்டை செய்ய மஹர்ஷிகள் முயன்றனர். அது அசைக்க முடியாமற் போகவே பிரும்மனைச் சரணமடைந்தனர். பிரும்மா தேவர்களுடன் கைலாஸஞ் சென்று கைலாஸவாஸியைக் காணமல் த்யானம் செய்தார். அவர் யானை உருவெடுத்து ஸரஸிலிருக்கக் கண்டு அங்கு சென்று அமரர் அரனைத் துதித்தனர். அங்கும் பகவான் ப்ரத்யக்ஷமாகவில்லை. அம்பிகை கையில் கமண்டலுவை ஏந்தி நிற்கக் கண்டு அவளைப் பணிந்தனர். அன்னை அன்புடன் ஸுராருக்கு அமிருதத்தை அளிக்க அதைப் பருகியவுடன் யானை ரூபமான பரமசிவன் ப்ரத்யக்ஷமாகி சிவ லிங்கமாக நின்றார். அதை மனிதர்கள் தங்களுக்கு ஸ்வாதீநமாக்கிக்கொள்வர் என தேவரஞ்சினர். பிரும்மா இந்திரனை அழைத்து மருத்துக்களைக்கொண்டு சிவலிங்கத்தின்மேல் புழுதியை வர்ஷிக்கும்படி கூறினர். அந்த லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட

விடத்தின் அருகே ஸந்நிஹிதம் என்ற தீர்த்தமும் ஓர் வட விருக்ஷமும் உளது. லிங்கத்தின்மேல் படிந்த புழுதியும் ஓர் லிங்கமாக மாறியது. அதை மாமுநிவரெடுத்துச் செல்ல மறு முறையும் மஹேந்த்ரன் ஏழுநாள் புழுதியைக்கொண்டு லிங்கத்தை மூடினன். அதையும் முனிவரெடுக்க இங்ஙனம் ஏழு லிங்கங்கள் உதித்தன. மூல லிங்கத்தருகே உள்ள தீர்த்தம் கிருதயுகத்தில் ஸந்நிஹத்ய மென்றும் திரேதையில் வாயு என்றும் த்வாபர கலியுகங்களில் ருத்ரஹ்ரத மென்றும் வழங்கப் படுகிறது. அதனருகே ராவணன் கோகர்ணத்தையும் மேக நாதன் ஸித்திதத்தையும் கும்பகர்ணன் விபீஷணன் கர தூஷணன் முதலியவர்கள் மற்ற லிங்கங்களையும் பிரதிஷ்டை செய்து பூஜித்தனர். ஹாரீதர், மிருகண்டர், சித்ராங்கதன், விஷ்ணு, கார்த்தவீர்யன், ஹநுமான் முதலியவர்கள் சிவ லிங்க பூஜையால் கோரிய பயனைப் பெற்றனர்.

ஸ்தாணு தீர்த்தம். மநுவினது முகத்திலிருந்து க்ஷுவ தன் என்றோர் புதல்வன் பிறந்தான். அவனது மனைவி பயை என்ற யமதர்மராஜனது புதல்வி. அதனல் இவ்விருவர்களுக்கும் வேநன் என்ற ஓர் துஷ்டபுத்ரன் ஜனித்தான். இவன் செய்யும் அநீதியைக் கண்டு மநம் நொந்து க்ஷுவதன் வநஞ் சென்று தவம் செய்து நற்கதி பெற்றன். வேநன் அரசு புரியும்போது எவரும் யக்ஞம் தாநம் தவம் முதலியவைகளைச் செய்யக்கூடாது. தன்னையே தைவமாகப் பூஜிக்க வேண்டு மென்று உத்திரவிட்டான். மஹர்ஷிகள் வந்து இவனுக்கு நற்புத்தி புகட்ட அதை அவன் ஏற்காது அவர்களை நிந்தித்தான். ஆதலால் அவர்கள் வேநனைச் சபித்துக் கீழே தள்ளி அவனது இடது கையைக் கடைந்தனர். அவனுடைய பாபத்தால் பயங்கரமாக ஓர் மனிதன் உண்டாக, அவனை நிஷாதனெனும் வேடனுக்கி வலது கையைக் கடைந்தனர். அதிலிருந்து ஸகல ஜநங்களுக்கும் ஹிதனக, ராஜனெனும் பெயருக்

கேற்ற ஒருபுதல்வனுண்டானன். அவன் தன் தந்தை மிக பாபியாயிருந்ததால் எச்சரீரத்தை எடுத்துத்துன்புறுகிருரோ என வருந்தினன். தற்செயலாக நாரதமுனி வந்து மிலேச்ச ஜாதியில் குஷ்டரோகியாக வேநன் பிறந்திருக்கிறுனென்ருர். ராஜனுமங்கு குஷ்டரோகியான மிலேச்சனைக் கண்டு தந்தை என்றுணர்ந்து வருந்தினன். ஓர் பல்லக்கின் மீது அவரை வைத்துத் தூக்கிவந்து ஸ்தாணு தீர்த்தத்தில் அவருக்கு ஸ்நாநம் செய்துவைக்க ஆரம்பித்தான். அது ஸமயம் ஆகாசத்தில் வேதநிந்தை செய்த மஹா பாபியான இவனைக்கொண்டு தீர்த்தத்தைக் கெடுக்காதே! என்று ஓர் சப்தங்கிளம்பியது. உடனே ராஜன் கண்ணீர் விட்டு என் தந்தையின் பாப மகல யான் அவரை இங்கு அழைத்து வந்தேன்; இங்கும் ஸ்நாநம் செய்யக் கூடாதெனில் அவர் கதியாது? என்று கதறினன். இதைக் கேட்டதேவர்கள், ராஜனே! இத்தீர்த்தத்தில் நீ ஸ்நாநம் செய்து அவனுக்குக் கரையில் அபிஷேகம் செய்துவை ஸகல பாபமு மகன்றபின் அவன் நற்கதி பெறுவானென்று கூறினர்.

இதனிடையில் யமனது ஸபையிலிருந்து தேவர்களுடைய ஸொத்துகளைக் காக்கும் ஸாரமேயனென்ற தாஸன் அஸுரர் தேவஸ்வத்தைக் கொண்டு போகும் போதுபார்த்துக்கொண்டே பேசாமலிருந்தான். அதைக்கண்டுசினங்கொண்ட யமன் அதைப் புவியில் ஸாமான்ய நாயாகப் பிறக்கும்படி சபித்தார். அந்நாய் தாஹத்தால் வாடி ஸ்தாணு தீர்த்தத்தைப் பருகி அதன் கரையிலுள்ள மடத்தில் ஏதேனும் உணவு கிடைக்காதா என்று நுழைந்தது. புண்ய தீர்த்தத்தில் புனலாடி பாபமகன்றவேநனும் ராஜனுமங்கு அதைக்கண்டனர். வேநன் அந்நாயைக் கையால் தொட்டான். உடனே அது பயந்துதுள்ளி ஸ்தாணுதீர்த்தத்தில் விழுந்துகரை ஏறி உடலை உதறியது. அதன் மேலிருந்த ஜலம் பட்டவுடன்

வேநனது மிலேச்ச உடலகன்று அவனுக்குத்திவ்ய தேஹமுண்டானது. கைகூப்பி கைலாஸநாதனைப்பணிந்து உருக்கமாகத்துதித்தான். பகவான் ப்ரத்யக்ஷமாகி வேநனைப்பார்த்து, நீ அடுத்த பிறவியில் ஹிரண்யாக்ஷனுக்கு அந்தகன் எனும் புதல்வனாகப் பிறந்து பூர்வஜந்ம துர்வாஸனையால் அம்பிகையைக்கண்டு காமங்கொள்வாய். யான் சூலத்தால் உன்னைக்குத்திக்கொன்று ப்ரிங்கிரிடன் என்ற சிவகணமாக்கி என்னருகே நீ வஸிக்கும்படி செய்வேன்! என்று அருள்புரிந்தார். வேநன் தனக்குப் பேருபகாரம் செய்த ஸாரமேயனுக்கும் ஸ்வர்க்கத்தை அளிக்கும்படி வேண்டினன். அங்ஙனமே பகவான் அருளளித்து கைலாஸஞ் சென்றார். வேநன் தன் பொருட்டு ராஜ்ய ஸுகத்தையுமிழந்து தொண்டு புரியும் உத்தம புதல்வனை ஆசிர்வதித்து விமானமேறிச் சென்றான். ராஜனும் ராஜ்யத்திற்கு வந்து பல யாகங்களைச்செய்து ஸத்புத்ரர்களைப் பெற்று அவர்களிடம் ராஜ்யபாரத்தை வைத்து குருக்ஷேத்ரம் சென்று தவத்தால் உடலைவிட்டு அழியாப் பதவியைப் பெற்றான்.

ஒரு ஸமயம் உலகைப் படைக்கக் கருதிய நான்முகன் சில ஜீவராசிகளைப் படைத்துவிட்டு இன்னும் எதைப்படைப்பது என யோசித்திருந்தார். உடனே அவருடைய சரீரத்திலிருந்து ஓர் அழகிய கன்யகை தோன்ற, அவளிடம் காமனை கொண்டு கமலாஸனன் ஓடினன். அவருடைய ஐந்தாவது தலை வெடித்தது. உடனே அவர் பரமசிவனைநாடித் தவம் புரிந்தார். பகவான் ப்ரத்யக்ஷமாகி "யான் வாராஹ கல்பத்தில் உனது ஐந்தாம் சிரத்தை அறுத்தேனாதலால் ஒவ்வொரு கல்பத்திலும் எக்காரணம் பற்றியாவது உனது ஐந்தாம் தலை அழியும்" என்று கூறி மறைந்தார். பிறகு பிரும்மன் நான்கு சிவலிங்கங்களைப்படைத்து குருக்ஷேத்ரத்திலும் மற்றவிடங்களிலும் அவைகளை ப்ரதிஷ்டை செய்து பூஜித்தார்.

# பார்வதி பரிணயம்.

ப்ருஹஸ்பதியுடன்கூட ஸகல தேவர்களும் ஒன்றுகூடி குருக்ஷேத்ரம் சென்று புண்ய தீர்த்தத்தில் புனலாடி பகவானைப் பணிந்து பித்ருக்களை நாடி ச்ராத்தம் செய்தனர். பித்ருக்களும் தேவ கார்யத்தை நாடி தங்களது தநயையான மேனையை ஹிமாலயத்திற்களித்து விவாஹம் செய்து வைத்தனர். மேனை ராகினீ குடிலா காலி என்ற மூன்று பெண்களையும் ஸுநாபனென்ற புதல்வனையும் பெற்றாள். அப்பெண்கள் ஆறு ஆண்டு ஆவதற்குள்ளாக தவம் செய்யச் சென்றனர். தேவர்கள் குடிலை என்பவளை ப்ரஹ்மலோகத்திற்கழைத்துச் சென்றனர். நான்முகன் இவளைப் பார்த்து இவளால் சிவ தேஜஸ்ஸைவஹிக்க முடியாதென்றார். குடிலை கோபங்கொண்டு, பிரும்மன்! நாராயணனை நாடித் தவம் புரிந்து பரமசிவனது சக்தியை யான் வஹிக்கும்படி பலம் பெற்று சிவன் தலையை வணங்கும்படி செய்கிறேன் பார்! என்றாள். சதுர்முகன், பெண்ணே! என் சொல்லை நீ மீறியதால் ஜலமாவாய் என்று சபித்தார். அவள் கோபித்து பிரும்ம லோகத்தைத் தனது ப்ரவாஹத்தால் நாசம் செய்யக்கருதினாள். நான்கு வேதங்களாலும் நான்முகனவளைக் கட்டி விட்டார். தேவர்கள் ராகினீ என்ற இரண்டாவது கன்யகையை அழைத்துவர இவளால் சிவ சக்தியைப் பரிக்க இயலாதென்று பிரும்மா கூறினார். ராகினீ தவத்தால் தான் மஹிஷனைக் கொல்லும் மாதேவன் புதல்வனை வஹிக்கத்தக்க சக்தி பெறுவதாகக் கூறினாள். தன் சொல்லை மீறிய அவளையும் ஸந்த்யையாகும்படி அவர் சபித்தார். அவள் கிருத்திகா நக்ஷத்ரமாகி தவம் புரிந்தாள். மூன்றாவது பெண்ணான காலி கைலாஸநாதனைக் கணவனாகப் பெற காநகம்

சென்று கடுந்தவம் புரிந்தாள். அவளது தாய் உ-பெண்ணே! மா-வேண்டாம்! தபஸை நிறுத்து என்று அவளை அழைக்க அன்றுமுதல் தேவிக்கு உமா என்றோர் பெயர் வழங்கியது. தந்தை சொற்படி தபஸை நிறுத்தி தேவியும் தன் வீடு வந்தாள். அம்பிகையைப் பிரும்ம லோகமழைத்துச் செல்ல தேவரவளருகே வந்து அவளது காந்தியால் கிட்டே நெருங்க முடியாது பிரும்மனைச் சரணமடைந்தனர். அவர் அம்பிகையினிடம் தாரகாதிகளைக் கொல்லும் அரனம்சம் ஜனிக்குமென்று கூறி தேவர்களை அனுப்பினுர். தற்செயலாக சந்த்ரசூடன் ஹிமாலயம் வர கிரிராஜனவரைப் பணிந்து இம்மலையிலேயே வஸிக்கும்படி வேண்டினுர். அங்ஙனமே மாதேவன் தனது கணங்களோடு வஸிக்கும்போது பார்வதி அவரை நமஸ்கரித்தாள். உடனே அவர் இது யுக்தமல்ல என்று கூறி கணத்தோடு மறைந்து விட்டார்.

தேவி மிக்க மநம் நொந்து சிவனைப்போல் ஸகிகள் ஓர் விக்ரஹம் செய்து வைக்க அவரை நாடி மிகக் கடுமையாக தவம் புரிந்தாள். பகவான் பிரும்மசாரி வேடம்பூண்டு அவளை அணுகி ஏன் தவம் புரிகிருய் என்று வினவினுர். ஸோமப்ரபை எனும் அவள் ஸகி உண்மையைக்கூற பகவான், பிக்ஷுகனுன சிவனே உனக்கேற்ற கணவன் என்ருர். தேவி சிவநிந்தையைக் கேட்க மநமில்லாது எழுந்து செல்ல பகவான் ப்ரத்யக்ஷமாகி நீ அர்ச்சித்த எனது விக்ரஹம் பத்ரேசம் எனப்படும். ஸப்தரிஷிகளை அனுப்பி உன்னை மணந்து கொள்ள ஏற்பாடு செய்கிறேன் என்று கூறி மறைந்தார். அவர் கைலாஸகிரி சென்று ஸப்தரிஷிகளை மநதால் நினைக்க அவர்கள் விரைவாக வந்து விருஷபத்வஜவனை வணங்கி யாது ஆக்ஞை? என்று வினவினர். சம்பவும் அவர்களை வரவேற்று ஆசிர் வதித்து ஹிமாலயத்தினிடம் சென்று உமையைத் தனக்கு அளிக்கும்படி கேட்க ஆணை யிட்டார்

கச்யபர் அத்ரி வஸிஷ்டர் விச்வாமித்ரர் கௌதமர் பரத்வாஜர் ஆங்கீரஸர் என்ற இவ்வேழு மஹர்ஷிகளும் வஸிஷ்ட பத்நியான அருந்ததியுடன் ஹிமாலயஞ் சென்றனர். ஹிமயகிரி அவர்களைத் தக்கபடி பூஜித்து ஆஸநத்திலமர்த்தி வந்த விஷயத்தை அறிந்தான். உடனே ஸகல பர்வதங்களையுமழைத்து உமையைப் பரமசிவனுக்களிக்கலாமா? என யோசித்தான். உதயன் ஹேமகூடன் ரம்யகன் மந்தரன் உத்தாலகன் வாருணன் வராஹன் கருடாஸநன் சுக்திமான் வேகஸாநு த்ருடசிருங்கன் சிருங்கவான் சித்ரகூடன் திருகூடன் முதலிய பர்வதங்கள் தங்கள் அரசனை ஹிமாலயத்தைப் பணிந்து துதித்து ஏக மநதாக பார்வதியைப் பரமாத்மாவிற்களிக்க இசைந்தனர். பர்வதராஜன் தன் மனைவியான மேனையை அழைத்து அவளெண்ணத்தைக் கேட்டான். அவளுமதை ஆமோதிக்க விவாஹ திநத்தைக் குறிப்பிட்டுவிட்டு ஏழு ரிஷிகளும் சங்கரரிடம் வந்து இதை அறிவித்தனர்.

நந்தியினது ஆணையின்படி மஹா விஷ்ணு முதலிய ஸகல தேவர்களும் மஹாதேவன் வஸிக்கும் மந்த்ர மலைக்கு வந்து சேர்ந்தனர். அதிதி ஸுரபி ஸுரமை என்பவர்கள் பரமாத்மாவிற்கு விவாஹத்திற் கேற்ற அலங்காரங்களைச் செய்தனர். விருஷபாரூடராகச் செல்லும் ஸுந்தரேசனுக்கு இருபுறத்திலும் விஷ்ணுவும் பிரும்மாவும் செல்ல ஐராவதத்தின்மீதிருந்து இந்த்ரன் பின்நின்று வெண்குடை பிடிக்க கங்கையும் யமுனையும் சாமரம் வீச கந்தர்வ கணம் பாட கிங்கரர் வாத்யஸேவை செய்ய அப்ஸரஸுகள் ஆட பகவான் ஆகாச வீதியில் புறப்பட்டார். பதினேருகோடி ருத்ரரும் பனிரண்டு கோடி ஆதித்யரும் எட்டுகோடி வஸுக்களும் அறுபத்தேழு கோடி கணங்களும் இருபத்திநான்கு சிவகணங்களும் பகவானுடன்கூட கிளம்பிற்று. ஹிமவான் ஸகல தேவர்களையும் மாதேவனேடு நன்கு வரவேற்று பூஜித்து ரத்நவேதியில் பார்

வதியை அமர்த்தி வந்த வரனை அர்ச்சித்து, புலகன் பேத்தியும் என் கன்யகையும் பித்ருக்களின் தௌஹித்ரியும் மேனையின் பெண்ணுமான பார்வதியைத் தமக்குக் கன்யாதானம் செய்கிறேன். அவளை ஏற்று அருள்புரியவேண்டும் என்றார். மஹாதேவர் தனக்குத் தாயுமில்லை தந்தையுமில்லை என்று கூறி தேவியை ஏற்றுக்கொண்டார். பிரும்மா அருகிலிருந்து ஸகல வைதிககார்யங்களையும் செய்துவைத்தார். பார்வதிக்குத் தோழியும் பரமசிவனது பக்தையுமான மாலினீ என்பவள் பரமாத்மாவினது பாதாரவிந்தங்களைப் பிடித்துக்கொண்டு தன் தோழிக்குப் பூர்ண ஸம்பத்தை அளிக்க வேண்டும் என பிரார்த்தித்தாள். பகவான் உமாதேவியைச் சங்க சக்ர கதாபாணியான மஹாவிஷ்ணுவாகச் செய்து போதுமா? என்றார். அதைக்கண்டு எல்லோருமாநந்தித்தனர். பார்வதிதேவியின் அழகைக் கண்டு சதுர்முகனுக்கு மோஹமுண்டாக இந்த்ரியம் ஸ்கலநமாகி மணலில் விழுந்தது. அதை அவர் ஒருவருமறியாமல் மணலில் மறைக்க ஆரம்பித்தார். இதை ஞானக்கண்ணாலறிந்து கைலாஸநாதன், அதிலிருந்து எண்பத்தெட்டாயிரம் வாலகில்ய ரிஷிகள் ஜநிக்கப்போகின்றனர். அதைத் தடுக்காதே என்று பிரும்மனைப் பார்த்துக் கூறினார். அங்ஙனமே மஹர்ஷிகள் உண்டாகி கௌரீகல்யாண வைபவத்தைக் கண்டு ஸந்தோஷித்தனர். பரமாத்மாவினது விவாஹ வைபவத்தைக் கண்டு ஸகல ப்ராணிகளும் ஸந்தோஷமடைய உமாபதி விருஷபத்தின் மீதேறி கைலாஸஞ் சென்றார்.

## விநாயகர் அவதாரம்.

பரமசிவன் விச்வகர்மாவை மனதால் நினைத்தார். உடனே அவன் ஓடிவந்து வணங்கி யாதுகார்யமென பிரார்த்தித்தான். உமையுடன் தான் ச்ருங்காரமாக வஸிப்பதற்

கோர் கிருகம் நிர்மாணம் செய்யும்படி பகவானுக்குஜ்ஞையிட்டார். நாற்பத்தாறு யோஜனை தூரம் விசாலமுள்ளதான ரத்னங்களாலாகிய ஓர் அழகிய அரண்மனையைப் படைத்து மயன் பகவானுக்களித்தான். ஆங்கு ஆதிதம்பதிகள் வைதிக கர்மானுஷ்டானங்களைச் செய்து யௌவன ஸுகத்தையு மனுபவித்தனர். ஓர் ஸமயம் அம்பிகாபதி அன்னையைப் பார்த்து கறுப்பாயிருக்கிறாயே என்று பரிஹஸித்தார். உடனே தேவி கோபங்கொண்டு ஆகாசமார்க்கமாகச்சென்று ஹிமயமலையின் சிகரத்திலமர்ந்து ஸகிகளை நினைத்தாள். உடனே ஜயா விஜயா ஜயந்தீ அபராஜிதா என்ற தோழிகள் அம்பிகையின் அருகில் வந்து தேவிக்குப் பணிவிடை செய்தனர். பார்வதி நூறாண்டு பூமியில் ஒரு காலால் நின்று கடுந்தவம் செய்தாள். ஓர் புலி தேவி கீழே விழுந்தால் அவளைத் தாங்கிப் பிடிப்பதற்காக அவளருகே ஏகாக்ரசித்தமாக நூறாண்டு நின்றுக்கொண்டிருந்தது. பிரும்மா தேவியினருகே வந்து யாது வரம் வேண்டுமென்றார். அம்பிகை முதலில் புலிக்கு வரமளியுமென்றாள். அங்ஙனமே அவர் அதைக் கணங்களுக்குப் பதியாகவும் பக்தனாகவும் செய்து தேவி கோரியபடி ஸ்வர்ணவர்ணமான சரீரத்தை அம்பிகைக்களித்தார். தேவியினது கறுப்பான உடல் கௌசிகீ என்ற பெயரோடு தனியாகக் கிளம்பியது.

அதைத் தேவேந்த்ரன் வணங்கி தங்களுக்கு ஸஹாயமாக விந்த்யாசலத்தில் வஸிக்கும்படி பிரார்த்தித்தான். அங்ஙனமே தேவி உத்திரவிட கௌசிகி காத்யாயனி விந்த்யாசல நிவாஸினீ என்று அதற்குப் பல நாமங்களுண்டாயின. பின்னர் பார்வதீ கௌரீ என்ற பெயருடன் பரமாத்மாவினிடம் செல்ல இருவருமாக காமமோஹத்தில் ஆயிரமாண்டு அமிழ்ந்திருந்தனர். அதனால் பதினாலு லோகமும் நடுங்கிற்று. தேவர்கள் சதுர்முகனைச் சரணமடைந்தனர். நான்முகன்

அமரரைப்பார்த்து, தேவியின் வயிற்றில் பகவதம்சத்தால் குழந்தை ஜநித்தால் தேவேந்த்ர பட்டத்தை அது அபஹரிக்கும் என்றார். ஆதலால் ஸகல தேவர்களும் ஒன்றுகூடி கைலாஸம் சென்றனர். வாயிற்படியிலுள்ள நந்தியைக்கண்டு அஞ்சி அக்நியை உள்ளே அனுப்பினர். அவர் ஹம்ஸவேடம் பூண்டு உள்ளேபுகுந்து மஹாதேவரது தலையினருகே நின்று தேவர்கள் வாயிற்படியில் நிற்கின்றனர் என்றார். அதைக் கேட்டு கங்காதரன் அக்நியுடன் வெளியில் வந்து தேவரை நோக்கி யார் எனது வீர்யத்தை வஹிக்கச் சக்தியுள்ளவர் என்று கேட்டார். எல்லோருமசைவற்று நிற்க அக்நிதான் வஹிப்பதாகக் கூறினார். பகவான் தனது அம்சத்தை வந்நியினிடம் விட்டு தேவிக்கு நடந்த கதையைக் கூறினார். அம்பிகை தனக்கு கர்ப்பமில்லாமல் செய்த தேவருக்கும் குழந்தைகள் பிறக்காதென சாபமளித்தாள்.

உடனே தேவி ஸ்நாநம்செய்ய மாலிநீ என்ற தோழியை அழைத்தாள். அவள் வாஸனைத் தைலத்தைக் கொண்டு தேவியின் தேஹத்தைப் பிடித்தாள். உமை தன் சரீரத்திலுள்ள மலங்களைத் திரட்டி நாலு கையும் பெருத்த வயிறும் யானைமுகமுமுள்ள ஒரு விக்ரஹத்தைச் செய்தாள். பிறகு மாலினீ, தேவிக்கு ஸ்நாநம் செய்து வைக்கும்போது புன்னகை புரிந்தாள். யாது காரணம்பற்றி சிறித்தாயென்று உமை வினவ தமக்குக் குழந்தை பிறக்கப்போவதாக பகவான் கூறினார்; ஆதலால் சிறித்தேனென்றாள். அன்னையும் சிசு ஜநிக்கவேண்டுமென்றாசையோடு ஸ்நாநம் செய்து வந்தாள். அம்பிகை உட்கார்ந்த இடத்தில் பரமசிவனுமமர்ந்து எண்ணெய் தேய்த்துக்கொண்டே அம்பிகையின் தேஹமலத்தால் செய்த விக்ரஹத்தைத் தொட்டார். உடனே அது கணபதியாக வந்தது. அது நாயகனன்றி பிறந்ததால் விநாயகரெனப் பெயரிட்டு அவருக்கு ஸஹாயமாக பல கணங்

களையும் படைத்து தேவியினிடம் உன் குழந்தையைப்பாரென்று பகவான் கூறினர். உடனே தேவி அன்புடன் குழந்தையைக் கட்டி முத்தமிட்டு உன்னை அர்ச்சிப்பவரது விக்நத்தை நீக்குவாயாக என்றாள்.

## சண்டமுண்ட வதம்.

கச்யபருக்கு தநு என்பவளிடம் சும்பன் நிசும்பன் நமுசி என மூன்று ராக்ஷஸர்கள் உண்டானார்கள். மூவரும் பராக்ரமசாலிகளாய் பரமனை ஆராதித்துப் பல வரம் பெற்றனர். நமுசியைக்கொல்ல இந்த்ரன் வஜ்ராயுதத்தை எடுத்தான். இதை அறிந்த நமுசி ஸூர்யனுடைய ரதத்தில் பதுங்கிக்கொண்டான். சதமகன் அவனை ஈரமான பொருளாலன்றி ஆயுதத்தால் கொல்வதில்லை என்று கூறிச் சென்றான். நமுசி தனக்குச் சாவில்லை எண்ணெண்ணி நீராடச் சென்று ஆங்குள்ள நுறையை எடுத்து இது ஈரமான பொருளே! இதனால் என்னை இந்த்ரன் கொல்வதானால் கொல்லட்டுமென்று தன்மேல் பூசிக்கொண்டான். உடனே அதில் இந்திரன் வஜ்ராயுதத்தை அனுப்ப நமுசி அதனாலடிபட்டிறந்தான். நமுசியைக் கொன்றதனாலுண்டான பாபத்தை அவன் நதீ ஸ்நாநங்களால் நிவர்த்தி செய்தான். இதைக் கண்ட சும்பநிசும்பர்கள் மிகக் கோபங்கொண்டு தேவநகரத்தைக் கொள்ளையடித்து தேவர்களை விரட்டிவிட்டு மூவுலகையும் தாங்களே ஆண்டனர். இச்சமயத்தில் பாதாளத்திலுள்ள ராக்ஷஸர்கள் வெளிவந்துலாவினர். மஹிஷாஸுரனது மந்திரிகளான ரக்த பிந்து சண்டமுண்டன் ஆகிய இம்மூவரும் சும்பநிசும்பர்களுடன் சேர்ந்து மஹிஷா ஸுரனைக்கொன்ற தேவியைச் சும்ப நிசும்பரில் ஒருவருக்கு மணம் செய்விப்பதென தீர்மானித்தனர். சும்பன் ஸுக்ரீவனெனும் தூதனையனுப்பி காத்யாயநீ தன்னை மணக்கும்படி சொன்னான். தேவி

தன்னைப் போரில் வெல்பவரையே தான் மணப்பதாகக்கூற, தூம்ராக்ஷனை அனுப்பி அம்பிகையைப் பலாத்காரமாகத் தூக்கிவரச் சொன்னான். தேவி அவனை ஹுங்காரத்தால் பஸ்மமாக்கினாள். பிறகு சும்பன் சண்ட முண்டர்களை எண்ணிறந்த ஸேனைகளுடன் தேவியோடு போர்புரிய அனுப்பினான். தேவியினது வாஹனமான ஸிம்ஹம் அரக்கர்படை அனைத்தையும் அரைக்ஷணத்தில் அழித்தது. தேவியினது புருவத்திலிருந்து ஓர் பயங்கரமான யோகினி கிளம்பி சண்ட முண்டர்களது ஸேனைகளுடன் சண்டையிட்டு பலரைக் கொன்றாள். சண்டமாரீ என்ற பெயர்பெற்று இவள் யமனது வாஹனமான எருமையின் கொம்பைமுறித்து அதைக் கையிலேந்தி சண்ட முண்டர்களைத் துறத்தினாள். வழியில் உக்ரமான இவளது ரூபத்தைப்பார்த்து கருடன் இறக்கைகள் உதிர்ந்தன. அந்த றக்கைகளைத் தொடுத்து மாலையாக அணிந்து கார்க்கோடகனைக் கயிறாகக்கொண்டு சண்டமுண்டர்களைக்கட்டி வந்தாள். கௌசிகி அவர்களுடன் போர்புரிந்து அவர்கள் தலையை வெட்டி மாலையாக அணிந்துகொண்டாள். அதுமுதல் அவள் சாமுண்டா என்றழைக்கப்பட்டாள்.

பிறகு சும்ப நிசும்பர் ரக்தபீஜனை முப்பதுகோடி ஸேனையுடன் போருக்கனுப்ப அம்பிகையின் அருளால் இந்த்ராணீ வாராஹீ நாரஸிம்ஹீ வைஷ்ணவீ கௌமாரீ மாஹேச்வரீ முதலிய சக்திகள் தோன்றி அரக்கர் படையை அழித்தன. ரக்தபீஜன் வீராவேசங்கொண்டு மாத்ருகணங்களை எதிர்க்க கௌசிகி அவனுடலிலிருந்து பெருகிவரும் ரத்தத்தை அது கீழே விழுந்து ராக்ஷஸனாவதற்குள் குடித்துவிடும்படி கட்டளையிட்டு பாணவர்ஷங்களால் அவனைக்கொன்று அட்டஹாஸம் செய்தாள். இந்த நாதத்வனியைக் கேட்டு பரமசிவனங்குவர அவரையே சும்பநிசும்பர்களிடம் தூதனுப்பி தேவர்களிடம் ராஜ்யத்தை ஒப்படைத்துப் பாதாளம் செல்.

அல்லது போருக்குவா என்று தேவி கூறினள். அவ்விருவரும் தேவியுடன் யுத்தத்திற்கு வந்து மிகபயங்கரமாகப் போர் புரிந்து இருவரும் மாண்டனர். தேவகணங்கள் பூமாரி பொழிந்து தேவியைத் துதித்தனர். அன்னை சாந்தவடிவமாகி அஸுரர்களால் அமரருக்குத் துன்பம் நேரும்போது தான் வந்து அவர்களைக் கொல்வதாக வாக்களித்தாள். த்வாபரயுகத்தில் யசோதையின் வயிற்றில் பிறந்து பல அரக்கர்களைக் கொல்வதாகக் கூறி மறைந்தாள்.

## குமார ஜநநம்.

அக்நிபகவான் ஐயாயிரமாண்டு பரமசிவத்தின் தேஜஸைச்சுமந்து அதனல் காந்தி குன்றி உடல் இளைத்து தேவர்களைச் சரணமடைந்தார். அமரரனைவரும் வந்நியுடன் ஸத்யலோகம் சென்று பணிந்து பிரும்மனிடமிதை அறிவித்தனர். நடுவழியில் குடிலை எனும் பார்வதியின் ஸஹோதரியைக் கண்டு அக்னி "இச்சிவசக்தியை நீ வஹித்தால் அழகிய புதல்வனைப் பெறுவாய்" என்றார். அவள் ஏற்கனவே இதற்காகத் தவம் புரிந்தவளாதலால் அன்புடன் இதை ஏற்றுக் கொண்டாள். அக்நி சிவதேஜஸைச் சுமந்ததால் அவன் உடலெல்லாம் ஸ்வர்ணவர்ணமாக ஆனது. ஐயாயிரமாண்டு சுமந்தும் குழந்தை பிறக்காததால் குடிலை பிரும்மாவினிடஞ் சென்று கர்ப்பம் வெளியாகவழி என்ன? என்று வினவினள். அவர் 'உதயகிரிக்குச்சென்று நூறுயோஜனை தூரம் விசாலமாயுள்ள சிவனுடைய சரவணத்திலிதை விடு, என்றார். அங்ஙனமே அவள் செய்ய ஆங்குள்ள புற்பூண்டுகளும் செடிகொடிகளும் ஸ்வர்ண மயமாக மாறின. அச்சரவணப் பொய்கையில் ஆயிரமாண்டு சென்றபின் கோடி ஸூர்ய ப்ரகாசனுக ஓர் உத்தம குழந்தை உண்டாகி கால்கட்ட விரலை வாயில் வைத்துக்கொண்டு மிக அழகாக அழுதது. தற்செய

லாக அங்கு வந்த ஆறு கிருத்திகா நக்ஷத்ரங்கள் இக்குழந்தைக்குப் பரிவுடன் பாலளிக்க நான் முன்னே நான் முன்னே என்று போட்டிபோட்டனர். இவர்களிடம் கருணைகொண்ட குமரக்கடவுள் ஆறுமுகங்கொண்டு அறுவரிடமும் ஏககாலத்தே பாலருந்தினார். இதனிடையில் பிரும்மா அக்னியை நோக்கி உனது குழந்தை எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கிறான் என்று கேட்டார். வன்னி குழந்தை பிறந்தாலல்லவோ வளருதலைவினவவேண்டும் என்றார். சதுர்முகன் சரவணத்தில் ஸுப்ரமண்யன் பிறந்ததைக்கூற அக்நி ஆவலுடன் அங்கு விரைவாக ஓடினார். இவரது வேகத்தைக் கண்ட குடிலை கனல்தேவன் கனவேகமாகச் செல்லும் காரணம் யாதோ என்றாள். எனது குழந்தையைக் காண சரவணம் செல்கிறேனென்று அவர் கூற குடிலை, ஆஹா! அவன் என் மகனன்றோ? என்று அவளும் அங்கு விரைந்து சென்றாள்.

குடிலையும் கனலும் என் மகன் என் மகன் என சண்டையிட்டோடுவதைக் கண்ட கமலாக்ஷன் அவர்களை நிறுத்தி பரமசிவனிடம் சென்று இவன் யார் புதல்வன் என்றறியுங்கள் எனக்கூறி சென்றார். அவர் சொற்படி இருவரும் கைலாஸநாதனிடம் சென்று வினவ அங்கும் சிவன் என் மகன் என்றும் உமை என் மகன் என்றும் கூறி வாது செய்தனர். பார்வதீ பரமசிவனைப் பார்த்து “தேவ! நாமெல்லோருமங்கு செல்வோம். அக்குழந்தையையே கேட்போம். அது சொல்வதுபோல் நடப்போம்” என்றாள். அங்ஙனமே எல்லோருமங்கு சென்றனர். இவர்களது எண்ணத்தை அறிந்த யோகீச்வரனான குஹப் பெருமான் நாலுருவமெடுத்து வந்த நால்வரிடமும் சென்றார். எல்லோரும் பேரன்புடன் சிசுவைக் கட்டி முத்தமிட்டனர். சங்கரன் கிருத்தி

ஸ்ரீதாராம தபோவன

கைகள் பால்கொடுத்ததால் கார்த்திகேயன், குடிலை சக்தியைச் சுமந்ததால் அவள் புதல்வனானபொழுது குமரன், கௌரியின் மூலமாக சக்திதோன்றியதால் அவள் புத்ரனாகும் பொழுது ஸ்கந்தன், என் புதல்வனானபோது குகன், அக்நி சுமந்ததால் மஹாஸேனன், சரவணத்திலிருந்ததால் ஸாரஸ்வதன்என்றும் இவனுக்குப் பெயர் என நாமகரணம் செய்தார். இந்த ஆறு ஸம்மந்தமிருத்தலால் ஷண்முகன் என்றும் அவருக்குப் பெயருண்டானது. மிக அற்புதமான இக்குழந்தையைக் கண்டு ஸகல தேவர்களும் ஸந்தோஷமடைந்து குருக்ஷேத்திரம் சென்று குழந்தைக்கு ஸேனாதி பதியாகப் பட்டாபிஷேகம் செய்வோமென ஈசனைப் பணிந்து ப்ரார்த்தித்தனர். அவ்வண்ணமே குகனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தது. பரமசிவன், கண்டாகர்ணன் லோஹிதாக்ஷன் நந்திஷேணன் குமுதமாலி என்ற நான்கு ப்ரமதகணங்களைச் சரவணபவனுக்குக் காணிக்கையாக அளித்தார். அங்ஙனமே பிரும்மா முதலிய தேவர்களும் வஸுக்களும் பித்ருக்களும் ஸித்தர்களும் மாத்ருகணங்களும் கந்தர்வ கின்னர கிம்புருஷர்களும் மலைகளும் நதிகளும் பக்ஷிகளும் பன்னகங்களும் எண்ணிறந்த கணங்களை அவருக்களித்தன. கருடன் தன் புத்ரனான மயிலையும், அருணன் தாம்ப்ரசூடனையும், அக்நி சக்தியையும், பார்வதி வஸ்த்ரத்தையும், பிருஹஸ்பதி தண்டத்தையும், குடிலா கமண்டலுவையும், விஷ்ணு மாலையையும், சிவன் கொடியையும் இந்த்ரன் தன் மார்பிலுள்ள ஹாரத்தையும் பாரிதோஷிகமாக அளித்தனர். தனது தேவ ஸேனையும் கணங்களும் புடைசூழ ஸேனாதிபதி போர் கோலத்துடன் தாரகன் மஹிஷன் முதலியவர்களை ஜயிக்கப் புறப்பட்டார்.

ப்ரயாண காலத்தில் ஸ்கந்தர், தந்தை தாய் கிருத்திகை குடிலை அக்நி முதலியவர்களை நமஸ்கரித்து உத்திரவு பெற்றார். உமை அன்புடன் குமரனைக்கட்டி அணைத்து உச்சி

முகர்ந்து ஆசீர்வதித்து அருகிலுள்ள அச்யுதனை வணங்கி அவராசீர்வாதத்தைப் பெறு என்றாள். பால ஸுப்ரமண்யன் அன்னையைப் பார்த்து, இவர் யார்? என்று வினவ, தேவி, கார்யம் முடிந்தபின் பிரும்மா சொல்வார். உனது பிதா, 'நம்மைத் தவிர அவர் வேறில்லை' என்று எனக்குச் சொன்னார் என்றாள். உடனே பன்னிரு புஜத்தான், பகவானை வணங்கினர். அவர் குழந்தையை ஜயத்துடன் திரும்பும்படி ஸ்வஸ்திவாசநம் சொன்னர். பிறகு ஜயவிஜயீபவ என்று தேவர் கூறும் சப்தம் ஆகாயமளாவி நிற்க வாத்யகோஷமும் ஸேனையின் சப்தமும் பதினன்கு லோகத்திலும் பரவ பகவான் கிளம்பினர். இச் சப்தத்தைக் கேட்ட மஹிஷன் தாரகன் விரோசனன் அந்தகன் கும்பன் நிகும்பன் முதலிய ராக்ஷஸர்கள் திடுக்கிட்டு பயந்து ஓர் ஸபைகூடி இச்சப்தம் எங்கிருந் துண்டானது என்று யோசித்தனர். அச் சமயத்தில் பாதாள கேது என்ற அரக்கன் ஓடி வந்து அவர்களிடம் தெரிவித்தான். யான் பன்றி வேடம் பூண்டு காலவ ரிஷியினுடைய ஆச்ரமத்திற்குச் சென்றேன். அந்த முனிவரையும் அவராச்ரமத்தையும் நாசம் செய்ய யான் ஆரம்பித்தபொழுது வில்லுங்கையுமாக என்னெதிரில் ஒருவன் தோன்றினன். அவன் யாரென யானறியவில்லை. அவனைக் கண்டு யான் பயந்தோட, அவன் என்னைத் துறத்திக்கொண்டே வந்தான். தென் ஸமுத்ரக் கரைக்கு வந்தேன். அங்கு பல பயங்கரமான ஸேனை ஒன்று கூடி நான் மஹிஷனைக் கொல்கிறேன், நான் அந்தகனைக் கொல்கிறேன், நான் தாரகனை வதைக்கிறேன், என்று சப்தம் செய்துக்கொண்டிருக்கக் கண்டேன். அதை யான் கவனிப்பதற்குள் என் பின் வந்தவனது பாணம் என்மேல்விழ அந்த அடி பொறுக்காமல் எனது ஹிரண்யபுரத்தைவிட்டு உங்களைச் சரணமடைந்தேன் என்றான். இதைக் கேட்ட அந்தகா

ஸுரன் அவனைப்பார்த்து, “அஞ்சாதே! இதோ ஒருக்ஷணத்தில் அவன் எவனாயினும் சரி, அவனைக் கொன்று திரும்புகிறேன், என்றுகூறி ராக்ஷஸஸேனையுடன் பூலோகம்சென்றான். ஆங்கு அரக்கருக்கும் அமரருக்கும் உலகம் நடுங்கும் படியான கடும்போர் நிகழ்ந்தது. மாத்ருகணங்கள் ராக்ஷஸர்களைக் கொன்று குவித்ததைக்கண்ட மஹிஷன் கதையால் அவர்களை அடித்துக் கீழேதள்ளி ஸ்கந்தனிடம் போருக்கு வந்தான். சக்ராக்ஷன் எனும் கணாதிபன் அவனை வழிமறுத்து அவனுடன் யுத்தம் செய்தான். கையில் கத்தி ஏந்தி சிவகுமாரனுடன் யுத்தத்திற்கு வந்ததாரகனைக் குஹன் சக்தி ஆயுதத்தால் கொன்றார். தனது ஸஹோதரன் இறக்கக்கண்டு மஹிஷன் பயந்து க்ரௌஞ்ச மலையின் மீது ஏறிபதுங்கிக் கொண்டான். பாணன் முதலியவர் ஸமுத்ரத்தில் குதித்து பாதாளம் சென்றனர். மயூரவாஹநத்தின் மீதேறி சரவணபவன் மஹிஷன் பின்சென்றார். அவன் ஒவ்வொரு மலையாகச்சென்று பின்னால் வரும் ஸேநாபதியைப் பார்த்து பயந்து நடுநடுங்கி முடிவில் க்ரௌஞ்ச குஹையில் புகுந்தான். அம்மலை தனது தாயுடன் பிறந்த ஸுநாபன் என்ற மலையின் மகனாதலால், மஹிஷனைக் மாய்க்கும்பொழுது தனக்கும் தனது மாமன் மகனுக்கும் மனவருத்தம் உண்டாமோ என்றஞ்சி ஸுப்ரமண்யன் அவனைக் கொல்லாமல் திரும்பினார். பிரும்மா விஷ்ணு மஹேச்வரனெனும் மும்மூர்த்திகளும் இந்த்ராதி தேவர்களுடன் குஹனருகே வந்து மலையுடன் மஹிஷாஸுரனைக் கொல் என வேண்டினர். இதைக் கேட்ட காங்கேயன் நகைத்து, ஸ்வபந்துவான க்ரௌஞ்சனைக் கொல்வது நியாயமா? கோ, பிராமணன், கிழவன், தனிகன், பாலன், ஸ்வபந்து, துஷ்ட ஸ்த்ரீ, ஆகிய இவர்கள் குற்றம் செய்தாலுங் கூட இவர்களைக் கொல்லக்கூடாதென் தர்ம சாஸ்த்ரங் கூறுகிறதன்றோ? ஆதலின் யான் க்ரௌஞ்சனைக் கொல்ல மாட்டேன். அக்குஹையி

விருந்து எச்சமயம் மஹிஷன் வெளி வருகிருனே அப்பொழுது அவனைக் கட்டாயம் கொல்கிறேனென்றுர்.

பல ராக்ஷஸர்களுக்கு இடமளித்திருப்பதால் க்ரௌஞ்சனும் கொல்லத்தக்க சத்ருவே ஆவன். அவனைக் கொல்ல குஹனலன்றி வேறெவனுலும் முடியாது. இவரோ பந்து என்ற எண்ணத்தால் அவனைக் கொல்வதில்லை என்கிருர். என் செய்வது? என்று தேவர்கள் யோசித்துக் கொண்டிருந்தனர். இதனிடையில் தேவேந்த்ரன் குஹனைப் பார்த்து "ஸ்வாமின்! பலருக்காக ஒருவனைக் கொல்வது நியாயமன்ருே? எனது ஸஹோதரனை நமுசியை யான் கொல்லவில்லையா? நீர் உண்மையான வீரனுனல் க்ரௌஞ்சனுடன் மஹிஷனைக் கொல்லும்" என்ருன். இதைக் கேட்டதும் ஸுப்ரமண்யனுக்கு மிகக் கோபம் உதித்தது. இந்த்ரா? நீயே பலவான்! உனது பலத்தைப் பார்ப்போம்! வா யுத்தத்திற்கு! என்று அவர் அழைத்தார். இந்த்ரன், நமது பலத்தைச் சண்டையிட்டுப் பரீக்ஷிக்க வேண்டாம். இந்த க்ரௌஞ்ச மலையைக் காலால் பிரதக்ஷிணம் செய்து எவர் முன் வருகிருரோ அவரே பலசாலி என்றறிவோம் என்ருன். அப்படியே ஆகட்டுமென ஸ்வாமி, மயூரத்தை விட்டிறங்கி ப்ரதக்ஷிணம் செய்தார். இந்த்ரனும் ஐராவதத்தைவிட்டு க்ரௌஞ்சத்தைச் சுற்றினன். இருவரும் தான் தான் முன் வந்தது என்று வாதமிடத் தொடங்கி மும்மூர்த்திகளிடம் வந்து, யார் முன் வந்ததெனக் கூறும்படி வேண்டினர். அவர்கள் சற்று யோசித்து தேவ கார்யத்தைக் கருதி இவர்களைப் பார்த்து அந்த க்ரௌஞ்ச கிரியையே கேளுங்கள்! என்றனர். அங்ஙனமே இருவரும் அக்கிரியை வினவ, அது இந்த்ரனே முன் வந்தான் என்றது. அதைக் கேட்டவுடன் மிகக் கோபங் கொண்ட ஸுப்ரமண்யன் சக்தி என்னும் ஆயுதத்தால் மஹிஷனுடன் க்ரௌஞ்ச மலையையும் கொன்ருர். தேவர்கள் தங்கள்

காரியம் முடிந்ததென பேரானந்தம்கொண்டு வானுலகம் சென்றனர்.

பிறகு தன் புதல்வனைக் குஹன் கொன்முன் எனக் கேட்டு, ஸூநாபன் பரம ஆக்ரஹத்துடன் ஓடி வந்தான். அவனையும் கொல்ல குஹன் சக்தியை எடுத்தான். மஹாவிஷ்ணு ஓடிவந்து உனது மாமனைக் கொல்வது நியாயமா? வேண்டாம்! சக்தியை அடக்கு என்ருர். உடனே காங்கேயன் அங்ஙனமே சக்தியை நிறுத்தித் தான் தனது பந்துவைக்கொன்றதற்காக வருந்தினுர். மோஹத்தினுல் இங்ஙனம் செய்யத்தகாத கார்யத்தைச் செய்தேன். ஆதலால் உபவாஸமிருந்து காயக்லேசம் செய்து அப்பாபத்தை அகற்றப்போகிறேனென்ருர். மஹாவிஷ்ணு, ஸ்வாமியைப் பார்த்து "உபவாஸம் செய்யாதே! பூவுலகில் ஸகல பாபத்தையும் போக்கத்தக்க ப்ருதூதகம் என்ரோர் தீர்த்தமுளது. அங்கு ஸ்நாநம் செய்து தீர்த்தக்கரையில் வஸிக்கும் ஜகதீசனைப் பூஜி" என்ருர். அப்படியே தீர்த்தாடநம் செய்து பகவானை ஸ்கந்தன் பூஜித்தார். கைலாஸநாதன் விரைவாக வந்து வீரப் புதல்வனைத் தழுவி அன்ப! உனக்கு யாது வரம் வேண்டும்? என்ருர். அதைக் கேட்ட கார்த்திகேயன், ஐயனே! தங்களைப் போன்ற பலமுள்ளவனுயினும், அவன் கைகள் மலைபோல் வளர்ந்து வந்தாலும் அதை அறுக்கும் ஆற்றலை அடியேனுக் களிக்க வேண்டுமென்ருர். அரனும் அங்ஙனமே ஆகுக என்று அருள் புரிந்து சென்ருர்.

*ரிதத்வஜன். ஸூர்ய வம்சத்தில் சத்ருஜித் என்ரோர் அரசனிருந்தான். அவனுக்கு மிக சூரனை ஒரு புதல்வன் பிறந்தான். அவனுக்குத் தந்தை ரிதத்வஜன் என பெயரிட்டார். அவன் மிக பராக்ரமசாலி. அவ்வரசனது முன்னிலையில்

*நமது 10-ம் வெளியீடான மார்க்கண்டேய புராணத்தில் இக்கதை விரிவாக விளங்குகிறது. அதன் விலை 6 அணு.

காலவர் எனும் ரிஷி வந்து ஓர் குதிரையைக் கொடுத்து அரசனைப் பார்த்துக் கூறினர். "வேந்தே! பாதாளகேது என்ற அரக்கன் பன்றி உருவமெடுத்து வந்து முனிவர்களைக் கொல்கிறான். யாகத்தை அழிக்கிறான். அவனைத் தவ வலிமையால் நாங்கள் கொல்லலாம் என்றாலும் தவம் செலவாகக் கூடாதென பரமாத்மாவைத் துதித்து இவனைக் கொல்லும்படி வேண்டினோம். அவர் அசரீரியாக இருந்து இக்குதிரையைத் தந்து, ரிதத்வஜனிடம் இதைக்கொடு. அதன்மீதேறி அவன் அஸுரனைக் கொல்வான் என்றார். இக்குதிரை விச்வாவஸு என்ற கந்தர்வ ராஜனுலளிக்கப் பட்டது. அவனது பெண்ணான மதாலஸையைப் பாதாளகேது தூக்கிச் சென்று பாதாளத்தில் வைத்திருக்கிறான். ஆதலால் ஓர் பகலில் பதினாயிரம் யோஜனை தூரம் வேகமாக ஓடும் இக் குதிரையை அவன் தந்தான்" என்றார். ரிதத்வஜன் அதன்மீதேறி தன் மீது பாணத்தை எரிந்ததாகப் பின்னரறிந்தேனென பாதாளகேது அந்தகனுக்குக் கூறினன்.

அரக்கர் படை குஹனால் அடிபட்டு ஓட ஸ்வல்பஸேனையுடன் அந்தகாஸுரன் பூலோகத்தில் ஸஞ்சரித்தான். ஒரு ஸமயம் அவன் மந்தரமலை மீதேறினன். அங்கு அன்னை பார்வதி தேவியைக் கண்டு மோஹங் கொண்டான். இவளை அழைத்துவந்து எனக்களிப்பவனே எனது நண்பனுவான். அவனுக்கு யான் கொடுக்கத்தகாத பொருளில்லை. இவ்வழகிய மாதை ஆலிங்கனம் செய்யாமல் இருந்தால் என் ஜன்மம் வீணாகும்.என்று அந்தகன் காமவெறிகொண்டு பேற்றினன். இதைக் கேட்டு அவனுடைய ஸஹோதரனை ப்ரஹ்லாதன் இரண்டு காதுகளிலும் கையை வைத்துக்கொண்டு "பாபம்! பாபம்! அந்தகா!! இங்ஙனம் பேசாதே! பிறர் மனைவியைப் பார்ப்பதே பாபம்! அதிலும் ஜகன் மாதாவைப் பார்த்து இவ்வெண்ணம் கொள்ளலாமோ? பிறரை ஹிம்ஸிப்பதை

விட தன்னுயிரை விடுவதும், பொய் சொல்வதைவிட பேடியாயிருத்தலும், பிறர்பொருளை அபஹரிப்பதைவிட உபவாஸமிருத்தலும் சிறந்தது" என்று உபதேசித்தார். காமாதுரனை அவன் இதற்குச் செவி மடுக்காது விரைவாக தேவியிருக்குமிடஞ் சென்றான். இவனுடன் மயனும் தாரகனும் சென்று சிவகணங்களைக் கொன்றார்கள். எதிர்த்து வந்த நந்தியை அந்தகன் கதையாலடித்துக் கீழே தள்ளினன். இதைக் கண்ட உமை அருகில் வந்து அந்தகன் தன்னைத் தீண்டுவானே என்றஞ்சி தன்னைப்போல் நூறு உடலெடுத்து நின்றாள். அந்தகன், உமையாரென்றறியாமல் திகைத்து நின்றான். மனிதனது கண்ணை மறைப்பது, பிறவிக்குருடு காமம் மதம் லோபம் என்ற நால்வகை தோஷங்களாம். அந்தகன் அந்தகனைப்போல் அம்பிகையைக்காணாது விழிக்கும் ஸமயத்தில் சதாவரீ என்ற சக்தி இவனை ஆயுதங்களால் தாக்கிக் கீழே தள்ளினள். இச்சமயம் அம்பிகை தனது பரிவாரத்துடன் அந்தர்த்தாநமாயினள். அந்தகனுடைய பரிவாரங்கள் கணங்களோடு போருக்குவர, கணேச்வரர் அவர்களைக் கொன்று, அம்பிகை இருப்பிடம் சென்றார். தேவி தான் படைத்த தன்னைப்போன்ற சரீரங்களைப் பூமியில் உத்யாநத்திலும் நதீ தடாகங்களிலும் வஸிக்கும்படி உத்தர விட்டாள். மூர்ச்சை தெளிந்தெழுந்து அந்தகன் தனது ஸேனை அழிந்ததையும் தான் அடிபட்டதையும் நினைத்து வெட்கமடைந்து பாதாளஞ் சென்றான். அங்கு இரவும் பகலும் அன்னையையே நினைத்துக் காமவெறியால் மற்றதை மறந்து தவித்தான்.

அந்தகாஸுரன் வந்தபோது பரமசிவன் அங்கில்லாத காரணம் யாதென்று நாரதர் கேட்க, புலஸ்த்யர் கூறினார்: ஸுப்ரமண்யனை உண்டுபண்ணுவதற்காக உமாபதி அன்னையுடன் ஆயிரமாண்டு ஏகாந்தமாக சிருங்காரத்திலீடுபட்டிருந்ததால் அவரது சக்திசற்று குறைந்ததாம். அதை மீண்டும்

பெறுவதற்கு பரமசிவன் தவம் செய்யக் கருதினுர். ஆதலால் நந்தியையும் கணேசனையும் அம்பிகையைக் கவனிக்கும்படி கூறி விட்டு தவசி வேடம் பூண்டு பூலோகம் சென்றுர். அவர் கந்தமூலங்களேயும் ஜலத்தையும் வாயுவையும் உட்கொண்டு பல்லாண்டு ஏகாக்ரசித்தராகத் தவம் புரிந்தார். அவரது தலையிலிருந்து அக்நி ஜ்வாலை கிளம்பிற்று. அவரது சரீர பாரத்தைத் தாளாமல் மந்தர மலை பிளந்து பூமி மட்டத்திற்கு வந்தது. ஆங்கிருந்து ஓர் நதி ப்ரவஹிக்க ஆரம்பித்தது. அதற்கு பகவான் கேதாரமெனப் பெயரிட்டார். அந்நதியில் புனலாடி விதிமுறை வழுவாது பித்ரு கார்யத்தைச் செய்வோர் கைலாஸஞ் செல்வாரென பகவானதற்கு வரந் தந்தார். யமுனையில் ஸ்நாநம் செய்து பகவான் ஜபம் செய்தார். ஸரஸ்வதீ நதியில் மூழ்கி ஜலத்தில் நின்று ஒன்றரை ஆண்டு ருத்ரன் தவம் செய்தார். அதனுல் முன் போலவே மலைகள் அசைந்தன. ஸமுத்ரங்கள் நடுங்கின. இதைக்கண்டு தேவர்கள் பயந்து பிரும்மாவினிடஞ் சென்றனர். பிரும்மா தேவர்களுடன் வைகுண்டம் சென்று முராரியைத் தர்சித்தார். என்று புலஸ்த்யர் சொன்னதைக் கேட்ட நாரதர், முரன் யார்? அவனைப் பகவான் எப்படிக் கொன்றுர் என்று கேட்டார். புலஸ்த்யர் உரைத்தார்.

## முராஸுர வதம்

கச்யபருக்கு தநு என்ற மனைவியினிடம் முரன் என்றோர் அஸுரன் பிறந்தான். அவன், தேவர்கள் ராக்ஷர்களைக் கொன்றதைக்கேட்டு வருந்தி, தேவர்களை வெல்வதற்காகத் தான் பல வரங்களைப் பெறக் கருதினுன். பிரும்மனை நாடி பல்லாண்டு கோரமாகத் தவம் செய்தான். சதுர்முகன் எதிரிற்றேன்றி யாது வரம் வேண்டுமென்றுர். முரன் தான் எவரைக் கையால் தொட்டாலும் அவர் இறக்க வேண்டும்

என்று வரம் கேட்டான். அவரும் அங்ஙனமே ஆகட்டு மென்று கூறி மறைந்தார். உடனே முரன் அமராவதி சென்று இந்த்ரனைச் சண்டைக் கழைத்தான். இவன் வரம் பெற்றதை அறிந்த மகவா தன் ராஜ்யத்தை விட்டு விட்டு பூலோகஞ் சென்றான். முரன் ஐராவதத்தையும் வஜ்ராயுதத்தையு மெடுத்துக் கொண்டு திக்விஜயம் செய்யச் சென்றான். பாதாளத்தில் பதுங்கிக் கொண்டிருந்த அஸுரர்களெல்லோரும் முரனிடம் வந்து சேர்ந்தனர். மூவ்வுலகும் முரனுக்ஷிக்கு உட்பட்டது. ஒரு ஸமயம் இவன் ஸரயூநதிக்கரையில் யாகம் செய்யும் ஸூர்யவம்சத்தரசனை ரகுவின் யாகசாலைக்குச் சென்றான். "என்னோடு யுத்தம் செய்! அல்லது எனது சத்ருவான தேவரைக்கருதி செய்யும் யாகத்தைச் செய்யாதே" என்றான். இதைக்கேட்ட அரசன் நடுநடுங்கி குருவான வஸிஷ்டரைச் சரணமடைந்தான். அவர் முரனை அழைத்து அஸுர ச்ரேஷ்டனே! இம்மனிதனை ஜயித்தென்ன? ஜயிக்காமலென்ன? இதனால் உமக்குப் பெருமையுண்டோ? ஸகல ஜீவராசிகளது உயிரையுங்கொள்ளை கொள்ளும் யமனை ஜயித்தால் நீ எல்லோரையும் ஜயித்தது போலாகும் என்றார். முரன் உடனே புறப்பட்டு யமலோகம் சென்றான். இவ்வசுரன் வருவதை அறிந்த யமன் முன்னமே வைகுண்டநாதனைச் சரணமடைந்தார். அவர் அஸுரனை என்னிடமனுப்பு, யான் பார்த்துக்கொள்கிறேனென்றார்.

யமனிடம் முராஸுரன் வந்து சண்டைக்கு வா அல்லது ஜீவராசிகளைக் கொல்லாமலிரு என்றான். தர்மராஜன் ஐயனே! தங்களுடன் சமர் செய்ய எனக்குப் பலமில்லை. ஜீவராசிகளைக் கொல்லாம லிருப்போமெனில் உம்மைவிட பலசாலியான வைகுண்டநாதன் என்னைச் சிக்ஷிப்பான்! யாது செய்வேன் என்றான். முரன் அங்ஙனமாயின் வைகுண்டவாஸி இருப்பிடத்தைக்கூறு! அவனை வென்று

வருகிறேன் என்றான். யமன் வைகுண்ட வழியைக்காட்ட முரனங்கு சென்றான். மிக வேகத்துடன் ஓடிவரும் முரனைப்பார்த்து பகவான், நீ யார்? எங்கு வந்தாய்? என்றார். அஸுரன் முரனெனும் என்னை நீர் அறியீரா? உம்மோடு போர்புரிய வந்தேன். சக்தியிருந்தால் யுத்தம் செய்; இல்லையேல் சரணகதி செய்துகொள் என்றான். இதைக்கேட்டு பகவான் நகைத்து முரா! நீ தீரனுனல் உன் மார்பு ஏன் அடித்துக் கொள்கிறது? என்னிடம் பயமா? பயமானல் ஓடிப்போ? என்றார். அஸுரன் என் மார்பு துடிக்கவில்லையே என்றான். பகவான் நீ தொட்டுப்பார்! என்றார். அவன் "தன் கையால் தொடப்பட்டவர் இறப்பர்" என்று வரம் வாங்கியதை மறந்தான். தன் மார்பைத் தொட்டுப் பார்த்தான். உடனே கீழே விழுந்து இறந்தான். இதைக் கண்டு ஸகலதேவர்களும் வியந்து பகவானைப்போற்றி தத்தம் ஸ்தானத்தைப் பெற்றனர்.

## புத்ரனும் சிஷ்யனும்.

முராரியான பகவானது ஸ்வரூபத்தை விளக்கிக் கூறும்படி ஸநத்குமாரர் பிரும்மாவைக் கேட்டார். பிரும்மா அவரைப் பார்த்து புத்ரனுக்கன்றோ ரஹஸ்யத்தை உபதேசிக்கவேண்டும். தர்மத்திற்கு அஹிம்ஸை எனும் மனைவியினிடம் பிறந்த நால்வரில் நீ மூத்தவனல்லவா? என்றார். ஸநத்குமாரர் 'ஸ்வாமின் புத்ரனுக்கும் சிஷ்யனுக்கும் பேதமுண்டோ? சிஷ்யனை என்னைப் புத்ரனைப்போல் பாவித்து உபதேசியும் என்றார். பிரும்மா அவரைப் பார்த்து அங்ஙனமல்ல; புத்எனும் நரகங்களிலிருந்து காப்பவன் புத்ரனுவான். சேஷநரகத்திலிருந்து காப்பவன் சிஷ்யன் என்றார். அப்படியாயின் அந்நரகங்களை விவரித்துக் கூறுங்களென்று ஸநத்குமாரர் வேண்ட சதுர்முகன் கூறினர். பிறர் மனைவியைப்

புணர்வது, பாபிகளுடன் சேருவது, க்ரூரமாக நடப்பது இவை முதல் நரகம். பழங்களைத் திருடுவது, வீணாகத் திரிவது, பச்சைமரங்களை வெட்டுவது இவை இரண்டாவது நரகமாம். தகாதவரிடம் தானம் வாங்குவது, ப்ராணிகளைக் கூண்டிலடைப்பது கொல்வது அபந்துக்களுடன் மணம்செய்வது மூன்றாவது நரகம். எல்லோரையும் பயமுறுத்தல் பகவத்குண நிந்தை ஸ்வதர்மத்தை விடுவது நான்காம் நரகம். நண்பனிடத்தில் கபடம் வீணாக ஒருவர்மேல் அபவாதம் சொல்லல் ருசியுள்ள பொருளை ஒருவனாக புஜித்தல் ஐந்தாம் நரகம். யாத்ரைக்கு வண்டியில் செல்லுதல் பழத்தை அபஹரித்தல், யோகத்தைக் கெடுத்தல் வண்டி மாட்டை அபஹரித்தல் ஆறாம் நரகம். அரசனுக்குரிய பாகத்தைக் கொடாமை ராஜஸ்திரீயைக் கெடுத்தல் ராஜனுக்கு அஹிதத்தைச் செய்தல் ஏழாம் நரகம். லோபம், லோலனாயிருத்தல் வாயிலிருந்து ஸதாலாலாஜலத்தைப் பெருக்குவது எட்டாம் நரகம். வேதத்தைத் திருடல் ப்ராஹ்மண நிந்தை பந்துத்வேஷம் ஒன்பதாம் நரகம். சிஷ்டாசாரத்தைக் கெடுப்பது அதை நிந்திப்பது சிசுஹத்தி சாஸ்த்ரத்தைத் திருடல் பத்தாவது நரகமாம். வேதாங்கங்களை அழித்தல் பகவத் குணத்தை நிந்தித்தல் பதினோராவது நரகம். ஸாதுக்களையும் ஸதாசாரத்தையும் நிந்திப்பது துராசாரத்தைக் கைகொள்வது வைதிக ஸம்ஸ்காரமில்லாமை பனிரண்டாவது நரகம். தர்மார்த்த காமங்களை விடுவது ரஹஸ்யத்தை வெளியிடுவது பதிமூன்றாம் நரகம். விதியைத் தழுவாது ஸன்யாஸம் செய்துகொள்ளல் வீட்டிற்கு நெருப்புவைத்தல் பதிநான்காம் நரகம். அக்ஞானம் பொய் அஸூயை சுசி இல்லாமை பதினைந்தாம் நரகம். ஆலஸ்யமும் கோபமும் பதினாறாம் நரகம். இவைகளுக்குப் புந்நரகம் என்று பெயர். இவைகளிலிருந்து ஸத்புத்ரன் பிதாவைக் காப்பான். ஆத

லால் புத்ரன் என்று புதல்வனுக்குக் காரணப்பெயருண்டா யிற்று.

தேவரிஷி பித்ருக்களை நாடி செய்யும் ஸத்காரியத்தைத் தடுப்பது, பிறர் பொருளிலாசை, ஸர்வ வர்ணத்தையும் ஸமானமாக எண்ணுதல், மந்த்ரஜப மில்லாமை, குருவினிடம் வாதம் புரிதல், தன் தோஷத்தை மறைத்து பிறர் தோஷத்தை வெளியிடல், பொறுமை, க்ரூரமாகப் பேசுதல், முறட்டுத்தனம் முதலியவை சேஷ பாபங்களெனப்படும். இவைகளிலிருந்து குருவைக்காப்பதால் சிஷ்யனுக்குச் சிஷ்யன் என்று காரணப் பெயர் வந்தது.

தன் வயிற்றிற் பிறந்தவன் ஔரஸ புத்ரன் எனப்படுவன். புருஷன் நபும்ஸகனுகவோ பைத்யமாகவோ இருந்தால் ஓர் மஹர்ஷி அல்லது தனது மைத்துனன் மூலமாக ருதுகாலத்தில் ஒரே முறை ஸங்கமம் செய்து ஓர் குழந்தை பிறந்தால் அதற்கு க்ஷேத்ரஜன் என்று பெயர். இது கலியில் கூடாதென தடுக்கப்பட்டுளது. தாய் தந்தைகள் தன் புத்ரனைப் புத்ரர்களில்லாத ஒருவருக்குத் தானம் செய்தால் அவன் தத்தனெனப்படுவான். ஸ்நேஹிதனது புத்ரனைத் தன் புதல்வனைப்போல் பாராட்டினுல் அவன் க்ருத்ரிமன் எனப்படுவன். வீட்டில் ஸ்த்ரீ இருக்கும்போது யார் மூலம் உண்டானுன் என்றறியாமல் உண்டாகும் குழந்தை கூடஜன் எனப்படுவன். அநாதையாக வெளியிலிருந்து கொண்டு வரப்பட்ட புத்ரன் அபவித்தனுவன். கன்யகையாக இருக்கும்போது பிறந்தவன் காநீநன். கர்ப்பத்தோடு விவாஹமானவளிடமிருந்து பிறந்தவன் ஸஹோடஜன். விலைக்கு வாங்கியவன் க்ரீதன். இரண்டாவது கல்யாணம் செய்துகொண்ட பெண்ணினிடம் பிறந்தவன் பௌநர்பூ எனப்படுவன். பிராமணனுக்குச் சூத்ரஸ்த்ரீயினிடம் உண்டானவன் பாரசவன் எனப்படுவன். இப்படிஙீறு வகையான புத்ரர்களில் ஔர

ஸனும் தத்தனுமே கலியில் சிறந்த புத்ரனாக விதிக்கப்பட்டிருக்கிறன். மற்றதைக் கலியுகத்தில் மநத்தாலும் எண்ணலாகாது. இதைக்கேட்ட ஸநத்குமாரர் தனது தந்தை தாய்களை மனதில் நினைத்தார். தர்மமும் அஹிம்ஸையும் உடனே எதிரிற்றேன்றி ஸநத் குமாரரை ப்ரும்மாவுக்கு தத்த புத்ரனாக அளித்தார்கள். பிரும்மா யோக தத்துவங்களைக் கூறி ஸ்ரீபகவானது ஸ்வரூபத்தை விளக்கினர்.

## த்வாதசதளம்.

பகவானான ஸ்ரீ வாஸுதேவன் பனிரண்டு மாதங்களிலும் பனிரண்டு ராசிகளிலும் அவரது பனிரண்டு அக்ஷரமுள்ள மந்தரத்திலும் தங்கி வஸிக்கிறார். அவரை நமது சரீரத்தில் பனிரண்டு அவயவங்களில் கீழ் கண்டபடி உபாஸித்தால் மறு பிறப்பு மாகவருக் குண்டாகாது. சிகையில் ஓங்கார வடிவமாக மேஷராசியில் வைசாக மாஸத்திலிருப்பதாக உபாஸிப்பது முதல் தளம். முகத்தில் நகாரரூபமாக விருஷப ராசியில் ஜ்யேஷ்ட மாதமாக இருத்தல் இரண்டாந்தளம். மோ, ப, க, வ, தே, வா, ஸு, தே, வா, ய என்று எழுத்துக்களை மிதுனம், கடகம், ஸிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தநுஸ், மகரம், கும்பம், மீனம் என்றராசியுடன் ஆடி, ஆவணி, புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி தை மாசி பங்குனி சித்திரை மாதங்களையும்சேர்த்து புஜம், கண், ஹ்ருதயம், வித்யாஸ்தாநம், மநஸ், நாபி, ஜகநம், கால், முழங்கால், பாதம் முதலிய இடங்களில் பரமாத்மா வஸிக்கிறார். இத்தகைய பகவத் ஸ்வரூபத்திற்கு அவ்யக்த வாஸுதேவன் என்று பெயர். நாலு வர்ணமுள்ள நான்கு முகங்களோடு கூடியது இரண்டாவது ரூபம். ஆயிரம் படத்துடன் உலகைச்சுமக்கும் ஆதிசேஷனுயிருத்தல் மூன்றுவது ரூபம். நான்முகமும் இரண்டு கையுமாய் உலகைப் படைப்பது

பகவானது நாலாவது மூர்த்தியாம். என்று சதுர் முகனிடம் ஸநத்குமாரர் உபதேசம் பெற்றார்.

ஒரு ஸமயம் உலகெலாம் தந்நிலையிலிருந்துத் தவறி ஆடிற்று. இதைக்கண்டு நடுங்கியதேவர்கள் பிரும்மாவுடன் கூடி மஹாவிஷ்ணுவைச் சரணமடைந்தனர். வாஸுதேவன் அமரர்களுடன் கைலாஸம் சென்று பகவானைப் பணிந்தார். தேவர்களது கண்ணுக்குப் பரமசிவன் தோன்றாததால் துயர் கொண்டு பத்பநாபனை வணங்கி பகவானெங்கே ? என்றனர். மாதவன் தேவர்களைப் பார்த்து நீங்கள் பார்வதி தேவியின் கர்ப்பத்தில் குழந்தை உண்டாகாமல் போகும்படி செய்தீர் களல்லவா? அந்த பாபத்தால் உங்களுக்குப் பகவத் தர்சநமாக வில்லை. அப்பாபமகல தப்தகிருச்ர மெனும் ப்ராயச்சித்தத் தை நீங்கள் அனுஷ்டிக்க வேணடும். முதல் மூன்று நாள் பனிரண்டு பலம் உஷ்ண ஜலத்தையும் மறுமூன்று நாள் எட்டு பலம் பாலையும் மறு மூன்று திநம் ஆறு பலம் நெய் யையும் மறு மூன்றுநாள் வாயுவையும் புஜித்திருங்கள். இதே தப்தகிருச்சமாகும். பின்னர், நூறு குடம் பால் அறுபத்து நாலு குடம் தயிர், முப்பத்திரண்டு குடம் ஹவிஸ், பதினாறு குடம் பஞ்சகவ்யம், எட்டுகுடம் தேன், நூற்றெட்டு குடம் சந்தந ஜலம் முதலியவைகளைக் கொண்டு சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யுங்கள். உங்கள் பாபமகலும். பகவானைத் தர்சிக்கலாமென்றார். அங்ஙனமே அமரர் அநுஷ்டித்துப் பகவானைத் தர்சிக்க அவர் ஓர் பக்கம் ஹரியாகவும், மற்றோர் பாதியில் ஹரனாகவும் நின்று தேவர்களுக்கு ஹரிஹரனாகக் காக்ஷி அளித்தார். தேவர்கள் அவரைப் பணிந்து துதித் தனர். பகவான் உங்களுக்கு யாது வரம் வேண்டு மென்று வினவ உலகம் அசையாது முன்போல் தந் நிலையைப் பெற வேண்டும், என்று தேவர் வேண்டினர். பிறகு ஹரிஹரனாகத் தோன்றிய மூர்த்தி வைகுண்டவாஸி

யாகவே தேவர்களது கண்ணுக்குப் புலப்பட்டது. தேவர்கள் அவரை வணங்கி பகவன்! கைலாஸ நாதனெங்கே! அவர் செய்யும் கடுந்தவத்தாலன்றோ உலகம் நடுங்குகிறது! அவரிடம் எங்களை அழைத்துச் செல்லுங்களென்று வேண்ட பகவான் தேவர்களுடன் பூலோகம் வந்து ஸாரஸ்வதீ நதியில் மூழ்கி தவம் செய்யும் மாதேவனைத் துதித்தார். அவர்களது நன்மையை நாடி பகவான் தவத்தை நிறுத்திக் கரை ஏறி காக்ஷி அளித்தார். அமரர்கள் அவரைப் பணிந்து போற்றி தன்னிருப்பிடம் சென்றனர். மறுபடியும் உலகம் முன்போல் அசைந்தது. கைலாஸநாதன் இதன் காரணத்தை அறிந்து குருக்ஷேத்ரத்தில் தவம்புரியும் சுக்ராசாரியினிடம் சென்றார். சுக்ரரே! உமது தவத்தால் மிக ஸந்தோஷங் கொண்டோம்! வேண்டிய வரத்தைக் கேளும்! என்று பகவானுரைத்தார். சுக்ரர் கண்விழித்தெழுந்து பகவானைப் பணிந்துத் துதித்து இறந்தவரைப் பிழைப்பிக்கும் ஸஞ்ஜீவினீ வித்யையை எனக்களியுமென்றார். அங்ஙனமே ஜகதீசனவருக்கு அருள் புரிந்தார். மூன்றும் முறையும் உலகிலுள்ள ஸகல பொருள்களும் தன்னை மறந்துத் தாண்டவமாடின. இதைக்கண்டு ஸர்வேசன் ஸப்தஸாரஸ்வதமெனும் க்ஷேத்ரத்தில் நர்த்தநம் புரியும் மங்கணரிஷியைக் கண்டு முநிவேடங்கொண்டு ஏன் கூத்தாடுகிறீர் என்று கேட்டார். அந்த முநி தனது கைவிரல் அறுபட அங்கிருந்து இரத்தம் வாராமல் ஓர் வாஸனை ஜலம் வருகிறது. இது எனது தவத்தின் பெருமையைக் காட்டவில்லையா? என்னைவிட சிறந்த தபஸ்வி உலகில் உண்டோ? என்று ஆநந்தத் தாண்டவமாடுகிறேனென்றார். இதைக் கேட்டு ஈசன் நகைத்து மஹர்ஷே! இதோ பாரும்! என்று கூறி தன் கையை ஓர் விரலாலடித்தார். அங்கிருந்து வாஸனை நிரைந்த வெண்மையான விபூதி வந்தது. இதைக்கண்ட மங்கணர், இவர் தனது கர்வத்தை அடக்கவந்த ருத்ர மூர்த்தி என்

றுணர்ந்து அவரைச் சரணமடைந்தார். பகவான் ப்ரத்யக்ஷமாகத் தோன்றி காக்ஷி அளித்து அவரது பிரார்த்தனைக்கிணங்கி ஸப்தஸாரஸ்வதத்தில் ஸான்னித்யம் செய்தார். மங்கணரும் பிரும்மலோகஞ் சென்றார்.

முன்னர் பார்வதி தேவியினிடம் காமனை கொண்டு மாத்ருகணங்களோடு போர்புரிந்து தோல்வியுற்ற அந்தகாஸுரன் மறுபடியும் அதே எண்ணத்துடனிருந்தான். தனது மந்த்ரிகளை அழைத்துத் தேவியை ஸ்வாதீனப்படுத்த மந்த்ராலோசனை செய்தான். அச்சமயம் ப்ரஹ்லாதன் அந்தகனைப் பார்த்து, "அந்தக! அன்னையினிடம் ஆசை கொள்ளும் காமுகர் உலகிலுண்டோ? வேண்டாம்! இந்ததுரெண்ணத்தை விடு! உமை உன் தாய்! உமாபதி உனது தந்தை! எங்ஙனமெனில்; மைந்தனில்லாமல் வருந்திய உன் தந்தை சிவனை நாடித் தவம் புரிந்தார். சிவன் அவன் எதிரிற் றோன்றி 'அஸுர! இக்குழந்தையை எடுத்துச் செல்! இது விளையாட்டாகப் பார்வதீ தேவி என் கண்களை மூடியபோது இருளில் பிறந்த குழந்தை ஆதலால் தமோகுணங் கொண்டவனாக இருப்பான். இவனைக் கொல்ல எவனாலும் இயலாது. அன்னையையே இவன் பெண்டாடக் கருதும்போது யான் இவனைச் சூலத்தால் குத்திக்கொன்று நற்கதி அளிப்பேன்." என்று கூறிச் சென்றார். அன்னை பிதாவைத் தொடும்போது இருவர் உடலிலிருந்தும் நீ ஜனித்தாய். உலகிற்கே ஆதி தந்தைதாயான இவர்கள் உனக்கு விசேஷமாக குருவன்றோ? பிறர் மனைவியினிடம் ஆசை கொண்ட தண்டன் சரிதத்தை நீ அறியாயோ?" என அந்தகனுக்கு உதாரணமாகக் கீழ்க்கண்ட கதையை ப்ரலாஹ்தன் கூறினான்.

## தண்டனும் விரஜையும்.

ஸூர்ய வம்சத்தில் தண்டன் என்றோர் அரசன் தோன்றினான். அவன் சுக்ரரைத் தனக்குப் புரோஹிதராக

இருக்கும்படி வேண்டினான். அவனது குணத்தைக் கண்டு சுக்ரரும் அதற்கு இசைந்தார். அவரைக்கொண்டு வேந்தன் எண்ணிறந்த வேள்விகளைச் செய்தான். சுக்ரருக்கு விரஜை எனும் அழகிய ஓர் கன்யகை உண்டு. அவளை ஆச்ரமத்தில் அதிதி பூஜை செயயும்படி கூறி, சுக்ரர் விருஷ பர்வாவைக் காணச் சென்றார். அஸுர ராஜனது ப்ரார்த்தனைக் கிணங்கி அஸுர குரு அங்கு சில நாள் தங்கினார். அவனுக்குப் பல வேள்விகளைச் செய்து வைத்தார். அதனிடையே தண்டகன் ஒரு நாள் சுக்ரரது ஆச்ரமத்திற்குச் சென்றான். அங்கு அவரைக்காணாது அழகிற் சிறந்த ரதியைப்போன்ற ஓர் கன்யா ரத்னத்தைக் கண்டான். ஸகிகளைக் கேட்டு அவள் யாரென அறிந்தான். அவள்மேல் அவனுக்கு அளவில்லா ஆசைஉண்டாயிற்று. ஆச்ரமத்தினுள்ளே நுழைந்தான். விரஜை வந்த விருந்தினரை வழக்கப்படி பூஜித்தாள். அரசன் அவளைப் பார்த்து "இவ்வுபசாரங்களால் யாது பயன்? காம ஜ்வரம் கொண்ட எனக்கேற்ற உபசாரம் புரிவதன்றோ உசிதம். என்னைக் கட்டி அணைந்து காமஸுகத்தை அளி" என்றான். இதைக் கேட்ட விரஜை, "அந்தோ! இதென்ன கொடுமை! எனது தந்தை மிகக் கோபம் கொண்டவர். இந்திரனும் அவருக்கு எதிர் இல்லை யெனில் நீர் எம்மட்டு? அன்றியும் குரு தந்தைபோலன்றோ? அவரது புதல்வியான யான் உமக்குச் சஹோதரி அல்லவா? காமவெறி கொண்ட நீர் இதை மதியாவிடினும் பெண் தந்தை உத்திரவின்றி ஒருவனை மணப்பது தர்மமாமோ? சற்று பொருத்திரும். தந்தை வந்தவுடன் இதைக்கூறி அவர் அளித்தால் என்னை ஏற்றுக் கொள்ளும்" என்று கூறினாள். தண்டன், ஸுந்தரி! என் பால் கோபம்கொண்ட சுக்ரர் சில நாட்கள் சென்றபின் என்னை எறிக்கலாம். உன்னை எண்ணி என்மேல் சரம்விடுத்த காமன் இப்பொழுதே என்னை எறிக்கிறான்! தந்தை வருமட்

டும் யான்பிழைப்பது அரிது. ஆதலின் காலங்கடத்தாது காமனையைப் பூர்த்தி செய்' என்றான். இதைக் கேட்ட விரஜை, 'பார்த்திவ! பராதீனையான யான் என் உடலை உமக்கு அர்ப்பணம் செய்ய இயலாது. அங்ஙனமளிப்பதும் தர்மமன்று' என்று மொழிந்தாள். தண்டன், பெற்றோர் உத்திரவின்றி தானே மணம்புரிவது அதர்மமல்ல, என்று எடுத்துக் காட்ட ஓர் கதை கூறினன்.

சித்ராங்கதை:—விச்வகர்மனுக்குச் சித்ராங்கதை என்றோர் புதல்வி இருந்தாள். அவள் அழகிற் சிறந்தவள். தனது தாதிகளுடன் கூடி நிமிஷாரண்யம் சென்று புண்ய நதியில் அவள் புனலாடினள். தற்செயலாக அங்கு ஓர் அரசகுமாரன் வந்தான். அவன் ஸுதேவ ராஜனது புதல்வன். ஸுரதன் எனப் பெயர் பெற்றவன். அவன் அக்கட்டழகியைக் கண்டு காமத்தால் மோஹங் கொண்டான். அவளருகே சென்று தன் காமவிடாயைத் தீர்க்கும்படி வேண்டினன். சித்ராங்கதையினது தாதிகள், "சுதந்திரமில்லாப் பெண்கள் தானே மணப்பது தருமமோ? அவள் தந்தையிடம் சென்று உமது விருப்பைக்கூறும்; உமக்குப் பாக்யமிருந்தால் அவளைப் பெறலாகும்," என்றனர். இதைக் கேட்ட அரசன் முகம் வெளுத்தது. காமஜ்வரம் அவனை வாட்டியது. 'மாதரசே! நீ என்னை இந்த க்ஷணமே ஏற்காவிடில் யான் இறப்பது ஸத்யம்! உன் தோழிகள் மொழிந்த வண்ணம் தந்தை சொல்லை எதிர்பார்த்து ஒரு உயிரைக் கொல்லப் போகிறாயா?' என்றுகூறிக் கீழே விழுந்தான். சித்ராங்கதை யாதுசெய்வதென்றறியாது சிந்தை கலங்கி நின்றாள். தந்தை சொல்லைக் காப்பதும் தர்மம். அரசகுமாரன் ப்ராணனை ரக்ஷிப்பதும் தர்மம். தர்ம ஸங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு தபித்தாள். அரசனது காமவிகாரம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகமானது. சிறிது தாமதித்தால் அன்னவர் மன்மதன் கணையால் மாளுவது நிச்

சயம் என்றுணர்ந்தாள். அருகிற் சென்று பூப! எழுந்திரும், உமது விருப்பம் கைகூடு மென்றாள். இவளது தோழிகள் இதைக் கண்டு வியஸனங்கொண்டனர். ஸகி! வேண்டாம்! ஸாஹஸம் செய்யாதே! குலதர்மத்தைக் கொலைக்காதே! தந்தையை அவமதிக்காதே! என்றனர். சித்ராங்கதை இதற்கு செவிமடுக்காது மன்னனைக்கட்டி அணைந்து காம நோயை அகற்றினாள். அங்ஙனமே நீயும் என்னை ஏற்று பேரானந்தம் பெறு என்று தண்டன் விராஜையைக் கூறினான். விராஜை, வேந்தே! உமக்கு உசிதமானமட்டும் கதையைக் கூறினீர். தானே ஸுரதனை வரித்த சித்ராங்கதையின் கதி என்ன ஆனது என்பதை ஏன் சொல்லவில்லை. யான் கூறு கிறேன் கேளும்! என்று மிருதிக் கதையைக் கூறினாள். சித்ராங்கதையினது சரிதத்தை உணர்ந்த விச்வகர்மன் கோபங் கொண்டான். தந்தையை அலக்ஷயம் செய்ததால் ஸுரதன் உன்னைவிட்டுப் பிறிவான். விதிப்படி விவாக தர்மத்தை நீ பெறாய். புதல்வனுமுனக்குத் தோன்றான். என்று சாபமளித்தான். அந்தக்ஷணமே அருகிலுள்ள ஸரஸ்வதி நதியின் பெருக்கு ஸுரதனை வெகு தூரமடித்துச் சென்றது.

தந்தையுமிங்ஙனம் செய்வரோ என்று சித்ராங்கதைத் தவித்தாள். மூர்ச்சையுற்று கீழே விழுந்தாள். தோழிகள் அவளைத் தேற்றி ஸமாதானங் கூறினர். அவளது கலை அகலவில்லை. அவள் அசையவுமில்லை. அவள் இறந்தாள் என்று எண்ணித் தோழிகள் தீமூட்டிச் சவத்தைக் கொளுத்தத் தீர்மானித்தனர். கட்டைகளைக்கொண்டுவரக் காநகஞ் சென்றனர். அச்சமயம் சித்ராங்கதை மூர்ச்சை தெளிந்தெழுந்தாள். மன்னனைக் காணாது மிகத் துயருற்றாள். பதியின்றி உடலை ஒருக்ஷணமேனும் வைத்திருக்கலாகாதென கருதினாள். புருஷன் சென்ற ஸரஸ்வதிநதியிலேயே உடலைவிட்டாள். அந்நதி அவளை ஓர் காநகத்திற்கருகே கரையில்கொண்டு தள்ளிற்று

வநத்திலிருந்து அவள் சொல்லொணுத் துயருற்ருள். ஆதலின் தந்தை உத்திரவின்றி உம்மை யான் கண்கொண்டும் காணேன் என்று விரஜை விளம்பினுள். முடிவில் அவள் பதியைப் பெற்று ஸுகமெய்தியதை நீ ஏன் கூறவில்லை என்று தண்டன் மேலே அதைத் தொடர்ந்துரைத்தான். அரண்யத்தில் அல்லல்படும் சித்ராங்கதையை ஓர் குஹ்யகன் கண்டான். கருணைகொண்டு அவளை அக்குஹ்யகன் யமுனநதி தீரத்திற்கழைத்து சென்முன். ஆங்குள்ள ஸ்ரீகண்டாலயத்திலே அவளைக்கொண்டு விட்டான். விரைவில் உன் பதியைப் பெறுவாய்என்று கூறி குஹ்யகன் மறைந்தான். சித்ராங்கதை தன் மதியை நொந்து விதியைச் சிந்தித்து யமுனையில் மூழ்கி நின்ருள். ஆங்கு ருதுத்வஜரெனும் முனிவர் ஆலய ஸேவைக்கு வந்தார். உடனே அவள் தபஸியின் தாள்களில் விழுந்து பணிந்தாள். தன்னந்தனியே அநாதையாக நிற்கும வளிடம் முனிவர் கருணை கொண்டார். அவளது வரலாற்றை அறிந்தார். விச்வகர்மனிடம் அவருக்குக் கோபமுண்டாயிற்று. என்றைக் கிருந்தாலும் பெண்ணுகப் பிறந்தவள் பிறர் பொருளன்ருே? அவளைத் தக்கபதியிடமளிப்பது தந்தையின்கடனுகும். தானே புருஷனுடன் கூடிய இவளை இங்ஙனம் ஓர் அன்புள்ள தந்தை சபிக்கலாகுமோ? யோசனையின்றி பெண்ணுக்குச் சாபமளித்த விச்வகர்மன் வாநரமாவான் என்று முனி அவனைச் சபித்தார். சிவ பூஜை முடிந்தது. ஸப்தகோதாவரம் என்ற இடத்திற்குவா! அங்கு ஹாடகேச்வரனைப் பூஜி! அவனருளால் உன்னைபோன்ற மூன்று பெண்களங்கேவருவார். அவர்களுடன் சேர்ந்து நீ உன்பதியைப் பெறுவாய்! என்றுரைத்து அவளை அங்கு அழைத்துச் சென்ருர். அவ்வாலயத்தின் அருகே இப் பெண்ணின் சோகத்தை அகற்றயாரே வல்லவர்? என்று ஓர் சுலோகத்தை எழுதிச் சென்ருர். சித்ராங்கதை கணவனையே நினைத்துக் காலத்தைக் கழித்தாள்.

விச்வகர்மா மஹர்ஷியின் சாபத்தால் மர்க்கடமானுன். பூமண்டலத்தே சாலூகநதியினருகே ஓர் புதரில்வஸித்து வந்தான். தற்செயலாக கந்தரனெனும் தைத்யன் அங்கு வந்தான். அவளுடன் அவன் புதல்வியான தேவவதியும் வந்தாள். வாநரமிவர்களைக் கண்டவுடன் ஒரேபாய்ச்சலாகத் தாவிதேவவதியைத் தூக்கிச் சென்றது. உருவிய வாளுடன் கந்தரன் அக்குரங்கைத் துறத்திச் சென்றுன். வெகுவேகமாகச் சென்று குரங்கு ஹிமாசலத்திலே ஓர் ஆச்ரமத்திலே தேவவதியை மறைத்து வைத்து கந்தரனெதிரில் வந்து அக்குரங்கு யமுனை நதியில் குதித்தது. கந்தரன் தன்தநயை ஆற்றில் குரங்குடன் விழுந்து இறந்து விட்டாள் என்று எண்ணி பாதாளஞ் சென்றுன். நதியிலிருந்து கரை ஏறி வாநரம், தேவவதியை மறைத்து வைத்த இடத்திற்குச் சென்றது. இடையிலே அஞ்ஜநனெனும் குஹ்யன் தமயந்தி எனும் தன் பெண்ணுடன் வந்தான். தமயந்தியைத் தான் மறைந்து வைத்த தேவவதி என்று மர்க்கடம் எண்ணிற்று. அவர்கள் மேல் பாய்ந்தது. அதைக்கண்டு நடுங்கிய தமயந்தி அருகிலுள்ள ஹிரண்வதீ எனும் நதியில் விழுந்தாள். அஞ்ஜநன் அதைக்கண்டு துக்கம் கொண்டான். பெண் இறந்தனளெனக் கருதி அஞ்ஜந பர்வதத்திலமர்ந்து தவம் புரிந்தான். ஹிரண்வதியின் ப்ரவாஹம் தமயந்தியைக் கோஸல நாட்டில் கொண்டு விட்டது. அவள் துணையின்றிக் கதறிக் கொண்டு ஓர் ஆலமரத் தருகே தங்கினுள். 'இந்த ரிஷி குமாரன் இங்கே கட்டுண்டு கிடப்பதை எவரேனும் அவர் தந்தைச் கறிவிக்காரோ?' என்று ஓர் சப்த முண்டாயிற்று. மேலே அண்ணர்ந்து பார்த்தாள். ஐந்து வயதுள்ள முனி குமாரன் தன் ஜடை மயிரைக் கொண்டு மரத்தின் நுனிக் கிளையில் கட்டப் பட்டிருந்தான். தமயந்தி அவனைப் பார்த்து உலகில் துன்புறவே பிறந்தவள் யான் ஒருவள்தான். என்று எண்ணி யிருந்தேன்.

என்னைவிட அதிக துக்கத்தை அனுபவிக்கும் தாங்கள் யாரோ? தங்களை எவர் கட்டினரோ? கட்ட காரணம்தான் யாதோ? என்று வினவினள். முனி குமாரன், 'தாயே! மநுபுரமென்ற ஊரிலே ரிதத்வஜரென்றோர் முனிவருண்டு. அவர் ஜபம் செய்யும் பொழுது யான் பிறந்தேன். எனது உடலில் உள்ள வாஸனையா விழுக்கப்பட்டு வண்டுகள் என்னைச் சூழ்ந்து கொண்டன. ஆதலின் ஜாபாலி என்று எனக்கு நாமம் சூட்டினர். ஐயாயிரமாண்டு குழந்தையாகவும், பத்தாயிரமாண்டு குமாரனுகவும், இருபதினுயிரமாண்டு யுவாவாகவும், நாற்பதினுயிரமாண்டு கிழவனுகவும் இருப்பேன். ஐந்தா மாண்டிலே பந்தத்தில் அகப்பட்டுக் கொள்வேன் என எனது ஜாதகத்தைக்கண்ட பெரியார் கூறினர். ஐந்தாமாண்டில் யான் வநத்தில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தேன். விதிவசமாகக் குரங்கொன்று வந்து என் தேவவதியைத் தூக்கிச்சென்ருய் என்று கூறி,என்னை இங்கே கட்டிற்று. என்னை எவரும் விடுவிக்காதபடி முட்களைக் கொண்டு வழியையும்அடைத்துவிட்டது. தேவவதியார் என நானறியேன். எனது வினையே வாநரமாக வந்தது என்று குழந்தைகூறி உன் வரலாறுயாது என்று அவளை வினவியது. யான் தமயந்தி எனும் குஹ்யப் பெண். எனது தந்தை அஞ்ஜநர். என் தாய் ப்ரம்லோசா. யான் பிறந்தபொழுது முத்கல முனிவரங்கு வந்தார். என்னை ஓர் சக்ரவர்த்தி மணப்பான் என்றுர். தந்தையுடன் யான் தீர்த்தயாத்ரைக்குச்சென்றேன். வநத்தில் ஓர் வாநரந்துரத்த அதற்கு பயந்து நதியில் விழுந்தேன். விதியின் வலியால் நதியுமென்னைக்கரை ஏற்றியது என்றவள் உரைத்தாள். பெண்ணே! யமுநா நதியினருகே ஸ்ரீகண்டமென்றோர் க்ஷேத்திர முண்டு. விரைவாக அங்கு செல். சிவனை வணங்க என் தந்தை அங்கு வருவார். அவர் மூலமாக நீ க்ஷேமமடைவாய் என்று ஜாபாலி சொன்னர்.

உடனே புறப்பட்டு தமயந்தி யமுனைக்குச் சென்றாள். இப் பெண்ணின் துயரை அகற்ற எவரேவல்லவர்? என்று வரையப் பட்டிருந்த சுலோகத்தைக் கண்டாள். அதன ருகே ஜாபாலியை விடுவிக்கவும் தன் குறையை யகற்றவும் எவர் வருவரோ என்று எழுதினாள். அங்கே தவம்புரியும் தேவவதியைத் தமயந்தி ஸந்தித்தாள். ஸ்ரீகண்டரைத் தர்சிக்க வந்த ரிதத்வஜர் கண்ணில் அவை பட்டன. தன் தநயனை விடுவிக்க அயோத்யாதிபதியான இக்ஷ்வாகுவினி டம் சென்றார்.

மன்ன! எனது மகனை ஓர் துஷ்ட வாநரம் மரத்தில் கட்டிவிட்டது. அவனை விடுவிக்க உனது புத்ரனான சகுனி யாலன்றி வேறெவராலு மியலாது. உடனே உன் குமாரனை அனுப்பி என் புத்ரனைக் காப்பாற்று என்றார். இக்ஷ்வாகுவும் பிராமணகார்யத்தை உடனே செய்யும்படி சகுனிக்கு உத்தி ரவிட்டார். மஹர்ஷி காட்டிய வழியைப் பின் பற்றி மன் னன் வனஞ் சென்றான். சரத்தினால் முனி குமாரனைச் சூழ்ந்திருந்த முட் புதருகளை அறுத்தான். ரிதத்வஜரும் சகுநியும் மரத்தின் மீதேறி ஜாபாலி ஜடையில் கட்டுண்டி ருப்பதைக் கண்டனர். அக்கட்டை அவிழ்க்க வேண்டிய முயற்சி செய்தும் அவர்களால் முடியவில்லை. ராஜகுமாரன் பாணத்தினால் ஜாபாலிக்கு யாதொரு நோவுமின்றி ஜடை கட்டி யிருந்த கிளையைச் சேதித்தான். ஜாபாலியின் ஜடை யில் சுமக்க முடியாத கிளை பற்றிக் கொண்டிருந்தது. பாரத் துடன் ஜாபாலி அங்கிருந்து இறங்கமுடியாதென்று கண்டு சரத்தினால் சகுநி ஓர் படிக்கட்டை அமர்த்தினான். அவர் அதன் வழியாக இறங்கி வந்து தந்தையைப் பணிந்து ராஜகுமாரனை வாழ்த்தினார்.

இதனிடையில் ஸ்ரீ கண்டரைத் தர்சிக்க காலவ முனி யமுநாதீரம் வந்தார். விதிப்படி ஸ்நாநாநுஷ்டானங்களைச்

செய்து இரண்டுகன்யகளைக் கண்டார். அவர்களைத் தமயந்தி தேவவதி என்றுணர்ந்தார். அவர்களிடம் கருணைகொண்டு ஆச்வாஸப் படுத்தினர். ஒருநாள் அவர்களுடனங்கு தங்கியிருந்து மறுநாள் புஷ்கரக்ஷேத்ரத்திற்குக் கிளம்பினர். அவர்களும் காலவரைப்பின் தொடர்ந்தனர். கார்த்திகை மாதத்தில் புஷ்கரஸ்நாநம் விசேஷமாதலின் மன்னர்களும் மஹர்ஷிகளும் மற்றுமுள்ளோரும் அங்கு கூடியிருந்தனர். ஜாபாலியுடன் ரிதத்வஜரும் நாபாகனுடன் இக்ஷ்வாகுவும் வந்தனர். கன்யகைகளுடன் காலவரங்கு சென்று ஸ்நாநம் செய்தார். அவர் ஜலத்தில் முழுகியபோது ஓர் பெரும் மத்ஸயம் பல பெண் மச்சங்களுடன் ஸஞ்சரிக்கக்கண்டார். பெண்களைப் பார்த்து அது, நீங்கள் என்னுடன் வருகிறீர்களே! ஜநங்கள் அபவாதம் சொல்ல மாட்டார்களா? என்றது. பெண்கள், காலவரே பெண்களுடன் திரிகிறார். ஜநாபவாதத்திற்குப் பயப்படவில்லையே! நீர் பயப்படுவதேன் என்றன. ஆண் மீன், அவருக்கு மாநமில்லை. அவரைப் போல் யானுமிருக்கத்தகுமோ என்றது. இதைக்கேட்ட மஹர்ஷிதான் இதரபெண்களுடன் வந்தது தவறென்றுணர்ந்தார். ஜலத்தைவிட்டுக் கரைஏறாது காலவர் அங்கேயே தவம்புரிந்தார். இவ்விருகன்யகைகளும் புண்ய புஷ்கரத்தில் புனலாடி காலவ முநிவரை எதிர் பார்த்துக் கரையில் நின்றனர். பலநாட்களாகியும் அவர் கரை ஏறவில்லை. வந்தவரனைவரும் சென்றனர். தலத்தில் இரு கன்யகைகளும் ஜலத்தில் காலவருமே அங்கிருந்தனர். இவர்களைப் பார்த்துக் கொண்டு சித்ராங்கதை அக்கரையில்நின்றாள். இதனிடையில் தெய்வச் செயலால் நான்காவதாக ஓர் கன்யகை அங்கு வந்தாள். அவள் பர்ஜன்ய னெனும் கந்தர்வனுக்கு க்ருதாசீ என்பவளிடம் பிறந்தவள். வேதவதி என்பது அவள்பெயர். அவளும் இக்குரங்கினிடம் அகப்

பட்டுக் கொண்டு ஓர் மரத்தின் மீதேறினள். அது அம்மரத்தைக் காலால் உதைத்துத் தள்ளிற்று. மரங் கீழே விழ மர்க்கடமதைப் பொடிப் பொடியாகச் செய்தது. அதைக்கண்ட தேவர்கள் ஹா!ஹா! இஃதென்ன விந்தை! இக்ஷ்வாகு புதல்வனான இந்த்ரத்யும்நனது மஹிஷியன்றோ இவள். இவளுக்கா இக்கதி! என்று கூக்குரலிட்டனர். தற்செயலாக ஓர் புயற்காற்று கிளம்பி இவளைப் புஷ்கரத்தில் கொண்டு தள்ளிற்று. ஆதலால் சித்ராங்கதை தேவவதி தமயந்தி வேதவதீ என்ற நான்கு கன்யகைகளும் ஒன்றாகக் கூடினர். தத்தம் சரிதத்தைப் பிறற்குக்கூறினர். ஸப்தகோதாவாரம் என்ற இடத்திற்குச் சென்றனர். தங்களது பாபமகன்று நன்மை உண்டாக ஸ்ரீகண்டேசனைப் பூஜித்தனர்.

இதனிடையில் தனக்குதவிபுரிந்த சகுனியுடன் கூடி ரிதத்வஜரும் ஜாபாலியும் இந்த்ரத்யும்நனது அரண்மனைக்குச் சென்றனர். இக்ஷ்வாகுவினது ஸஹோதரனான அவ்வரசன் முநிவரைப்பணிந்து வரவேற்றான். தன் ஸஹோதரனுடைய புதல்வனான சகுநியை அன்புடன் அழைத்தான். இந்த்ரத்யும்நனைச் சஹாயமாகக் கொண்டு சித்ராங்கதை முதலிய பெண்களை முநி வையகமெலாந் தேடினர். பதரிகாச்ரமத்தில் யுவாவான ஓர் ராஜன் தவஞ்செய்யக் கண்டார். சிறுவயதிலே இல்லறதர்மத்தில் ஈடுபடாது துறவிவேஷம் பூண்டகாரணம் யாதென அவரை வினவினர். அவர்தான் ஸுரதன் என்ற ராஜகுமாரனென்றும், விச்வகர்மாவின் பெண்ணான சித்ராங்கதையை விரும்பி விச்வகர்மனால் விலக்கப்பட்டேன் என்றும் சித்ராங்கதையைப் பிறிந்த துன்பத்தால் வைராக்யங் கொண்டு தவம் செய்கிறேன் என்றும் கூறினர். அவரையும் தேர் மீதேற்றி மஹர்ஷி மூன்றுமன்னர்களுடன் ஸப்தகோதாவரீதீரஞ்சென்றார். தன்

அருமைப் புதல்வியான சித்ராங்கதையைத் தேடிக்கொண்டு அவள் தாயான க்ருதாசீ என்பவளும் அங்குவந்து சேர்ந்தாள். ரிதத்வஜரால் வாநரமாகச் சபிக்கப்பட்ட விச்வகர்மனும் தற்செயலாக அவ்விடம் வந்தான். அதைக் கண்டவுடன் ஜாபாலி, தந்தையே! என்னைக் கட்டிய வாநரம் இதோ வருகிறதென்று கூறினார். அதைக் கேட்டவுடன் கோபங்கொண்ட சகுநி ராஜன், மஹர்ஷே! உத்திரவளியும்! ஒரே க்ஷணத்தில் அதைக் கொன்றுவிடுகிறேன் என்றான். ரிதத்வஜர், சகுநியை நோக்கி, வேந்தே! அவனவன்செய்த வினையை அவனவனே அனுபவிக்க வேண்டுமன்றோ? ஜாபாலி செய்த வினைக்கேற்றபயனை அவன் அனுபவித்தான். அதற்கு இக்குறங்கு நிமித்தமாக இருந்தது. அதைச் சிக்ஷிப்பதனால் இவன் அனுபவித்த துன்பமகலுமோ? என்றார். இதைக் கேட்ட சகுநிக்குக் கோபமகன்று சாந்தமுண்டாயிற்று. ரிதத்வஜர் அம்மர்க்கடத்தைப் பார்த்து, நீகட்டிய கட்டை எவராலும் அறுக்க முடியவில்லை. இவ்வரசன் மரத்தைச் சேதித்தார். ஜாபாலியின் ஜடையிலுள்ள பந்தத்தை அறுக்க முடியாததால் அவன் கிளையோடு திரிகிறான். நீகட்டிய கட்டை நீயே அவிழ்த்துவிடு என்றார். அங்ஙனமே அது ஒரு க்ஷணத்தில் அதை அறுத்தது. மஹர்ஷி மகிழ்ச்சி அடைந்து மர்க்கடத்தை நோக்கி உனக்கு யாது வரம் வேண்டுமென்றார். அது தனது குரங்கு சரீரம் நீங்கி பழய விச்வகர்ம சரீரம் வேண்டுமென்றது. அருகிலுள்ள க்ருதாசியுடன் சேர்ந்து உனக்கோர் குழந்தை பிறந்தபின் உன் சாபமகலும் என்றார். அங்ஙனமே நலன் என்ற குழந்தை இருவருக்கும் ஜநித்தது. சித்ராங்கதை தனது தந்தை குரங்காவதற்குத் தானே காரணமானதைக் கண்டுவருந்தினாள். மஹர்ஷிவிரைவில் சாபமகலப் போவதைக் கூறி மற்ற மூன்று கன்யகைகளின் தந்தைகளையும் ஜலத்தில் தவம்புரி

யும் காலவரையும் அழைத்து வரும்படி கட்டளையிட்டார். அங்ஙனமே விச்வகர்மன் எல்லோரையும் அழைத்து வந்தான். எல்லோரும் ஸப்த கோதாவரத்தில் ஸ்நாநம் செய்து ஹாடகேச்வரரைப் பூஜித்தனர். விச்வகர்மனது மகளான சித்ராங்கதையை ஸுாதனும், தேவவதி எனும் ராக்ஷஸ கன்யகையை ஜாபாலியும், வேதவதியை இந்தரத்யும் நனும் தமயந்தியைச் சகுநியும் முறையே விவாஹம் செய்து கொண்டனர். ஒருமாத மங்குதங்கி புதியதம்பதிகள் ஸப்தகோதாவாத்தில் புனலாடினர். அன்றன்று மலரெடுத்து மஹா தேவனைப் பூஜித்தனர். பின்னர் அனைவரும் தத்தம் இருப்பிடம் சென்றனர். அதேபோல் நீ என்னை மணந்தால் முடிவில் சுகமே அடைவாய் என்று கூறி தண்டன் அரஜையைத் தனக்கு மனைவியாகும்படி வேண்டினன். அவள் அரசனைப் பார்த்து நீ யாது கூறினும் சரி! என் தந்தை உத்திரவின்றி உன்னைத் தொடமாட்டேன் என்றாள்.

தண்டனது காமவிகாரம் அவன் விவேகத்தை விலக்கிற்று. அரஜையைப் பலாத்காரமாகக் கட்டித் தழுவிகாம சுகத்தை அனுபவித்துச் சென்றான். அவள் இக்கொடும் செயலை நினைத்து நினைத்துக் கதறினாள். சுக்ரரும் தற்செயலாக அதேஸமயத்தில் வந்து விட்டார். பெண்ணின் துக்கநிலையைக் கண்டு அவருக்குக் கனல்போல் சினம் எழும்பியது. அரஜே! கோபங்கொண்ட கால ஸர்ப்பத்துடன் விளையாடுபவன் யார்? எவன் எமலோகஞ்செல்ல வழி தேடுகிறான்? எனது புதல்வி நீ என அறியானோ? உன்னைத் தீண்டிய தீயனது பெயரைக்கூறு. இக்கணத்திலே அவன் பற்றி எறிவன்! என்று சுக்ரர் வின்வினார். அவள் தண்டனெனக் கூற, தனது சிஷ்யனே தனக்கு அபசாரம் செய்தானென்றறிந்து சுக்ரர் அடங்காக் கோபங்கொண்டார். கையில் ஜலமேந்தி ஏழுநாளில் தண்டன் நாடுநகரத்துடன் யானை

ஸேனை பரிவாரத்துடனும் சாம்பலாவான் என்று சபித்தார். பெண்ணை நோக்கி உனது பாபமகலும்வரை இங்கிருந்து தவம் செய் என்றுரைத்து சுக்ரர் பாதாளஞ் சென்ருர். தண்டனது காமத்தால் அவனும் அவன் நாடுமழிந்து காடா யிற்று. இன்றும் ஏனையோரை எச்சரிப்பதுபோல் அவன் நாடு தண்டகாரண்யமென்ற காடாகி நிற்கிறது. ஆதலின் பரஸ்த்ரீயினிடம் ஆசைகொண்டு அழியாதே! ஸாமான்ய மான பெண்ணைத் தீண்டியவனே இக்கதி பெற்ருனெனில் ஜகன்மாதாவான அன்னையை விரும்பும் நீ எக்கதி அடை வாயோ? வேண்டாம் அந்தக! உனது துரெண்ணத்தை விடு என்று ப்ரஹ்லாதன் எடுத்துரைத்தான். அந்தகனுக்கு அந்த்யகாலம் அருகில் வந்தமையால் ப்ரஹ்லாதனுரைத்தப் பேருபதேசம் அவன் செவியில் விழவில்லை. அன்றியும் ப்ரஹ்லாதனைப் பார்த்து சுக்ரசாபத்திற்காளான தண்டனும் யானும் ஒன்ரூ? ஒரு ஸஹாயமுமின்றி ஒற்றைக்காளைமீது செல்லும் பிக்ஷாண்டி எனக்கு ஈடோ? சராசர வஸ்துக்க ளனைத்தும் என்னைக் கண்டு நடுங்கும். நீர் கூறும் பரமசிவ னுக்கு யான் பயந்தவனல்லன் என்ருன். கருணைகொண்ட ப்ரஹ்லாதன் மறுபடியும் இவனை நல்வழிப்படுத்தப் பல உபதேசங்களைச் சொன்னுர். அஸிதர் அகஸ்த்யர் மநுமுத லிய பெரியார்களது உத்தம சரிதத்தை உவமையாகக் கூறி னர். கலஹத்தால் கெட்ட விபுவையும் பிறரைத் துன்புறுத் தியதால் நாசமடைந்த நமுசியையும் கர்வத்தால் இறந்த ஸந கரையும் பிறர்பொருளில் கொண்ட பேராசையால் பாழான ஹிரண்யாக்ஷனையும் உதாரணமாகக்கூறி தர்மத்தைக் கை விடாதே என்ருர். தர்மத்தை யான் தழுவப்போவதில்லை! நீ கூறிய தர்மம் உமக்கே இருக்கட்டும் என்றுகூறி அந்தகன் சம்பரனை அழைத்தான். அழகிய கைலாஸமலையை யாரு னக்குத் தந்தது? உலகெலாம் எனக்கு அதீனம். பார்வ

தியை என்னிடமளித்து விட்டால் கைலாஸத்தில் நீ வஸிக்க லாம் என்று சங்கரனுக்குச் செய்தியைச் சொல் என்றான். அவனுமங்ஙனமே பிநாகியினிடம் கூறினன். புன்னகை கொண்ட புராரி இம்மலை இந்த்ரனுலெனக் களிக்கப்பட்டது. அவனுத்திரவின்றி அதைவிட முடியாது. பார்வதீ விரும் பினல் எங்கு வேண்டுமானுலும் செல்லட்டும். என்று விளை யாட்டாகக் கூறினர். சம்பரன் அம்பிகையினிடம் வந்து அந்தகனை மணக்க தங்களுக்கென்ன ஆக்ஷேபமென்றான். இதைக்கேட்ட அன்னை பாதசாரியாக வரும் என்னைச் சேனைகளுடன் கூடி அந்தகன் ஜயிப்பானுகில் பின்னரதைப் பற்றிக் கூறுகிறேன் என்றாள். இதைக்கேட்ட அந்தகன் துர் யோதனனை அழைத்துப் பேரியை முழங்கச் செய்தான். பேரீ நாதத்தைக் கேட்டு ஜம்பன் குஜம்பன் ஹுண்டன் துஹுண்டன் சம்பரன் பலி பாணன் கார்த்தஸ்வரன் ஸூர்ய சத்ரு மஹோதரன் விருஷபர்வவிரோசநன் முதலிய பல ராக்ஷஸ வீரர்கள் போர் கோலங் கொண்டு வந்தனர். அந்தகனைப் பணிந்து அனைவரும் கைலாஸத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

ஈசனது ஆணையின் படி நந்தி ஸ்நாநம் செய்து ஸகல தேவ கணங்களையும் மநதால் நினைத்தார். உடனே பதினேரு கோடி ருத்ரர்களும் குரங்கு முகங்கொண்டு தாங்கள் த்வார பாலர்களுடன் வந்தனர். அறுபத்தாறுகோடி ஷண்முககண மும் எழுபதுகோடி சிவகணமும், பைரவகணம் பாசுபத கணம் திகம்பரகணம் முதலிய எண்ணிறந்தகணங்கள் அங்கு வந்து குவிந்தன. நந்தி பரமசிவனிடம் சென்று முழங்காலி ட்டு பணிந்து ஒவ்வொரு கணதிபதியையும் அழைத்துவந்து இவர் இன்ன கணத்திற்குத் தலைவர் என்று அறிவித்தார். அவரவருக் கேற்றபடி பகவான் ஆசீர்வாதம் செய்தார். மஹாபாசுபதகணங்கள் அருகே வந்தவுடன் கங்காதரன்

எழுந்து நின்று அவர்களை வரவேற்று அக்கணாதிபதியை அணைத்துத் தழுவி ஆஸநத்தில் அமர்த்தினர். இதைக்கண்டு எல்லா கணங்களும் வியந்தன. எவருக்கு மில்லாத பகவானது ஆலிங்கனம் எங்ஙனம் இவருக்குச் சொந்தமாயிற்று என சிந்தித்தன. அவர்களது விருப்பைக் குறிப்பாலறிந்த நந்திபகவானை வணங்கி அவர் செய்த சிறந்தபுண்யம் யாதென அடக்கத்துடன் வினவினர். பரமசிவனிடம் பக்திகொண்ட ஏனையகணங்கள் மஹாவிஷ்ணுவை நிந்தித்தன. அவரைப் பூஜியாது சிவனைமாத்ரம் அர்ச்சித்தன. மஹா பாசுபதர்களோ விஷ்ணுவும் சிவனும் ஒன்றென்றெண்ணி அவரிடம் பகைமைகொள்ளாது சிவபூஜை செய்தனர். ஆதலின் அவர்களுக்குத்தனது ஆலிங்கன அருள் கிடைத்தது என்று பரமனுரைத்தார்.

ஹரிஹரர் ஒன்றென்பதை நன்கு விளக்கிக் கூறும்படி தேவகணங்கள் வினவ விரூபாக்ஷன் விளம்பினர். ஒன்றான பகவான் உலகைப் படைக்கும்போது ப்ரும்மனாகவும் பரிபாலிக்கும்போது விஷ்ணுவாகவும் லயப்படுத்தும்போது ருத்ரனாகவும் அழைக்கப்படுகிறார். ஹரியே ஹரன், ஹரனே ஹரி. இவ்விரு மூர்த்திகளுக்குள் எள்ளளவும் பேதமில்லை என்று கூறி எம்பிரான் இதை நிதர்சநமாகக் காட்ட அரிய ரூபமெடுத்தார். வெளுத்த உடலில் சங்க சக்ரமும் பீதாம்பரமும் கருடத்வஜமும் விருஷபவாஹநமு மமைந்திருந்தன. அடுத்த க்ஷணத்தில் கருடவாஹனத்தில் கருத்த மேனியும் மானும் மழுவும் ஜடையும் கங்கையும் சந்திரனும் விருஷபத்வஜமும் அமைந்த விக்ரஹமாக மாறிற்று. அதன்பின் ஒரே உருவில் ஒருபுறம் ஹரியாகவும் மற்றோர்புறம் ஹரனாகவும் தோன்றியது. அவ்வுருவும் மறைந்தது. க்ஷணம் சிவனாகவும் க்ஷணம் விஷ்ணுவாகவும் க்ஷணம் பிரும்மாவாகவும் காணப்பட்டது. அத்புத செயலைக்கண்டு கணங்கள் வியந்து

பரமனைத் துதித்துப் பூஜித்தன. அற்ப பூஜையாலும் அதிக ஸந்தோஷமடையும் பக்தவத்ஸலன்! கணங்களே யாது வரம் வேண்டுமென்றார். அவைகளும் இதுவரை தாங்கள் இரு மூர்த்திகளும் வேறென்று எண்ணி விஷ்ணுவைப் பூஜிக்கா திருந்த பாபமகலவேண்டும் என்றனர்.

இதனிடையில் அந்தகாஸுரன் மந்தரமலைச் சாரலில் தங்கி அட்டஹாஸம் செய்தான். விநாயகர் இதைக்கேட்டு விரைவாக வந்து காலகாலனை வணங்கி அந்தகனைக்கொல்ல தாங்களே புறப்படவேண்டும் என்றார். பகவான் ஜயை விமலை முதலிய தோழிகளை அழைத்து அம்பிகையை அவர்களிடம் ஒப்புவித்து ஜாக்ரதையாக இருக்கும்படி கூறி யுத்தரங்கம் சென்றார். வழியில் பல நற்சகுனங்கள் தோன்றின. நமக்கு ஜயம் நிச்சயமென கணங்கள் ஆரவாரம் செய்தனர். இச் சகுனத்தைக் கண்டுதான் நமக்கு ஜயமென்றெண்ணினீர்களா? காலருத்ரன் நமது ரக்ஷகனுயிருக்க எவரே நம்மை ஜயிக்க வல்லவர் என்று நந்தி கூறினர். சிவகணங்களும் ராக்ஷஸ கணங்களும் ரணகளத்தில் ஒன்று கூடின. சிவகணங்கள் ராக்ஷஸர்களைக் கொன்று குவித்தன. மிகுதியுள்ள அரக்கர்படை பயந்தோட தண்டன் எனும் தைத்யன் சிவகணங்களைக் கதைகொண்டு தாக்கினன். விநாயகர் அவனை எதிர்த்து நின்று எமலோகமனுப்பினர். நந்தி, குஜும்பன் முதலிய பல ஸேனதிபதிகளை ஸேனையுடன் அழித்தார். எண்ணிறந்த ஸேனைகள் சிவகணங்களால் அடிக்கப்பட்டு மாண்டன. இதைக் கண்டு துக்கங்கொண்ட அந்தகன் சுக்ரரிடம் சென்றான். அவர் ஸஞ்ஜீவினி எனும் வித்யையைக்கொண்டு இறந்த அஸுரர்களைப் பிழைப்பித்தார். முன்போலவே அவர்கள் போருக்குவர இதைக்கண்டு சிவகணங்கள் வியந்தன. பரமசிவன் நந்தியை அழைத்து சுக்ரரை விரைவில் கொண்டுவா என்றார். நந்தி சுக்ரரிடம்

செல்வதை அறிந்த அரக்கர் அவர் வழியை மறித்தனர். சில ராக்ஷஸர் சிவகுமாரனைப் பிடித்துக்கொண்டு அவர் தலையில் குட்டிக்கொண்டிருந்தனர். சதுர்முகன் இந்த்ரனையழைத்துத் தேவஸேனையுடன் மந்திரமலைசென்று விநாயகருக்கருகே நில் என்றார். அடங்கிக்கிடந்த அமரஸேனை வந்தவுடன் அரக்கருக்குக் கோபம் பொங்கிற்று. அவர்களை எதிர்க்க ராக்ஷஸஸேனை ஒருமிக்கக் கூடிற்று. இதே தக்க ஸமயமென்றெண்ணி நந்தி விரைந்து சென்று தீர்த்தக்கரையில் ஸஞ்ஜீவினீ மந்த்ரத்தை ஜபிக்கும் சுக்ரரைத் தூக்கி வந்தார். பரமசிவன் அவரை விழுங்கிவிட்டார். வயிற்றினுள்ளே இருந்து சுக்ரர் பகவானைத் துதித்தார். உனக்கு என்னவேண்டுமென்று சிவன் வினவ சுக்ரர் தன்னை வெளியில் விடவேண்டுமென்றார். பகவான், சுக்ரரைக் கண்ணை மூடிக்கொண்டு வெளியில் வரும்படி கூறினர். சுக்ரர் கண்ணை விழித்துப்பார்க்க ஆங்கு பதினன்கு லோகமும் காணப்பட்டன. பலகாலம் பகவானது குக்ஷியில் பல ஆச்சரியங்களைக் கண்டு சுக்ரர் வெளியில் வர வழி யறியாது களைத்து பகவானைத் துதித்தார். கிருபாநிதியான பகவான் அவரைத் தன் புத்ரனாக பாவித்து புத்ரன் வரும் வழியாலே வா என்றார். அங்ஙனம் சுக்ரம் வரும் வழியால் வெளிவந்த அவர் சுக்ரர் என்றழைக்கப்பட்டார். குலகுரு வந்த பின் மிக்க தைர்யங்கொண்ட தைத்யஸேனை முன்னினும் பயங்கரமாக யுத்தம் செய்தது. தேவஸேனையையும் சிவகணங்களையும் பல அஸுரர் விழுங்கிவிட்டனர். மந்தரமலை சூன்யமாக இருக்கக் கண்ட கைலாஸநாதன் ஜ்ரும்பாம்பிகை என்ற சக்தியைப் படைத்தார். அவளது சக்தியால் அஸுரர் சண்டையைவிட்டு சோம்பல்கொண்டு வாயைப் பிளந்து கொட்டு வாய் விட்டனர். ஸகல தேவர்களும் அஸுரர் குக்ஷிகளிலிருந்து வெளிக் கிளம்பி கோபங்கொண்டு சண்டை யிட்ட

னர். இங்ஙனம் பல்லாண்டு போர்புரிய பரமசிவன் ஒருநாள் மாலையில் ஸந்தியாவந்தநத்தை அனுஷ்டித்து ப்ரதோஷகாலத்தில் பதினெட்டு கைகளுடன் தாண்டவமாடினர். ஸகல சிவ கணங்களுமங்ஙனமே ஆநந்தத் தாண்டவம் புரிந்தன.

இதைக்கண்டு அஞ்சிய அந்தகன், ஸுந்தனெனும் தோழனை அழைத்தான். பரமசிவனை ஜயிப்பது ஆகாத காரியம். விரைவில் அவர் என்னைக் கொன்றால் எனது இஷ்டம் நிறைவேறாதுபோம். ஆதலின் யான் சிவ வேடம் பூண்டு பார்வதியினருகே செல்கிறேன். நீ நந்தியாக என்னுடன் வா என்றான். இருவருமங்ஙனமே அம்பிகை இருப்பிடம் சென்றனர். தன் பொருட்டு பகவான் சரீரத்தில் வ்ரணமுண்டானதெனக் கருதி அதை ஆற்ற, நெய் பழைய துணி உப்பு தயிர் முதலியவைகளைக் கொண்டு வரும்படி தேவி தோழிகளைக் கூறினாள். அஸுரன் அருகில் வரவர அம்பிகை அவனை அரக்கனெனக் கருதி பயந்தோடினாள். அவனும் பின்தொடர்ந்தான். அன்னை உடனே வெள்ளை எருக்கில் புகுந்தாள். பார்வதியைக் காணுமல் வருந்தி அந்தகன் ரணகளத்திற்கு வந்தான். அச்சமயம் இந்திரன், ஜம்பன் மேல் வஜ்ராயுதத்தை ப்ரயோகித்தான். அது ஆயிரந் துண்டுகளாகச் சிதறி கீழே விழுந்தது. அக்நியினிடம் சென்று சத கண்டை என்ற ஆயுதத்தைப் பெற்று மறுபடியும் இந்திரன் யுத்தம் செய்தான். அஸுரன் அவனது ஐராவதத்தை அடித்துக் கீழே தள்ள இந்த்ரன் பூமியில் விழுந்தான். தேவர்கள் அவனுக்கோர் ரதமளித்து ரணகளத்திற்கு வரும்படி அழைத்தனர். அவன் ஸாரதியில்லாமல் எங்ஙனம் யுத்தம் செய்வதென்று கூறி பூலோகம் சென்றான்.

மாதலி. தேவேந்த்ரன் பூமியில் விழுந்தபோது பூமி அசைந்தது. அதுஸமயம் சமீகர் என்ற முனிவரது பத்நி தன் புருஷனைப் பார்த்துக் கூறினாள். நாத! இச்சமயம் நமது

குழந்தையை வாசலில் எடுத்து எரியும். பூகம்பத்தில் வாச லில் எரியும் வஸ்து, இரண்டாக வருமென ஜோஸ்யர் கூறின ரல்லவா? என்றாள். மஹர்ஷி அங்ஙனமே புதல்வனை எரிந்து பசுவையும் எரியச் சென்றார். மனைவி ஒன்றுக்குமேல் எரிந் தால் உள்ளதும் போய்விடுமென்று கூறி அவரைத் தடுத்தாள். மஹர்ஷி மனைவியை நோக்கி இது என்ன ரஹஸ்யம் கூறென் றார். நாத! சற்றுபொருத்திரும், பின்னர் தானே விளங்கும் என்றாள். நீ கூறாவிடில் யான் உண்பதில்லை என்று முனிவர் உரைக்க, பதிவ்ரதை பயந்து உண்மையைச் சொல்ல ஆரம் பித்தாள். அதற்குள் குழந்தை எழுந்து இந்த்ரனிடம் சென் றது. அவன் நீ யார் என்று வினவ, சமீகரது புதல்வன் யான். மாதலி என்று என்னை அழைப்பார்கள். தங்களுக்கு ஸாரத்யம் செய்யவே யான் தோன்றினேன் என்றது. அதைக்கேட்டு அதன் சக்தியைக்கண்டு இந்த்ரன் வியந்தான். மாதலியைச் சாரதியாகக்கொண்டு போருக்குச் சென்றான். கருடன் மீதேறி மதுசூதன், ஜம்பன் முதலிய பல ராக்ஷஸர் களைக் கொன்றார். அந்தகனது ரதத்திலுள்ள ஆயிரம் அச் வங்களையும் ஸாரதியையும் வீழ்த்தினார். அஸுர ராஜன் கதையைக் கையிலேந்தி காலகாலனை எதிர்த்தான். பரமன் தேவகணங்களோடு கூடியிருந்தாலும் தான் வேறொருவர் ஸஹாயமின்றியே அவரைக் கொல்வதாகக் கூறினான். பரம னும் ஸேனையில்லா எதிரியுடன் படையுடன்கூடிய தான்போர் புரிவதழகல்ல என்றெண்ணினார். மஹாவிஷ்ணு முதலான ஸகல கணங்களையும் தனக்குள் லயமாக்கினார். தன்னந் தனியே நின்று அந்தகனோடு போர் செய்தார். உக்ரமான சூலத்தால் அந்தகன் மார்பைப் பிளந்தார். அதை அவன் மதியாமல் கதையால் ருத்ரனைத் தாக்கினான். கங்காதரனது உடலிலிருந்து உதிரம் பெருகிற்று. அதிலிருந்து பைரவன் வித்யாராஜன் லலிதராஜன் விக்னராஜன்முதலிய சிவகணங்கள்

தோன்றின. பகவான் தனது சூலத்தினுல் அந்தகனேக்குத்தி கையிலேந்தி நின்ருர். அந்தகனது உடலிலிருந்து உதிரம் ஆறுகப் பெருக அதை ஓர் சிவகணமருந்தியது. அந்த கணம் அங்காரம் (கட்டைத்தணல்) போலிருந்ததால் அதற்கு பகவான் அங்காரகன் எனப் பெயரிட்டார். நவக்ரஹங்களில் ஒன்ருயிருக்கும்படி அருள் செய்தார்.

தன் சூலத்திலுள்ள அந்தகனே ஆயிரமாண்டு முக்கண்ணன் மூன்ருவது கண்ணுல் கொளுத்தினர். ரத்தம் குன்றி மாம்ஸம் உலர்ந்து அந்தகன் உடல், எலும்பும் தோலுமாக நின்றது. அவனது பாபமுமகன்றது. அவன் பகவானது ஸ்வரூபத்தை உணர்ந்தான். தான் செய்த ஸாஹஸத்தை எண்ணி வருந்தினன். அங்கிருந்த வண்ணமே அஞ்ஜலி செய்து அரனேத் துதித்தான். கருணேக்கடலான காமாரி அவனேக் கீழே இறக்கி தன் கையால் சூலத்திலிருந்து விடுவித்தார். உடனே அவன் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து போற்றினன். அவனே ப்ரிங்கிரிடர் என்ற பெயராலழைத்து ஓர் கணத்திற்குத் தலைவனுகச் செய்தார். இதைக் கண்டு ஏனேய கணங்கள் வியந்தன. விருஷவாஹநனது தயையைக் கொண்டாடினர். ஸர்வேசனிடம் விடைபெற்று கணங்கள் இருப்பிடம் சென்றன. இரண்டாயிர மாண்டுகள் சென்றபின் பரமன் பார்வதியி னிருப்பிடம் சென்ருர். அவர் வரவை அறிந்து வெள்ளெருக்கிலிருந்து தேவி வெளி வந்தாள். பரமனேப் பணிந்து போற்றி அருகில் வரும் புதிய கணுதிபன்யார் என வினவினுள். அன்னேயின் திருவடியை வணங்கி அவன், அந்தகனுக இருந்து தான் செய்த அபசாரங்களே க்ஷமித்தருள வேண்டுமென ப்ராத்தித்தான். அம்பிகையும் அதை மன்னித்து கணுதிபனுக இருந்து தங்களேப் பூஜிக்கும்படி கட்டளேயிட்டாள்.

ஸப்தமருத்துக்கள் :—திதி, ஹிரண்யாக்ஷன் முதலிய

தனது புதல்வ ரிறந்ததால் மிகத் துன்பமுற்று தன் பதி யான கச்யபரைச் சரணமடைந்தாள். அரக்கர் அழியக் காரணமா யிருந்த அமராதிபனைக் கொல்லத்தக்க தநயன் தனக்கு பிறக்கும்படி அருள்புரியவேண்டினாள். ஆயிர மாண்டு சுசியாக இருப்பின் இஷ்டமான புதல்வன் உண்டா வானென கச்யபர் கூறினார். அங்ஙனமே அவரருளால் கரு தரிக்க திதி மிக நியமத்துடன் தவம் செய்தாள். இந்திரன் தனது பெரிய அன்னைக்குப் பணிவிடை செய்வதாகக் கூறி னான். அவளும் அதை அங்கீகரித்தாள். காலந் தவறாமல் உணவிற்கு உரிய கந்தமூலங்களைக் கொண்டுவருவான். பூஜை க்கு வேண்டிய புஷ்பங்களை அளிப்பான். மற்றும் பல தொண்டுகளைச் செய்து அவள் தன்னிடம் நம்பிக்கை வைக் கும்படி செய்துவிட்டான். ஒருநாள் திதி புத்ர சோகத்தி னால் தன் முழங்கால்களில் தலையை வைத்துக்கொண்டு உட் கார்ந்தாள். அங்ஙனமே அவள் உறங்க, அவளது தலைமயிர் அவிழ்ந்து அவள் கால்களில் பட்டது. முழங்காலில் தலையை வைப்பதும், மயிர் காலில் படுவதும் அசுத்தமான காரியமா கும். இதுஸமயம் சதமகன் அவள் நாஸிகை வழியாக வயிற்றில் புகுந்தான். ஆங்குள்ள கருவை வஜ்ராயுதத்தால் ஏழுகூறுகப் பிளந்தான். அவை அழும்பொழுது (மாருத) அழாதே என்றான். அக்காரணம்பற்றி அவை ஸப்த மருத் துக்களென அழைக்கப்பட்டன. திதி விதியின் வலியை எண்ணி தனது குற்றத்தைச் சிந்தித்து இந்த்ரனிடம் சினங் கொள்ளாது இவ்வேழு மருத்துக்களையும் அவன் ஸேனையில் சேர்த்துக்கொள்ளச் சொன்னாள்.

**ஸ்வாயம்புவ மந்வந்தர மருத்துகள்.** ஸ்வாயம்புவ மனு விற்கு ஸவநன் என்றோர் புதல்வன் இருந்தான். ஸுவேதா எனும் மனைவியுடன் மன்னன் பூமண்டலத்தை ஆண்டுவந் தான். அவன் ஸந்ததி இல்லாக்குறையுடனே இறந்தான்.

ஸு வேதை பதியின் சவத்தின்மேல் விழுந்துக் கதறினள். யார்என்ன கூறியும் அவள் துக்கம் அடங்கவில்லை. தீயி லிட சவத்தைக் கொடாமல் கதறிக்கொண்டே இருந்தாள். அவளை நோக்கி அசரீரிணியான வாக்கொன்று தோன்றிற்று. "பெண்ணே! ஏன் அழுகிருய்! மாண்டவர் மீண்டும் வருவரோ? அவர் ஸந்ததியின்றி இறந்தாரென்று நீ வருந்தினுல் அவர் பிணத்துடன் நீயும் தீயில் விழு! குழந்தைகளைப் பெறு வாய்" என்ற இச்சொல்லைக்கேட்டு மஹிஷி வியந்தாள். தேவ வாக்குப் பொய்த்துப் போகாதென நம்பி அங்ஙனமே செய் தாள். தம்பதிகளிருவரும் திவ்ய சரீரம்பெற்றனர். ஆகா யத்தில் ஆறுநாள் தங்கி சிற்றின்பத்தைப் பெற்றனர். அரச னது வீர்யம் ஓர் தாமரை இதழில் விழுந்தது. அங்கு தற் செயலாக ஏழு முநிபத்நிகள் வந்து ஸ்நாநம் செய்தனர். தங் கள் பதியைப் பூஜித்து இஃதென்ன என்று வினவினர். தேவ ரஹஸ்யத்தை உணர்ந்த மஹர்ஷிகள், அதை புஜிக்கும் படி மனைவிகளைக் கூறினர். அதை உட்கொண்டவுடன் அப் பெண்களது ப்ருஹ்மதேஜஸ் அவர்களை விட்டகன்றது. அவர் களுக்குக் குழந்தைகள் பிறந்து அழுதன. பிரும்மா அவர் கள் எதிரில் தோன்றி ஸ்வாயம்புவ மங்வந்தரத்திற்கு அவர் கள் மருத்துக்கள் என்று கூறி அவர்களைத் தேவலோகத்திற் கழைத்துச் சென்ருர்.

ஸ்வாரோசிஷ மருத்துகள். ஸ்வாரோசிஷ மநுவின் புதல்வர் ரிதத்வஜர் என்பவர். அவருக்கு ஏழு புத்ரர் பிறந் தனர். மஹாமேருமலை சென்று மன்னனது மைந்தர்கள் தவம்புரிந்தனர். இந்த்ரபதவியில் அவர்கள் நாட்டம்கொண் டனர். இதை அறிந்த இந்த்ரன் பூதனை எனும் அப்ஸரஸை அனுப்பி அவர்கள் தவத்தைக் கலைத்தான். ராஜ குமா ரர்கள் ஸ்நாநம் செய்யும்போது அந்நதியி லிறங்கி பூதனையும் நீராடினள். அவளது அழகைக் கண்டவுடன் இவர்களு

டைய மகம்கலங்கிற்று. காமன் கணைக்கிலக்காகி, வீர்யத்தை இழந்தனர். வந்தவேலை முடிந்ததென தேவ வேசியும் ஸ்வர்க்கம் சென்ருள். இவர்களும் தன் தவம் பாழானதைக் கண்டு பாராளும் நோக்கத்துடன் ராஜ்யத்திற்குத் திரும்பினர். இவர்கள் இழந்த வீர்யத்தைச் சங்கினீ எனும் மத்ஸ்யம் விழுங்கிற்று. அழகிற்சிறந்த அம்மீனைச் செம்படவர் பிடித்து ரிதத்வஜனது புத்ரர்களிட மளித்தனர். அது எழு புதல்வர்களைப் பெற்றபின் திவ்யசரீரமெடுத்துத் தேவலோகம் சென்றது. பால் கொடுப்பாரின்றி அக்குழந்தைகள் அழ, பிரும்மன் மருத்தென நாமஞ்சூட்டி அவர்களை இந்திரனிட மளித்தான்.

உத்தமமருத்துக்கள். த்ருவனது வம்சத்தி லுதித்த வபுஷ்மானுக்கு ஜ்யோதிர்மான் என்ற புதல்வன் பிறந்தான். அவன் பல்லாண்டு புத்ர பாக்யமில்லாது வருந்தி காநகத்தில் தவம்புரிந்தான். அவன் மனைவி மிக்கரூபவதி. உத்தம பதிவ்ரதை. ஆதலால் வனஞ்சென்ற புருஷனைப் பின்தொடர்ந்து தொண்டுபுரிந்தாள். ஸப்த ரிஷிகள் ஆங்குவந்து அவர்களுக்குக் குழந்தைகள் உண்டாகுமென்றுரைத்து மறைந்தனர். இருவரும் நாட்டிற்குத் திரும்பிவந்து நற்காலத்தை நாடியிருந்தனர். முநிவரருளால் மஹிஷி கர்ப்பிணியானுள். மன்னனும் விதிவழுவாது ஸீமந்தம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்து புத்ரனுண்டாகும் காலத்தை எதிர்பார்த்திருந்தான். அதற்குள் அரசனது விதிமுடிந்தது. காலனது தூதனை நோய் மன்னன் உயிரைக் கொள்ளைகொண்டது. அவனுடலைத் தீயிலிட்டு, மஹிஷி கர்ப்பிணியாக இருந்தும் தீக்குளிக்கக் கருதினுள். மந்திரிகள் தடுத்தும் அதை மதியாது அவள் பதிபக்தியால் சுடரில் இறங்கினுள். இறைவனருளால் ஆங்கு நீர் சொறிய அக்னி அவிந்தது. ஆங்கு எழு குழந்தைகள் உண்டாகி அழுதன. அவைகளே பிரும்மனுல் மருத்

துக்க ளென்றழைக்கப்பட்டன. தாமஸமநுவின் புத்ரரான தந்தத்வஜர் புத்ரனை நாடி தன்னுடலை அறுத்து அக்னியில் ஹோமம் செய்தார். அவருடைய ஏழு தாதுக்களும் ஏழு மருத்துக்களாயின. ரைவதமநுவின் புத்ரரான சத்ருஜித் என்ற அரசன் ஸூர்யனைப் பூஜித்துவந்தான். ஸூர்யன் ஸூரதி என்ற கன்யகையை அரசனுக் களித்து அவள் மூல மாக உன் ஸந்ததி பெருகுமென்றார். அப்பெண்ணுக்குப் புத்ரபாக்ய முண்டாவதற்குள் அரசன் யமலோகஞ் சென்றான். அக்கன்யகையும் அவனது பிறிவைத் தாளாது இறந்தாள். ஸப்தரிஷிகள் அவளது ரூபத்தைக்கண்டு ஆசை கொண்டு ஏழு புதல்வர்களைப் படைத்தனர். சாக்ஷுஷ மநுவின் தநயரான மங்கி என்ற ராஜன் ஸப்தஸாரஸ்வதத்தில் தவம்செய்தார். துஷிதை எனும் தேவஸ்த்ரீ தனது ரூபத்தினால் அவர் தவத்தைக் கெடுத்தாள். அவள் அழகைக்கண்டு மங்கியினது வீர்யம் ஸப்தஸாரஸ்வதத்தில் நழுவிற்று. அவை அந்தமன்வந்தர மருத்துக்களாயின. இங்ஙனம் மருத்துக்களின் உற்பத்தியைக் கேட்பவரது பாப மகன்று தர்மம் விருத்தியாகும்.

காலநேமி வதம். மஹாபலியினது புரோஹிதரான சுக்ரர் ஒரு ஸமயம் ராக்ஷஸவம்சத்தை இந்திரனே அழிப்பவன். அவனுக்கு ஸஹாயமாக இருந்து பல அரக்கர்களை விஷ்ணுவும் கொன்றார் என்று கூறினர். இதைக்கேட்ட பலி அடங்காச் சினங்கொண்டு அரக்கர் படை அனைத்தையும் ஒன்றாகத் திரட்டினன். உதயமலையில் தங்கியிருந்த தேவேந்திரனை சண்டைக் கழைத்தான். அவன் மஹாவிஷ்ணுவைச் சஹாயமாகக்கொண்டு தைத்யரோடு போர்புரிந்தான். பகவானது பாண வர்ஷத்தைத் தாளாமல் பயந்தோடிய பகைவர் காலநேமியைச் சரண்புகுந்தனர். கடுங்கோபங்கொண்ட காலநேமி கண்ணில் காண்பவரையெல்லாம் விழுங்கினன். அஷ்டதிக்

பாலகர்களை முறியடித்து முதுகுகாட்டி ஓடும்படி செய்தான். மதுஸூதநன் நூறு தலைகளுடன் பயங்கரமாக இங்ஙனம் போர்புரியும் காலநேமியைச் சரவர்ஷத்தால் மறைத்தார். அரைக்கணத்தில் அவைகளை உதறித்தள்ளி அரக்கன் கதைகொண்டு கதாதரனை எதிர்த்தான். பகவான் சக்ராயுதத்தால் அவன் கதையைப் பொடிபொடியாக்கி அவனது இரண்டு கரங்களையு மறுத்துத் தள்ளினார். கையில்லாமலே எதிர்த்து வந்த அவன் தலைகளைச் சக்ரத்தால் அறுத்துக் குவித்தார். தலை அறுந்தும் உடல் கீழேவிழாது எதிர்த்துவர அதைக் கருடன் தன் கால்களால் மார்பில் உதைத்துக் கீழே தள்ளினார். மிக்க பலிஷ்டனை காலநேமியைக் கொன்ற பின் தனக்குத் தகுதியான எதிரி எவருமில்லை என்று மாதவன் மறைந்தான். இதை அறிந்த மயன் முதலியவர் மாயா ரூபந்தாங்கி தேவஸேனையைக் கொன்றனர். இந்திரன் முதலிய அமரர் ஸ்வர்க்கத்தைவிட்டு பயத்தால் பிரும்மலோகஞ் சென்றனர். மூவுலகமும் அரக்கருக்கே சொந்தமாயிற்று. மாபலி இந்திரனானான். தைத்யரையே தனக்குச் சஹாயமாக திக்பாலர் வேலையில் அமர்த்தினான். பாணனை யமனாகவும் மயனை வருணனாகவும் ராகுவை ஸோமனாகவும் ஸ்வர்ப்பானுவைச் சூர்யனாகவும் சுக்ரரை ப்ருஹஸ்பதியாகவும் நியமித்தான். பத்துலோகங்களுக்கும் பலிபதியானான். ப்ரஹ்லாதனை அழைத்து அவரைப் பட்டாபிஷேகம் செய்துக்கொள்ளச் சொன்னான். அவர் பகவத் பக்தி எனும் ஸாம்ராஜ்யத்தில் ஈடுபட்டிருப்பதால் இதை வேண்டாமென மறுத்தார். தனக்கு தர்மோபதேசஞ் செய்யும்படி அவரைப் பலி வேண்டினான். அங்ஙனமே அவர் பல அரும்பெரும் தர்மங்களைக் கூறினார். இங்ஙனம் ஐந்தாவது கலியுகத்தின் ஆரம்பத்தில் பலி இந்திரனாகி பத்து லோகங்களையும் ஆண்டு வந்தான். தைத்யனிடம் பயந்தோடிய தேவர்கள் நாராயணனைச் சரண

மடைந்தனர். அவர் அதிதியின் வயிற்றில் வாமனனாக அவதரித்தார். அச்சமயம் அஸுரருக்குப் பல அபசகுனங்கள் உண்டாயின. ப்ரஹ்லாதன் வருவனவற்றைப் பலிக்குக்கூற, அவன் பகவானை நிந்தித்தான். ப்ரஹ்லாதன், தான் உபாஸிக்கும் மூர்த்தியை நிந்தித்ததால் பலி ராஜ்யத்தை இழப்பான் என்று சபித்து தீர்த்த யாத்ரைக்குச் சென்றார். பலி தனது குற்றத்தை க்ஷமிக்கும்படி அவரை வேண்டி அவர் கூறியபடி பகவானிடத்தில் பக்திகொண்டான். ப்ரஹ்லாதன் பல புண்ய தீர்த்தங்களில் புனலாடி யமுநா நதிக்கரையில் த்ரிவிக்ரமரைத் தர்சித்தான் என்று புலஸ்த்யர் கூற, நாரதர், "ஸ்வாமின்! இனி பலியை அடக்க பகவான் த்ரிவிக்ரமாவதாரம் செய்யப் போகின்றார். யமுநா நதியின் கரையிலுள்ள த்ரிவிக்ரமர் எப்போது உதித்தார்? யாரைச் சிக்ஷித்தார்? இதைக்கூற வேண்டும்" என்று வேண்டினர்.

## துந்து பந்தநம்.

கச்யபருக்குத் தநு என்பவளிடம் துந்து என்றோர் அஸுரன் பிறந்தான். அவன் பிருமனை நாடி பல்லாண்டு தவம் புரிந்து தேவரால் தனக்கு மரணமில்லை என வரம் பெற்றான். நான்காவது கலியுகத்தின் ஆரம்பத்தில் துந்து தேவேந்த்ரனை ஜயித்துத் தானே மூவுலகையும் ஆண்டு வந்தான். ஹிரண்யாக்ஷன் முதலிய பல அரக்கர்கள் துந்துவை அண்டி தேவலோகத்தில் வாழ்ந்தனர். ஒருநாள் துந்து தம்மிடம் பயந்த தேவர் எங்கு சென்றனர் என்று வினவினன். ஸத்யலோகத்திலிருப்பதாக தைத்யருரைக்க அங்கு சென்று தேவரை ஜயிக்கக் கருதினன். அஸுரர்கள் துந்துவை நோக்கி "மஹாராஜ! நாமங்கு செல்வதற்கில்லை. ஸ்வர்க்கத்திலிருந்து பல்லாயிரம் யோஜனை தூரத்தில் மஹர் லோகமுளது. ஆங்குள்ள மஹர்ஷிகள் அரக்கரைக் கண்ணாலேயே

தஹித்து விடுவர். ஆங்கிருந்து கோடியோஜனை தூரத்தில் ஜநலோக முளது. ஆங்கு கோமாதாக்கள் வஸிக்கின்றனர் அவர்களும் அஸுரரைக் கொன்று விடுவர். ஆங்கிருந்து முப்பது கோடியோஜனை தூரத்தில் ஸத்யலோகமிருக்கிறது. அங்கு ஓயாது ஒலித்துக் கொண்டிருக்கும் வேத த்வநி நம்மைக் கொன்று விடும்" என்றனர். அப்படியாயின் அமரர் எங்ஙனம் அங்கு சென்றனர் என்று துந்து வினவ, அவர் செய்த நற்கருமத்தை நாங்களறியோம் என்று தைத்யருரைத்தனர். துந்து சுக்ரரை அழைத்து வினவ, நூற்றோரு அச்வமேத யாகம் செய்தவர் அங்கு செல்லலாம் என்று அவர் பதில் விடுத்தார். அஸுரேந்த்ரன் தான் அச்வமேதங்களைச் செய்து ப்ரும்மலோகம் செல்லக் கருதினன். அவனியிற் சென்று தேவிகா நதிக்கரையில் யாகசாலையை நியமித்தான். பார்க்கவரிஷிகளை ஸதஸ்யராக வரித்தான். அஸுரர்களையே யக்ஞபாகத்தைப் புசிக்கும் தேவர்களாக நியமித்தான். சுக்ரரைக்கொண்டு அச்வமேதத்தைத் துவக்கினன். அந்த யாக தூமம் பிரும்ம லோகம்வரை சென்றது. அதைக் கண்டு அஞ்சிய அமரர் அச்யுதனைச் சரணமடைந்தனர். அவர்களைக் காப்பதாக அருள்புரிந்து அனுப்பிவிட்டு பகவான் வாமநராக உருவெடுத்தார்.

தரணியில் துந்துவின் யாகசாலைக்கருகே ஓடும் தேவிகீ ஜலத்தில் வந்து மிதந்தார். உள்ளே முழுகுவதுபோலும் வெளியில் வருவதுபோலும் யாக சாலையிலுள்ளோர் கண்களுக்குத் தோற்றினர். அநியாயமாக ஓர் அந்தணக் குழந்தை சாகிறதென்றெண்ணிக் கருணையோடு அதை வேதியர் வெளியில் எடுத்துப் போட்டனர். எவரும் கண்டிராத ரூபத்துடன் கூடிய இக்குழந்தையருகே எல்லோரும் சென்றனர். நீ யார்? உன் பெயர் யாது? உன்னை எவர் ஜலத்தில் தள்ளியவர்? ஏன் தள்ளினர்? என்று எல்லோரும் வினவினர். வாமநர்

அவர்கள் செய்த உதவிக்கு நன்றிகூறி அக்கேள்விக்கு விடை அளித்தார். "ப்ரபாஸன் என்றோரந்தணரிருந்தார். அவர் வருண கோத்ரத்தில் பிறந்தவர். கல்விக் கடலைக் கடந்தவர். அவருக்கு இரு புதல்வருண்டு. மூத்தவன் பெயர் நேத்ரபாஸன். இளையவன் கதிபாஸன். யானே இளைய குமாரன். தந்தையின் காலமான பிறகு அவர் பொருளை இருவரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டுமென்றேன். எனது ஸோதரன் கூன்குருடு வாமநன் நபும்ஸகன் பித்தன் குஷ்டரோகி ஆகிய இப்புதல்வர்களுக்குத் தந்தையின் பொருளில் பங்கில்லை. இவர்களுக்கு அன்னவஸ்த்ரமளித்து ஏனையவர் பாகம் செய்துக்கொள்வதுதான் முறை. வாமநனான உனக்கு இதில் பாகமில்லை என்றார். இதை மறுத்து யான் பாகமளிக்கும்படி வற்புறுத்தினேன். தன ஆசையால் கோபங்கொண்ட மூத்தவன் என்னை நதியில் எறிந்தான். இறைவனருளால் ஓராண்டாக உயிர் நீங்காது ஜலத்தில் மிதக்கிறே" னென்றார். கச்யபருக்குப் புதல்வனாய் இந்த்ரனுக்கு ஸோதரனாய்ப் பிறந்து பாற்கடலில் பள்ளிகொண்டிருக்கும் கதையைப் பகவான் கூற அவர் மாயையால் அனைவருமதை உணராதிருந்தனர். வாமநர் முனிவர்களைப் பார்த்து, அன்புடன் பந்துக்களைப்போல் என்னைக் காத்த நீங்கள் யார் ? இந்திரனைப்போல் உங்கள் மத்தியிலே விளங்கும் உத்தமன் யார்? என்று வினவினார். அவர்கள் தங்கள் வரலாற்றைக்கூறி துந்துவிடம் சென்று இவ்வுத்தம அதிதியைப் பூஜி என்றனர். அங்ஙனமே அவரை நன்கு அர்ச்சித்து அவர் வேண்டிய பொருளைத் தருவதாகக் கூறினான். " அண்ணனே அபஹரித்துச் செல்லு மிப்பொருளால் யாதுபயன் ? என்னையும் எனது பாதத்தையும் நன்றாகக் கவனித்துப் பார்த்து என் காலால் மூன்றடி மண் தந்தால் போதும் என்று" வாமநர் விளம்பினார். அஸுரன் அதை அளித்தவுடன் பகவான் திரிவிக்ரமாகத் தோன்றி இரண்

டடியால் உலகெலாமளக்க மூன்றாவதடிக்கு இடமில்லை. கோபங்கொண்ட பகவான் துந்துவின் முதுகில் வேகமாக வந்து விழுந்தார். அந்த வேகத்தினால் முப்பதினாயிரம் அடி தூரம் பூமி உள்ளே சென்று த்வாரமுண்டாயிற்று. அதில் துந்துவைத்தள்ளி மாதவன் மணல் மழை பொழிந்தார். துந்து அதில் அமிழ்ந்து அழிய இந்திரனுக்கு ஸ்வர்க்கத்தை அளித்தார். பகவான் யமுனை ரூபங்கொண்டு மறைந்து சென்றார்.

ச்ரவணத்வாதசீ புண்யம்: த்ரேதாயுகத்தில் மத்ர தேசத்தைச் சார்ந்த சாகலமென்ற நகரிலே ஓர் வைச்யனிருந்தான். தர்மன் என்ற பெயருக்கேற்றபடி அவன் மிகதர்மிஷ்டனாகவே இருந்தான். ஒரு ஸமயம் வியாபார நிமித்தம் மற்றவர்களுடன் கூடி வேறுதேசஞ் சென்றான். நடுவழியில் ஓர் மஹாரண்யத்தில் தங்கும்படி நேர்ந்தது. அன்றிரவு பல திருடர்கள் ஒன்றுகூடி இவர்களது பொருளைக் களவாடினர். பலரைக் கொன்றனர். தைவச்செயலாக தர்மன் பொருளை இழந்தானே யல்லாது அவன் உயிருக்கு ஆபத்துண்டாகவில்லை. அவன் செய்த தர்மம் அவனைக்காத்தது. தன்னந்தனியே ஓர் பாலைவனத்தில் அகப்பட்டுக் கொண்டான். புல் பூண்டோ மரஞ் செடியோ இல்லாத மணற்காடு அது. பசு பக்ஷிகளும் அங்குஇல்லை. மானவரைப்பற்றி கேட்கவும் வேண்டுமோ? தர்மனுக்குத் துணையில்லை. குடிக்க ஜலமில்லை. புசிக்க உணவுமில்லை.பலகாலம் பசியோடு அலைந்து திரிந்தான். வெகு தூரத்திற்கப்பால் ஓர் சமீமரத்தைக் கண்டான். ஏழைக்கு நிதி கிடைத்ததுபோல் ஸந்தோஷித்தான். அதனடியில் அமர்ந்து இளைப்பால் கண்ணயர்ந்து உறங்கி விட்டான். நடுப் பகலில் எழுந்தான். பலப்ரேதங்கள் ஓர் ப்ரேத ராஜனைப் பல்லக்கில் வைத்துத் தூக்கித் தன்னருகேவரக் கண்டான். அவனது பசிதாஹம் சென்றவிடம் தெரியவில்லை. ஆனால்

இவைகளிடம் தப்பிப்பிழைப்போமா? என்று பீதி உண்டாய் விட்டது. இதனிடையே இவனருகில் பல்லக்கு இறக்கப்பட்டது. எந்தநிமிஷத்தில் ப்ரேதங்களுக்குதான் உணவாகவேண்டுமோ என்ற எண்ணம் தர்மன் உள்ளத்தைக் கலக்கியது. பல்லக்கிலிருந்து இறங்கிய ப்ரேதாராஜன் தர்மனை அணுகி வந்தநம் செய்து நல்வரவு கூறினன். அப்போதும் தர்மனது பயமகலவில்லை. ப்ரேதாராஜன் கேட்டபின் தனது விருத்தாந்தத்தைக் கூறி தர்மன் அஞ்சிநின்ருன். ப்ரேதாராஜன் தர்மனைப்பார்த்து அஞ்சாதே! இங்கு வந்தநீ நமது விருந்தின ராவாய்! என்று கூறி பிரேதங்களுக்கு ஆக்ஞை யிட்டான். அவனூரில் பிறந்த தர்மனிடம் தங்கள் யஜமாநனுக்கு உண்டானப்ரீதியைக் கண்டு ப்ரேதகணங்கள் தாங்களும் தர்மனிடம் அன்பு கொண்டன. ஓர் ப்ரேதம் மண்பாத்திரத்தில் தர்மனுக்கு ஜலம் தந்தது. நீரை நினைத்துத் தவிக்கும் தர்மனுக்கு நீர் அமிருதமாயிற்று. கைகால் முகங்களைச் சுத்திசெய்து கர்மானுஷ்டாநத்தைமுடித்துக் கொண்டான். மற்ருேர் ப்ரேதம் மற்ருேர் மட்பாத்திரதில் தத்யன்னம் கொண்டு தந்தது. பசியால் வெயிலில் வாடிய தர்மனுக்கு அது அமிழ்தினும் அதிகருசியாக இருந்தது. விருந்தினருண்டபின் ப்ரேதாராஜன் தனது பரிவாரங்களுக்கு வேண்டியமட்டும் அன்ன பாநமளித்தான். பிறகு தான் புஜித்தான். பின்னர் போனவிடம் தெரியாது அன்னமும் ஜலமும் மறைந்தன. இந்த விந்தையைக்கண்டு வியந்த தர்மன் ப்ரேதாராஜனைப் பார்த்து ஐயா, தாங்கள்யார்? இம்மணல் திட்டில் எங்கிருந்து அன்ன பாநம் கிடைக்கின்றன, இதை உண்டும் உமது பரிவாரங்கள் இளைத்திருக்கக் காரணம் யாது?" என்று வினவினன். ப்ரேதாராஜன் தனது சரிதத்தைத் தர்மனிடம் வர்ணித்தான்.

அவன் சாகலநகரத்திலே ஸோமசர்மா என்ற வைச்யனுக இருந்தானும். வேண்டிய செல்வமிருந்தும் தாநதர்மமும்

செய்யாது தானும் அனுபவிக்காது தநத்தைச் சேர்த்தானும் தவறினன்றைக்காவது பால்தயிர் முதலியவைகளைஉட்கொண் டால் பழக்கமில்லாததால் மநமும்நொந்து ஜீர்ணமாகாமல் நோயுமுண்டாகுமாம். கீரை பிண்ணுக்கு முதலிய செலவில் லாப் பொருள்களையே புஜித்தானும். ஒரு ஸமயம் ச்ரவண த்வாதசீ புண்யதிநத்தைக் கருதி நகரிலுள்ளோர் இராவதி நட்வவா என்ற இருநதி ஸங்கமத்திற்கு சென்றனர்களாம். எல்லோரையும்போல் இவனுமன்று உபவாஸ மிருந்தானும். மறுநாள் மற்றவர் செய்ததுபோல் அன்னதாநம் முதலியவை களைச் செய்ய இவனது லோபம் இடமளிக்க வில்லையாம். பலர் மிகசிறந்த தாநங்களைச்செய்யும்பொழுது கௌரவத்தின் பொருட்டாவது ஸ்வல்பதாநம் செய்ய அவனுக்கு எண்ண முண்டாயிற்றும். ஆதலின் மட்பாத்ரத்தில் வைத்து தயிர் சோற்றை ஓர் அந்தணனுக்களித்தானும். ஓர் ஜதை பாத ரக்ஷையும் ஓர் குடையுமவனுக்கே கொடுத்தானும். இதைப் பெற்றுக்கொண்டவர் மிகச் சிறந்த ஸத்பாத்ரம். அவனுயு ளுக்குள் இது ஒரு தாநமேதான் அவன் செய்தானும். கொடை கொடுத்ததால் அந்த சமீமரமும் பாதுகையால் இந் தப்ரேத வாஹநமும் அன்னத்தால் இந்த தத்யன்னமும் வந்த தாம். ஏனைய ப்ரேதங்களும் இதேபோல் பொருளுள்ள போது தானஞ்செய்யாதவர்கள். இந்த ப்ரேத ராஜன் புஜிக்குமட்டும் வேண்டிய அன்னம் வருமாம். அவன் உண்ட பிறகு ஓர் பருக்கையும் வாராதாம். ஆதலால்தான் எல்லோருக்கு மன்னமளித்துப் பிறகு புஜிப்பதாகவும் அவன் கூறினன். அன்றியும் தங்களைக் குறித்து கயைசென்று ஓர் ச்ரார்த்தம் செய்யும்படி ப்ரேதராஜன் கூறினன். தர்மனும் நன்றி மறவாது ஒவ்வொரு தேசமாகச் சென்று தனது ஸாமர்த்தியத்தால் தநந்தேடி கயாச்ரார்த்தம் செய்தான். அந்த ப்ரேதங்கள் பாபசரீரத்தைவிட்டு வைச்யனை ஆசீர்வதி

த்து ஸ்வர்க்கம் சென்றன. ச்ரவண த்வாதசி விரதத்தை அனுஷ்டித்து தர்மன் கந்தர்வலோகம் சென்றான். ஆங்கு பல போகங்களைப் பெற்று மறுபிறப்பில் மானிலத்தில் மன்னனாகப் பிறந்து மட்டில்லா ஸுகங்களை அடைந்தான். அப்பிறவியிலும் விடாமல் ச்ரவண த்வாதசியை யனுஷ்டித்து சாகல நகரத்தில் அந்தணகுலத்தில் பிறந்தான். முற்பிறவியில் செய்த சில குற்றத்தால் அவன் உருவம் அழகாக இல்லை. அதைக்கண்டு அவன் மனைவி அவனிடம் அதிக ஆசைகொள்ளவில்லை. இதையுணர்ந்த பிராமணன் இராவதீ நதிக்கரைசென்று பகவானை நக்ஷத்ர புருஷ விரதத்தால் அர்ச்சித்தான். உடனே அவனது உடல் மன்மத சரீரம்போலாயிற்று. அவரே மறுபிறப்பில் சந்த்ரவம்சத்தில் புரூரவஸ் என்ற சக்ரவர்த்தியாகத் தோன்றினார்.

நக்ஷத்ரபுருஷபூஜா: பகவானது பாதாரவிந்தங்கள் மூல நக்ஷத்ரம், முழங்கால் ரோஹிணீ, தொடைகள் அச்விநீ, மல வழி பூராடம், ஜலவழி பூரம், இடை கிருத்திகை, இடையின் முன்புறம் அநூராதை, பின்புறம் அவிட்டம், தோள்கள் விசாகை, கைகள் ஹஸ்தம், புறங்கை புநர்வஸு, நகம் ஆச்லேஷா, கழுத்து கேட்டை, காதுகள் திருவோணம், உதடு பூசம், பற்கள் ஸ்வாதி, கன்னம் புநர்வஸு, மூக்கு மகம், கண்கள் மிருகசீர்ஷம், மயிர்கள் திருவாதிரை. இதில் கூறிய நக்ஷத்ரம் எந்தமாத பௌர்ணமியில் வருகிறதோ அந்த மாதம் அந்த அவயவத்தை அர்ச்சித்து நியமத்துடன் பாரணை செய்யவேண்டும். இங்ஙனம் ஸகல அங்கங்களையும் பூஜிப்போர் அழகிய ரூபத்தை அடைவர். ரம்பை இந்த பூஜையால் அழகையும், திலோத்தமை அழகிய வாக்கையும், புரூரவஸ் அழகிய காந்தியையும் அகண்ட ராஜ்யத்தையும் அடைந்தார்கள்.

ஜலோத்பவவதம்: தீர்த்தயாத்திரைக்குச் சென்ற ப்ரஹ்

லாதன் மதுதீர்த்தத்திற்கருகே சூலபாணியான கோவிந்தனை யும் சக்கரபாணியான சிவனையும் தர்சித்தார். சிவனிடம் சக்ரமிருக்கக் காரணம் யாதென நாரதர் வினவ, புலஸ்த்யர் கூறுகிறார். ஜலோத்பவனெனும் ஓர் அரக்கன் பிரும்மாவை நாடிக் கடுந்தவம் புரிந்தான். தேவாஸுரர்களால் தனக்கு மரணம் இல்லை என்று வரம் பெற்றான். ஏனைய ராக்ஷஸர் களைப்போல் தேவர்களை ஹிம்ஸித்தான். அவர்களும் சரண்ய னை சாரங்கபாணியைச் சரணமடைந்தனர். அவர் அமர ருடன் கைலாஸஞ் சென்றார். இவ்விரு மூர்த்திகளும் அவ் வரக்கனைத் தேடிச்சென்றனர். இவர்களைக் கண்டவுடன் ஜலோத்பவன் பயந்து நடுங்கி நதீ ஜலத்தில் மறைந்தான். ஹரியும் ஹரனும் அந்நதியினருகே தங்கள் உருவை மறைத் துக்கொண்டு அரக்கனை எதிர்பார்த்திருந்தனர். ஜலோத்பவன் அவர்களைக் காணாமல் ஹிமாத்ரிக்குச் சென்றான். அவனைப் பின் தொடர்ந்து இருமூர்த்திகளும் சூலத்தாலும் சக்ரத்தா லும் அவனை அடித்துக் கொன்றனர்.

விஷ்ணுவுக்கு சுதர்சநம் வந்தவகை: : வீதமன்யு என்ற வேதிய உத்தமர் தர்மசீலை என்ற பத்நியுடன் இல்லறதர் மத்தை இடைவிடாது அனுஷ்டித்து வந்தார். அவர்க ளுக்கு உபமன்யு என்றோர் குழந்தை பிறந்தான். தர்மா னுஷ்டாநத்தில் ஈடுபட்டு பொருளாசை விட்டிருந்ததால் வீதமன்யுவை வறுமை வாட்டியது. அதை அவர் ஓர் குறையாக எண்ணுவதில்லை. பதியை ஒத்தே ஸதியுமிருந் தாள். பிறந்த பாலகனுக்குப் பால்வேண்டாமா ? இவர்கள் பாலுக்கெங்கே செல்வர்? மாவை நீரில் கறைத்துப் பாலைப் போல் புகட்டிவந்தனர். இந்த தம்பதிகள் சிசுவுடன் வேறொரு வேதியர் வீட்டிற்குச் செல்லவேண்டியிருந்தது. அங்கு மிக புண்யவான்களான இவர்களை நன்கு பூஜித்து உபமன்யுவுக்கு மிக ருசியாகக் காய்ச்சிய ஆவின்பாலளித்தனர். சென்ற

விடத்தில் வேலைமுடிந்தவுடன் வேதியர் தம்மிருப்பிடம் வந்தார். அன்றிரவு வழக்கப்படி மாவாலாக்கியபால் பாலனுக்களிக்கப்பட்டது. மெய்ப்பாலின் சுவையை அறிந்த நாவு பொய்ப்பாலை ஏற்குமோ? குழந்தை அதைத் தூரே எறிந்து பாலுக்கழுதான். பெற்றோரின் வறுமையைப் பேதை பாலகனறிவதெங்ஙனம்? என்ன ஸமாதானங்கூறியும் குழந்தை விம்மி விம்மி அழுதான். அன்னை ஆதரவுடன் குழந்தையைத் தழுவி, "கண்ணே! அழாதே! பசுபதியினருளின்றி பால் கிடைக்குமோ? அன்னவனை அர்ச்சித்தால் பால் என்ன? அமிருதமே சுலபமாகும்" என்றாள். இதைக்கேட்ட உபமன்யு தனக்கு அக்கணத்திலேயே அமிருதங் கிட்டியதாக எண்ணினன். அன்னையை நோக்கி, "அம்மா, பசுபதியார்? எங்குளான்? அவனை எங்ஙனமாராதிப்பது?" என்று கேட்டான். தர்மசீலை தநயனுக்கு அதை உரைக்கலானாள்.

ஸ்ரீதாமன்: ஸ்ரீதாமன் என்றோரரக்கனிருந்தான். அவன் மிக்க பலசாலி. மஹாக்ரூரகுணமுள்ளவன். மூவுலகையும் பீடித்துவந்தான். ஸ்ரீவிஷ்ணுவின் ஸ்ரீவத்ஸத்தைக் கொள்ளை கொள்ளக் கருதினன். அச்யுதன் அதை அறிந்து ஹிமாலயஞ் சென்றார். தன்னைப்பரமசிவனாக எண்ணி ஆயிரமாண்டு ஒற்றைக்காலால் நின்று கடுந்தவம்புரிந்தார். ருத்ரன் அவரெதிற்றோன்றி ஸுதர்சநமெனும் சக்ரத்தைப் பகவானுக் களித்தார். அது ஸகல ஆயுதங்களையும்விட மிகச்சிறந்தது. பனிரண்டு மாதங்களும் ஆறு ருதுக்களும் அதில் ஆரக்கால்களாக அமைந்துள. சிஷ்டர்களை ரக்ஷிக்கவும் துஷ்டர்களைச் சிக்ஷிக்கவும் பகவானுக்களிக்கப்பட்டது. அதில் ஸகல தேவர்களது அம்சமும் அமைந்துளது. அது எப்போதும் வீணாகாது. இத்தகைய சிறந்த ஆயுதத்தைப் பெற்று விஷ்ணு அதன் திறமையைப் பரீக்ஷிக்கக் கருதினார். மஹேச்வரன் தன்னுடலில் சக்ராயுதத்தைவிட்டு அதன் பெருமையை

அறியும்படி கூறினர். அங்ஙனமே விட பகவானது உடலை மூன்றாக அது பிளந்துவிட்டது. இதைக்கண்டு நாராயணன், தனது அபசாரத்தை க்ஷமிக்கும்படி அவரடி பணிந்துபோற்றினர். பிநாகி, தனக்கு என்றுமழிவில்லை. ஹிரண்யாக்ஷன், ஸுவர்ணாக்ஷன், விச்வரூபாக்ஷன் என்று தனது மூன்று மூர்த்திகள் தோன்றவே, மாதவனுக்கு இத்தகைய எண்ணம் உதித்தது என்று கூறி, ஸுதர்மனைக் கொல்லும்படி உத்திரவிட்டார். ஒப்பற்ற இச்சக்ராயுதத்தால் சக்கரபாணி ஸுதர்மனது சிரத்தைஅநாயாஸமாக அறுத்துத்தள்ளினர். இதைக் கேட்ட உபமன்யு பகவத் பக்தியால் மோக்ஷஸாம்ராஜ்ய மெய்தினன். அந்த இடத்தையும் ப்ரஹ்லாதன் தர்சித்து கஜேந்த்ரன் மோக்ஷமடைந்தவிடம் சென்றான்.

துஸ்வப்நநாசம்: ஸுமேரு மலையினது மகனாகத்தோன்றியது த்ரிகூடகிரி. அது பாவநமான இடம். ஆங்கோர் அழகிய ஸரஸ் உண்டு. அதில் மிக்க பயங்கரமான ஓர் முதலை வஸித்துவந்தது. தாஹவிடாய் தீர்க்கவந்த ஓர் மதயானையின் காலை அம்முதலைப் பிடித்து ஜலத்திலிழுத்தது. கஜராஜன் அதைக் கரைக்கிழுத்தது. ஆயிரமாண்டு இரண்டிற்கும் சண்டை நடந்தது. தனது பலத்தை இழந்த யானை பகவானை நினைத்துத்துதித்தது. ஸ்ரீமந்நாராயணன் சக்ரத்தால் முதலையைக்கொன்றார். அது ஹூஹூ என்ற கந்தர்வ தேஹம்பெற்று தேவலோகஞ் சென்றது. கஜமும் ஓர் கந்தர்வனாகி கமலாக்ஷனைத் துதித்துச் சென்றது. இந்த சரிதத்தையும், அச்வத்தம், ஸூர்யன், கங்கை, நைமிஷாரண்யம்,ஆகிய இவைகளையும் ஸ்மரிப்பவருக்குத் துஸ்வப்நம் உண்டாகாது.

விஷ்ணுரக்ஷா. க்ஷத்ரிய வம்சத்துதித்த ஒருவன் ஸ்வதர்மத்தைச் செய்யாமல் ஸாதுக்களை ஹிம்ஸித்து வந்தான்.

அவன் செய்யாத பாபமில்லை. ஆதலின் இறந்த பின் அவன் நரகங்களை அனுபவித்து ராக்ஷஸப் பிறவியைப்பெற்ருன். ஒரு ஸமயம் தவம்செய்யும் முனிவரொருவரைப் புஜிக்க அவ ரருகே சென்ருன். அவர் ஸ்ரீமஹாவிஷ்ணுவின் மந்த்ரத்தைக் கூறி தன்னருகே அவன் வரமுடியாமல் செய்தார். இதைக் கண்டு அவர் ஸமாதியைவிட்டு வரும்வரை நாலு மாதங்கள் காத்திருந்து நிசாசரன், தூரத்திலிருந்தபடியே தனது பாபத் தை அகற்றி நற்கதி அளிக்கும்படி வேண்டினன். அவர் 'தான் ராக்ஷஸர்களுக்குஉபதேசிப்பதில்லை. உபதேசத்தில் நிபுணரான பெரியோரைச் சரணமடை' என்று கூறினுர். அன்று முதல் அரக்கன் ஸாயங்காலத்தில் ஒரே மிருகத்தை அடித்துத்தின் பது வழக்கம். ஒரு ஸமயம் பசிமிகுதியால் கனிகளை உண்டு வாழும் ஓர் பிரும்மசாரியைப் பிடித்துக்கொண்டான். அவன் தான்குருவிற்குக் கனிகளைக்கொடுத்து அவரிடம் விடை பெற்றுக்கொண்டு பின்னர் இவனுக்கு இறையாவதாகக் கூறி ஞன். ராக்ஷஸன் தான் கூறியதைச் செய்வதானல் அவரை விடுவதாக உரைத்தான். பிரும்மசாரி தன தாசார்யனுக்கும் தர்மத்திற்கும் விரோதமில்லாததாயின் எக்காரியத்தையும் செய்வதாகச் சொன்னுன். தனது பாபத்தை அகற்றும்படி தைத்யன் வேண்ட பிரும்மசாரி, தான் முக்கரணங்களாலும் ஆசார்யனுக்கு அபகாரம் செய்யாதிருந்தால் அரக்கனுக்கு அக்னிபகவான் அருள் புரியட்டும் என்ருர். உடனே அக் னியின் கருத்துக்கிசைந்து ஸரஸ்வதி எதிரிற்ருேன்றி விஷ்ணு ரக்ஷா மந்திரத்தைக் கூறினுள். ராக்ஷஸனும் இந்த மந்திரத்தைக் கொண்டு பாபத்தை அகற்றி ஸ்வர்க்கம் சென் ருன்.

பகவானது ஸாந்நித்யம். மஹாபலி விந்தியாவலி எனும் தன் பத்நியுடன் அச்வமேத யாகத்திற்குத் தீக்ஷை செய்து கொண்டான். அவ் வேள்வியில் அவனைச் சிக்ஷிக்க

பகவான் வாமநராக அதிதியினிடம் அவதரித்தார். பாரத்வாஜரிடமிருந்து வேதங்களை ஓதினர். ஒரு மாதத்திற்குள் ஸகல கலைகளையும் கற்றுணர்ந்து குருதக்ஷிணை அளித்தார். பாரத்வாஜர் பகவானைவிட்டுப்பிரிய மநமில்லாமல் அவருடனே கிளம்பினர். இடைவழியில் வாமநரை நோக்கிப் பகவான் ஸாந்நித்யமாயிருக்கும் இடங்களைக் கூற வேண்டு மென்றனர். ப்ரஹ்மா முதல் அசையாப் பொருள் வரையிலுள்ள ஒவ்வொன்றிலும் தனது ஸாந்நித்ய முளது. ஆயினும் விசேஷமானதைக் கூறுகிறேனென்று பகவான் அருள் புரிந்தார். மாநஸஸரஸில் மத்ஸ்ய ரூபமாகவும் கௌசிகியில் கூர்மமாகவும், க்ருஷ்ணையில் ஹயக்ரீவராகவும், ஹஸ்தினபுரத்தில் கோவிந்தனுகவும், யமுனையில் த்ரிவிக்ரமராகவும், பதரியில் நாராயணனுகவும், பத்ர கர்ணத்தில் ஜயேசனுகவும், வாராஹத்தில் கருடத்வஜனுகவும், மணிமதியில் சம்புவாகவும், ஹிமாசலத்தில் சூலபாணியாகவும், சக்ரதீர்த்தத்தில் அர்த்தநாரீச்வரனுகவும், குமாரதாரையில் ஸுப்ரஹ்மண்யனுகவும், மாஹிஷ்மதியில் முக்கண்ணனுகவும், ஸப்த கோதாவரத்தில் ஹாடகேச்வரனுகவும், ஸிம்ஹத்வீபத்தில் உபேந்திரனுகவும், பாதாளத்தில் கபிலராகவும், பூமியில் கோகநதேசனுகவும், புவர்லோகத்தில் கருடனுகவும், ஸ்வர்லோகத்தில் விஷ்ணுவாகவும், மஹர்லோகத்தில் அகஸ்த்யராகவும், ஜநோலோகத்தில் கபிலராகவும், தபோலோகத்தில் வேதமாகவும், ஸத்யலோகத்தில் பிரும்மாவாகவும், ஜம்பூத்வீபத்தில் நான்குகைகளுள்ளவனுகவும், குசத்வீபத்தில் குசேசயனுகவும் ப்லக்ஷத்வீபத்தில் கருடவாஹநனுகவும்,க்ரௌஞ்சத்வீபத்தில் பத்மநாபனுகவும், சால்மலத்வீபத்தில் விருஷபத்வஜனுகவும், சாகத்வீபத்தில் ஸஹஸ்ராக்ஷனுகவும், புஷ்கரத்வீபத்தில் வாமநராகவும், தானிருப்பதாக பகவான் கூறினர். இங்ஙனம் கூறிக்கொண்டே மஹர்ஷிகளுடன் வாமநர் பலியி

னது யாகசாலைக்கருகே வந்தார். அவர் ஒவ்வொரு அடியை வைக்கும்பொழுதும் அவநி கடகடவென்று ஆடியது. பலி சுக்ரரை அடுத்து இதற்கென்ன காரணமென வினவினன். அவர் வாமனரது வரவைக் கூறினர். ஆனால் தான் அவரை எப்படி வரவேற்கவேண்டும்? எதை அவருக் களிக்கவேண்டு மென்று புரோஹிதரைப் பலி வினவினன். வேத விதிக்கு மாறாக, தேவருக்கு எதிராக பலி, யாகம் செய்வதால் அங்கு வரும் அச்சுதனை நல்வரவேற்றுப் பேசவேண்டுமே யல்லாது அற்பமான புல்லைக்கூட அவருக் களிக்கலாகாது. அளித்தால் அதை வ்யாஜமாகக்கொண்டு பலியினிடமிருந்து ராஜ்யத்தை அபஹரித்து அமரேந்த்ரனுக் களிப்பர் என்றார். இல்லையென்று கூறாது எவருக்கும் இஷ்டத்தை அளிப்பது தனது இயற்கை. இது முப்பிறவியிலிருந்தே தொடர்ந்து வரும் குணமாதலின் அதை மாற்ற இயலாது என்று கூறி இதற்கு உதாஹரணமாக ஓர் சரிதத்தைச் சுக்ரருக்குப் பலி எடுத்துரைத்தார்.

கோசகார புத்ரன். முத்கல முனிவருக்குக் கோசகாரன் என்றோர் புத்ரன் பிறந்தான். அவர் வாத்ஸ்யாயனரது புத்ரியான தர்மிஷ்டை என்பவளை மணந்தார். இருவருமாக இல்லற தர்மத்தை இடைவிடாது நன்கு அனுஷ்டித்து வந்தனர். இவர்களுக்கு ஓர் குழந்தை உண்டாயிற்று. அது அழவுமில்லை சிரிக்கவுமில்லை. அசையவுமில்லை, கண்ணைத் திறந்து பார்க்கவுமில்லை. இத்தகைய பிள்ளை யிருப்பதைவிட புத்ரனில்லாம லிருப்பதே மேல் என்று தாய் கருதினள். ஆறு நாள் பொருத்துப் பார்த்தும் அதேபோலிருந்ததால் அக்குழந்தையை வாயலில் எறிந்துவிட்டாள். சூர்ப்பாக்ஷி எனும் ராக்ஷஸி தற்செயலாக அங்குவந்தாள். இளைத்திருக்கும் தன் குழந்தையை அங்கே விட்டுவிட்டு வாயலிலிருந்த அக்குழந்தையை எடுத்துச் சென்றாள். சாலோதரம் என்ற இடத்

திலுள்ள கடோதரன் எனும் தன் கணவனிடம் இதை அளி த்து இருவரும் இன்பமாக இதைப் புஜிக்கலாம் என்றாள். கண்ணில்லா கடோதரன் கையால் அக்குழவியைத் தொட் டுப்பார்த்து இதை எங்கிருந்து கொண்டுவந்தாய்? என்று கேட்டான். அவள் உண்மையை உரைக்க அவன் அது ஞானியான சிசுவானதால் அது தங்களைச் சபித்துவிடுமெ ன்று கூறி, வேறோர் குழந்தையைக் கொண்டு வரும்படி சொன்னான். இதற்குள் கோசகாரானது வீட்டுவாயலில்விட்ட ராக்ஷஸக்குழந்தை வீரிட்டு அழுதது. அதைக்கேட்ட அன்னை வாயலில் வந்து ராக்ஷஸ குழந்தையைக் கண்டாள். கணவனி டம் அதைவிரைந்து கூறினாள். அவள் அதனருகே வந்து தர்ப்பையால் அதைச் சுற்றிக் கோடுபோட்டு எதோ மந்தர த்தை ஜபித்தார். இதற்குள் அந்த ராக்ஷஸி பிராமணக் குழந் தையைக் கொண்டுவந்து வாயலில்விட்டு தன் குழந்தை யரு கே சென்றாள். முநிவர்செய்த மந்த்ரஜபத்தால் அதைத் தொடமுடியவில்லை. வந்தவழியே சென்றாள். முநிவர் தன் புதல்வனுக்கு நிசாகரனென்றும்,ராக்ஷஸ குழந்தைக்குத் திவா கரனென்றும், நாமமிட்டார். கபிலையெனும் தேனுவின் தயி ரைக் கொண்டு இரண்டு குழந்தைகளையும் வளர்த்துவந்தார். ஏழாவது வயதுவந்ததும் உபநயநம் செய்து வைத்தார். வே தமும் ஓதி வைத்தார். நிசாகரன் வாயைத் திறவாதது கண்டு வருந்தினார். அந்த துக்கத்தைப் பொறுக்காது அவனை ஓர் பாழுங்கிணற்றில் தள்ளி பாறையை மூடினார். அங்கு ஓர் நெல்லிமரத்தில் இனிய கனிகள் காணப்பட்டன. அதை உண்டு பத்தாண்டு நிசாகரன் ஜீவித்திருந்தான். அவனது தாய் ஒருநாள் அக்கிணற்றருகே வந்து யார் இக்கிணற்றை மூடியது? என்று தானே பேசிக் கொண்டாள். கிணற்றி லுள்ள நிசாகரன், அன்னையே! என் தந்தையே இதை மூடியவர் என்றான். எனது குமாரன் பேசாமடந்தை; ஆத

வின் அவனை என் கணவன் விரட்டி விட்டார். என்னை அன்னை என்றழைக்கும் நீ யார்? என்றாள். நிசாகரன் தானே அவர்களது புதல்வனென்றுரைக்க அவள் கிணற்றி லிருந்து அவனை வெளியேற்றிக் கணவனிடமழைத்து சென்றாள். இதுவரை ஊமை போலிருந்து இப்போது பேசுங் காரணம் யாதென பெற்றோர் வினவ குழந்தை கூறுகிறான்.

விருஷாகபி என்ற தேவனுக்கு யான் முற்பிறவியில் புதல்வனாகப் பிறந்தேன். என் தாய் பெயர் மாலா. ஸகல கலைகளையும் யான் கற்றுணர்ந்தேன். என்னைவிடக் கற்றவ னில்லை என்ற கர்வம் என்னைத் தழுவியது. பின்னர் மோக முண்டாகி விவேகமகன்றது. ஸதாசாரத்தைவிட்டு துரா சாரங்களைக் கைகொண்டேன். பிறர் மனைவிகளிடம் என் மநம் சென்றது. அவர்களை வச்யம் செய்யப் பிறர் பொருளைக் களவாடினேன். இங்ஙனம் ஸகல பாபங்களுக்கும் உறைவிட மானேன். இத்துறையில் புகுந்தோருக்கேற்றபடி துர்மரணத் தாலிறந்தேன். பலகாலம் ரௌரவம் முதலிய நரகங்களில் துயருற்றேன். எனது பாபச் செயலுக்கேற்றபடி புலியாய்ப் பிறந்தேன். என்னைப் பிடித்துக் கூண்டிலடைத்து ஓர் அரச னது கண்காக்ஷி சாலைக்குக்கொண்டு சென்றனர். எனது பயங்கரமான உருவத்தையும் என் சேஷ்டைகளையுங் கண்டு மன்னன் மகிழ்வான். அரண்மனையிலேயே யான் வஸித்து வந் தேன். ஒருநாள் வேட்டையாட வேந்தன் வனஞ் சென்றான். கூண்டிலுள்ள என்னருகே அரசன் மனைவி வந்தாள். அவள் பெயர் அஜிதா. அவள் அழகிற் சிறந்தவள். அவளைக் கண்டவுடன் எனக்குக் காமவிகாரமுண்டாயிற்று. மாதரசே! ரதிபோன்ற உனக்குக் காமசாஸ்தரத்தின் கரை கண்ட நானன்றோ தக்க பதி? கூண்டிலிருந்து என்னை விடுவித்து உன்னைக் கட்டித் தழுவும்படி செய்யாயோ? என்றேன். இச் சொற்கள் அஜிதைக்குக் காம நோயையும் விந்தையையும்

உண்டுபண்ணிற்று. பகலில் பலர் நடமாடுமிங்கே இருவருங் கூடுவது எங்ஙனம்? பொறுத்திருந்தால் இன்றிரவே இன்பம் பெறலாமென்றாள். எவ்வகையிலும் எனக்குக் கிட்டாத இப் பொருள் கிடைக்கும் என்ற எண்ணம் பகல் நீங்கி இரவு வரும்வரை என்னை பொறுக்க முடியாமல் செய்தது. இக் கணமே கதவைத் திறந்து என் காதலைப் பூர்த்தி செய்யா விடில் நீ ஓர் ஜீவனைக் கொன்றவளாவாய்! அன்றியும் எங்கு மனுபவிக்காத இன்பத்தை நீ இழப்பாய்! என்றேன். அஜி தை கூண்டின் கதவைத் திறந்தாள். அவள் மேல் அன் புடன் பாய்ந்து சிற்றின்பத்தை அனுபவித்துக் கொண்டிருந் தேன். அரசனது காவலாளிகள் இதைக்கண்டு விட்டனர். புலி மஹிஷியைக் கொல்கிறதெனக் கருதி கூறிய ஆயுதங் களால் என்னைக் கொன்றனர். பரஸ்திரீகமந பாபத்தால் பல் லாயிரமாண்டுகள் நரகயாதனையைப் பெற்றேன். அக்நிவேச்ய ரெனும் அந்தணரில்லத்தே ஓர் கழுதையாகப் பிறந்தேன். அவருக்குப் பலமனைவிகளுண்டு. விமதி எனும் பத்நீ தனது பிறந்த வீடான நவராஷ்ட்ரம் என்ற நகரத்திற்குச் செல்ல விரும்பினாள். அவள் பதி என்மேல் விமதியை ஏற்றி அவ ளுக்குத் துணையாக சிஷ்யர்களையும் சேர்த்து ஊருக்கனுப்பி னார். நடுவழியில் நதியொன்றோட விமதி அதில் இறங்கி நீராடினாள். நனைந்த துணியுடனுள்ள அம்மாதைக் கண்ட வுடன் என் மனம் காமன்கணைக் கிலக்கானது. விரை வாகச் சென்று விமதியின் மீது விழுந்தேன். அருகி லுள்ள மாணவர் கல்லையும் மண் கட்டிகளையும் எறிந்து என்னை யமனிடம் அனுப்பினர். அங்கு பல நரகங்களை அனுபவித்து ஓர் கிளியாகப் பிறந்தேன். சந்த்ராவளீ எனும் வைச்ய கன்யகை என்னை அன்போடு கூண்டி லடைத்து வளர்த்துவந்தாள். இனிய கனிகளை அளித்து அழகிய சொற்களை அவள் கற்பிப்பாள். எனது சொல்லைக்

கேட்டு மகிழ்வாள். ஒரு ஸமயம் தன் தோளின்மீது அவள் என்னை வைத்து விளையாடினாள். யான் அவளது அழகிய ஸ்தனங்களைக் கண்டு மோஹங்கொண்டேன். தீயதொழிலைச் செய்யவும் துணிந்தேன். அவள் என்னை அடிக்க அவளிடம் பயந்து ஓடினேன். ஆங்கு ஓர் குரங்கு என்னைப் பிடித்துக் கொன்றது. யமலோகம் சென்று பல துன்பங்களை அனுபவித்து ஓர் சண்டாளனது வீட்டிலே காளையாகப் பிறந்தேன். என் மீதேறி உட்கார்ந்து கொண்டு சண்டாளனது மனைவி பாடினாள். அதைக் கேட்டவுடன் முன் வாஸனையால் காமவிகார முண்டானது. அவளைக் கீழேதள்ளி துர்மார்க்கத்திற்காரம்பித்தேன். அருகிற் சென்ற சண்டாளன் சினங்கொண்டான். வாயைக் கட்டி மூச்சுவிட முடியாமல் என்னை கொன்றான். வழக்கப்படி நரகயாதனைகளைப் பெற்றேன். இச்சமயம் உன் புத்ரனாகப் பிறந்தேன். எனது முற்பிறவிகளெல்லாம் நினைவுக்கு வந்தன. ஆடி ஓடி விளையாடி உம்முடன் பேசி என் தந்தை தாய் என்று ஆசை கொள்வதும் இல்லறத்திலீடுபடுவதும் துன்பக்கடலில் கொண்டுவிடும் எனக்கருதினேன். ஆதலால் இதுவரை வாய் திறவாதிருந்தேன். பத்தாண்டு பாழுங் கிணற்றில் நெல்லிக் கனியையுண்டு பரமனை நாடித் தவம் செய்தேன். இனி பூர்வ வாஸனையால் வரும் காமம் என்னை அணுகாதென்று கண்டேன். வெளியிற் சென்று பெரியோரை அடுத்துப் பேரின்பம் பெற ஆசைகொண்டேன். திவாகரனைக் கொண்டு புத்ரனாலுண்டாகும் இன்பத்தைப் பெறுங்கள். பெற்றவர் மனங் குளிர்வதைவிட மற்றோர் தவமில்லை; ஆயினும் இத்துணை ஜன்மமெடுத்துக் காமவலையில் சிக்கிப்பட்ட துன்பம் போதும்! இனி எனக்கு தந்தையும் வேண்டாம்! தாயும் வேண்டாம்!! பதரிகாச்ரமம் செல்கிறேன். எனக்கு விடையளியுங்கள் என்று கூறி நிசாகரன் பெற்றோரைப் பணிந்து சென்றான்.

த்ரிவிக்ரமன்:—நிசாகரனது பூர்வ வாஸனை எவ்வளவு பிறப்பில் தொடர்ந்து வந்தது பாருங்கள்! அதேபோல் யான் எவ்வளவு ஜன்மங்களில் தாநம் செய்தேனோ அறியேன். இவ் வாஸனை என்னை விடாது. வாமநர் வந்து எதைக்கேட்பினும் இல்லையெனுது தந்தே தீருவேன் என்று பலி, சுக்ராரிடமுரைத் தான். இதற்குள் வாமநரும் வந்து விட்டார். அவரை நன்கு வரவேற்றுப் பூஜித்து அவர் கோரியபடி மூன்றடி பூமியைப் பலி தாநம் செய்தான். பகவான் த்ரிவிக்ரமராகத் தோன்றி னார். பூமி பாதமாகவும் ஆகாயம் கணிக்காலாகவும் ஸத்ய லோகமும் தபோலோகமும் முழங்கால்களாகவும், மேருவும் மந்திரமும் தொடைகளாகவும் விச்வே தேவர்கள் இடுப்பாக வும் மன்மதன் ஆண் குறியாகவும் ப்ரஹ்மா விருஷணமாக வும் ஏழு கடலும் புவனங்களும் வயிறுகவும், வேதங்கள் மடிப்பாகவும் வஸுக்கள் முதுகாகவும், ஆயிரம் லக்ஷ்மிகள் மார்பாகவும் சந்த்ரன் மனதாகவும் அக்நியும் பிராமணனும் முகமாகவும் நாலு புருஷார்த்தங்களும் பற்களாகவும் ஸரஸ்வதி நாக்காகவும் சந்த்ரஸூர்யர்கள் கண்களாகவும் நக்ஷத்ரங்கள் ரோமகூபங்களாகவு மமைந்தன. முதலடியால் பகவான் சரா சரங்களுடன் ஜகத்தை அளந்தார். இரண்டாவதால் ஸ்வர்க் கம்முதல் பிரும்மாண்டபித்தி (சுவர்) வரையிலுள்ள விடத்தை அளந்தார். பகவானது திருவடி பட்டவுடன் பிரும்மாண்ட பித்தி உடைய அங்கிருந்து ஜலம் பெருகிற்று. அது விஷ்ணு பாதஸ்பர்சத்தால் வந்ததாதலால் விஷ்ணுபதீ என்றழைக்கப் படும் கங்கையானது. மூன்றுவதடிக்கு இட மெங்கே என்று த்ரிவிக்ரமன் வினவ, பலியின் புதல்வனை பாணன் பதிலுரைத்தான். பகவன்! தங்களது ஓரடிக்குக்கூடப்போ

---

இக்கதை இரண்டாம் முறையாக வர்ணிக்கப்படுகிறது. ஆங்குள்ள விசேஷத்தை மாத்திரம் இங்கு கூறுவாம்.

தாதபடி ஏன் தாங்கள் பூமியைச் சிறியதாகப் படைத்தீர்? விசாலமாகப் படைத்திருந்தால் வேண்டிய அளவு பெற்றுக் கொள்ளலாமன்றோ'' என்றான். பகவான் பாணனைப் பார்த்து உன் தந்தை எனது நிஜஸ்வரூபத்தை அறிந்து எங்ஙனம் மூன்றடி கொடுக்கத் துணிந்தான்? ஓரடியால் யான் பதினன்கு லோகங்களையும் அளந்து விடுவேன். உன் தந்தைமீது கருணைகொண்டு பூமியை ஓரடியாலும் மற்றதை மற்றோரடியாலுமளந்தேன். என்று கூறி பலியின் தலைமீது மூன்றாவதடியை வைத்தார். அவனைப் பாதாலஞ் சென்று முறைதவறி செய்யும் நற்காரியங்களை ஆஹாரமாகக் கொள்ளென்றார். அன்றியும் தீபப்ரதானம் என்றோர் பண்டிகை பலியின் பெயரால் வழங்குமென்று ஆசீர்வதித்தார். புஷ்பம்போல் உதிக்கும் தீபத்தைக்கொண்டு மஹாபலி பெயரால் நேத்ரானந்தமான உத்ஸவம் நம் தேசத்தில் அன்றுமுதல்கார்த்தியாகக் கொண்டாடப்படுகிறது.

பாதாலஞ் சென்ற பலி விச்வகர்மனை அழைத்து ஆங்கோர் அழகிய அரண்மனையைப் படைத்தான். ஆங்கு பல போகங்களை அனுபவித்தான். பகவானை மறந்தான். உடனே பகவானது ஸுதர்சநம் என்ற சக்ரம் அவனருகில் வந்தது. அதைக்கண்டு சத்ருவென்றெண்ணிக் கையில் கத்தியை எடுத்தான். பலியினது மனைவி ஸந்த்யாவளி அவரைப் பணிந்து நாத! நமது குலதைவமான முகுந்தனது அஸ்த்ரமன்றோ அது. நம்மை நல்வழிபடுத்தவே அது தோன்றியது என்றாள். உடனே பலி ஸுதர்சநத்தை அர்ச்சித்துத் துதித்தான். அது ராக்ஷஸர்களது தேஜஸை எடுத்துச் சென்றது. பலி ப்ரஹ்லாதனை நினைக்க அவரும் தீர்த்த யாத்ரையை முடித்துக் கொண்டு பாதாலஞ் சென்றார். அவரைப் பணிந்து பலி, ஸம்ஸாரத்திலுள்ளோர் கரையேறும் வழியைக் கூறும்படி வேண்டினான். ப்ரஹ்லாதர் உரைத்தார். பகவத் பக்தியைவிட

சிறந்த ஸாதநம் உலகில் வேறில்லை. நாவினுல் பலமுறை அவர் திருநாமங்களை கூறுபவனே நாவுபடைத்தவன். அச்யுதனது ஆராதநத்திலீடுபடும் கைகளே கரங்கள். பத்மநாபனது சரிதத்தைக் கேட்கும் காதுகளே செவிகள். காலையில் எழுந்ததும் எவருள்ளத்தில் எம்பெருமான் திருவடியும் நாவில் பகவந்நாமமும் உளதோ அவனருகே யமன் வர அஞ்சுவான். பக்தி இல்லாதவர் பிழைத்திருந்தும் இறந்தவராவார். கடலிலுள்ள ரத்நங்களைக் கணக்கிடலாம். கருணைக்கடலான கமலாக்ஷனது குணங்கள் கணக்கிலடங்கா. வாக்கு மநஸ்காயமென்ற முக்கரணங்களையும் எவன் புருஷோத்தமனிடம் அர்ப்பணம் செய்கிருனே அவன் ஸம்ஸாரத்தைக் கண்டு அஞ்ச வேண்டாம். பகவத் கதாமிருதத்தைப் பருகுவோர் தாய்ப்பாலை அருந்த வேண்டுவதில்லை. பக்தியில்லாதவன் செய்யும் கர்மங்களனைத்தும் வீணுகும். ஹ்ருதயகமலத்திலே புண்டரீகாக்ஷனை வைத்து அர்ச்சிப்போருக்கு எங்கும் பயமில்லை; அபஜயமில்லை; ரோகமுமில்லை. மூன்று ஸந்தியிலும் பகவானை த்யாநம் செய்வோர் உபவாஸபயனைப் பெறுவர். எக்காரியத்தைத் துவக்கும்போதும் பகவானை ஸ்மரித்து அக்காரியத்தை அவனுக்கே அர்ப்பணம் செய்வோர் பிறப்பிறப்பெனும் கடலைக் கடப்பர். த்யாநம், ஸ்மரணம், நாமகீர்த்தநம், சரித்ரச்ரவணம் ஆகிய இவைகளை விட உயர்ந்த தர்மமில்லை. விஷ்ணுவுக்கு ப்ரியமான ஸ்தானம் ஸாளக்ராமமும் பிராமணர் சரீரமுமாம். ஆதலால் அறிவுள்ளவனே இல்லாதவனே பிராமணனை அவமதிக்காதே.

தாநம். பகவானை நினைத்து ஸத்பாத்ரத்தில் கோ பூமி வஸ்த்ரம் அன்னம் ஸ்வர்ணம் இவைகளை அளிப்பது சிறந்த தர்மமாகும். மாசிமாதத்தில் திலதாநமும், விறகு தாநமும் பங்குனியில் தான்யம் கிருஷ்ணஜிநம் வஸ்த்ரம் ஆகிய இவைகளை அளிப்பது உத்தமம். சித்திரையில் விசித்ர வஸ்த்ரமும்

படுக்கை ஆஸநம் முதலியவைகளையும் அளித்தால் பகவான் ஸந்தோஷமடைகிறார். வையாசியில் வாஸனை வஸ்துக்களையும், ஜல்பாத்ரம் தேனு விசிறி முதலியவைகளையும் அளித்தால் த்ரிவிக்ரமர் ஸந்தோஷிப்பார். ஆனியில் உப்பு நெல்லிக் கனி குடை செருப்பு முதலியவைகளை அளித்தால் வாமநர் அருள் பெருகும். ஆடியில் வெல்லம் விருஷபம் முதலியவைகளையும் ஆவணியில் பாயஸம் தேன் தயிர் முதலியவைகளையும், புரட்டாசியில் தாம்ரம் இரும்பு முதலியவைகளையும், ஐப்பிசியில் வீடு குதிரை முதலியவைகளையும், கார்த்திகை மார்கழி தை மாதங்களில் அவரவருக்கும் ப்ரியமான பொருள்களையும் தாநம் செய்தால் பரமாத்மா ஸந்தோஷமடைகிறார். பகவானுக்கு ஆலயங் கட்டுவதும், ஆலயத்தைப் பெருக்கி மொழுகி அலங்கரிப்பதும் உத்ஸவம் செய்து வைப்பதும், பகவானுக்குத்வஜம் பல்லக்கு வாஹநம் முதலியவைகளைச் செய்து வைப்பதும் உத்தமமான தர்மம். இங்ஙனம் ப்ரஹ்லாதன்கூற பலி விந்த்யாவளியுடன் கூடி ஸகல தாநங்களையும் செய்தான். பாதாலத்தில் மஹா விஷ்ணுவுக்கோர் அழகிய ஆலயங்கட்டி அன்றன்றும் அவரை அர்ச்சித்து வந்தான். இங்ஙனம் பகவத் பக்தியிலீடுபட்டவரும் இந்த வாமநரது சரிதத்தைப் பக்தியுடன் கேட்டுத் தனது சக்திக்கேற்றபடி பௌராணிகரைப் பூஜிப்பவரும் ரோகத்திற்காளாக மாட்டார்கள்; வைகுண்டத்தில் வஸிப்பர். என்று புலஸ்த்யர் நாரதருக்குரைத்தார். அதைக் கேட்ட நாரதர் பகவானிடத்தில் அந்தரங்க பக்திகொண்டு அவர் திருநாமங்களைப் பாடிச் சென்றார். இங்ஙனம் இச் சரிதத்தைக் கேட்பவருக்கு ஸகல பாக்யமுமுண்டாகும்.

சுபம்.

ஸ்ரீ வாமந புராணம் முற்றிற்று.